L:524:6 (10)
M99
115094

உ.

சிவராமஜெயம்.

# MANUAL

OF

# PARVATHI PARANIAM

OR

# VISHA VAITHIA CHINTAMANI.

# பார்வதிபரணியம்

வென்னும்

# விஷவயித்ய சிந்தாமணி.

இஃது

சிறுமணவூர்

## முனிசாமி முதலியார்

அவர்களாலியற்றப்பட்டு

மேற்படியார் தமது

## சிவகாமி விலாச

அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தனர்.

1899

*Registered CopyRight.*

இதன் விலை அணா 12.

L:524:6
H99

118094

1973
615.942

22

உ

சிவமயம்ஜெயம்.

# ரிஜிஸ்ட்டர் காபிறைட்

## விளம்பரம்.

(*)

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில் விஷங்களுக்குண்டான சிகிச்சையும் அதுகளின் பூர்வோத்திரமும் இதுவரையில் யாரும் இவ்வளவு விபரமாகவும் பெருநூலாகவும் அச்சிடாதிருந்தபடியால் விஷ சிகிச்சையானது பலஜனங்களுக்கும் அத்தியாவஸ்யமாய் வேண்டியதுபற்றி வெகுகாலமிரா யாசையெடுத்து அனேகம் பெரியோர்களாலும் அனேக விஷயங்களை கிரயிக்கும் சத்தியாருடம், சித்தாருடம், நாகாருடம், விஷசங்கிரகஆருடம், ஜீவரட்சாமிர்தம் முதலிய நூற்களுடன் இன்னும் சில கையேட்டுப்பிரிதிகளையும் சேகரித்து அடியிற் கையொப்பமிட்டிருக்கும் சிறுமணலூர் - முனிசாமிமுதலியாராகிய என்னால் மொழிபெயர்த்தெழுதி விஷவைத்திய சிந்தாமணி என்னும் பெயரமைத்து எனது சிவகாமிவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு கனம் பொருந்திய கெவர்ன்மெண்டார் அவர்களது சட்டப்பிரகாரம் ரிஜிஸ்ட்டர் காப்பிறைட் செய்யப்பட்டிருக்கிறபடியால் இந்நூலை என்னுடைய அனுமதியில்லாமல் யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

1899௵ ஜுன்மீ 15உ

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்தலைவர்
சிறுமணலூர் - முனிசாமிமுதலியார்
பெரம்பூர்மோன்றி மதராஸ்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 19 | பானது | மானது |
| 11 | 1 | விகம் | வீகம் |
| 12 | 18 | மூட்டை | முட்டை |
| 15 | 22 | மீன | மீன் |
| -- | 27 | நாலில் | நால் |
| 16 | 10 | இன்று | தின்று |
| -- | 11 | ரத்தாது | ரத்ததாது |
| 20 | 23 | ரானரது | ரானது |
| 21 | 16 | மிதத்தாலும் | மிதித்தாலும் |
| 23 | 14 | மூன்ன | முன்ன |
| 24 | 25 | முகமும்நகமும் | முகமும்நகமும் |
| 26 | 18 | கடை | நடை |
| 29 | 16 | கோக்குதல் | நோக்குதல் |
| 31 | 5 | முதுகிலுங் | முதுகிலும் |
| 41 | 6 | [illegible] | [illegible] |
| 43 | 12 | யெரிச்சலும் | பெரிச்சலும் |
| 45 | 7 | முருச்சிலே | முருக்கிலே |
| -- | 22 | மூஷ்கம் | மூஷிகம் |
| 48 | 3 | மிதாவது | மீதாவது |
| -- | 6 | முர்ச்சை | மூர்ச்சை |
| 50 | 8 | சிலிசிலிக்கும் | சிலிசிலித்கும் |
| 60 | 14 | 2-னையும் | 3-னையும் |
| 61 | 10 | வெர் | வேர் |
| 64 | 1 | மாத்திசெய்து | மாத்திரைசெய்து |
| -- | 25 | அடித்து | அடைத்து |
| 69 | 20 | சபநிடை | சமநிடை |
| 77 | 5 | பண்ணிற் | புண்ணிற் |
| 78 | 3 | கட்குர் | கட்டும் |
| -- | 8 | விடைக்கும் | விரைக்கும் |
| 88 | 13 | முலவேர் | மூலவேர் |
| 101 | 12 | காலங்கண்ணி | காசலாங்கண்ணி |
| 107 | 7 | பாத்திரை | மாத்திரை |
| -- | 9 | டட்டது | பட்டது |
| 112 | 25 | ஜீசாவில் | சீஷாவில் |

# விஷவயித்திய சிந்தாமணி அகராதி.


| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| நான்முகம் | 9 | கௌதேரசர்ப்பம் | 25 |
| சர்ப்பங்களின்பெயர் | 10 | நிர்விஷசர்ப்பம் | ,, |
| ஜாதிபேதம் | ,, | நிர்விஷலட்சணம் | 26 |
| உத்தமஜாதிசர்ப்பஉற்பத்தி | 12 | வைகாருசசர்ப்பம் | ,, |
| பலஜாதிசர்ப்பஉற்பத்தி | 13 | ஆண்சர்ப்பம் | ,, |
| பிரம்மஜாதிசர்ப்பம் | 14 | பெண்சர்ப்பம் | ,, |
| க்ஷத்திரியஜாதிசர்ப்பம் | ,, | அலிசர்ப்பம் | ,, |
| வைசியஜாதிசர்ப்பம் | 15 | குலட்டிசர்ப்பம் | ,, |
| சூத்திரஜாதிசர்ப்பம் | ,, | பாலியசர்ப்பம் | 27 |
| பற்களின்பெயர் | 16 | எவ்வனசர்ப்பம் | ,, |
| விஷநீர் அடையாளம் | ,, | விருத்தசர்ப்பம் | ,, |
| பல்லின் அடையாளம் | ,, | கெர்ப்பசர்ப்பம் | ,, |
| கடிகணக்கு | 17 | சூதிகாசர்ப்பம் | ,, |
| விஷத்தனாகரு | ,, | கோனசசர்ப்பம் | ,, |
| மீளாக்கடி | ,, | வழிச்சர்ப்பம் | 28 |
| தாடைப்பல்லின் அடையாளம் | ,, | விஷநிருத்திலட்சணம் | ,, |
| கடியின் அசாத்தியநிதானம் | 18 | சர்ப்பவிஷவேகம் | ,, |
| கடிமணத்தின்நிதானம் | ,, | கருநாகவிஷம் | 29 |
| மரணஸ்தானம் | ,, | செந்நாகவிஷம் | ,, |
| திதிபேதம் | ,, | விரியன்பேதம் | 30 |
| நட்சத்திரபேதம் | ,, | பருவிரியன்விஷம் | ,, |
| சர்ப்பந்தீண்டப்படா அசாத்திய இடங்கள் | 19 | ரத்தவிரியன்விஷம் | ,, |
| | | வழலைவிஷம் | ,, |
| கடித்தசர்ப்பக்குறி | ,, | கருவழலைவிஷம் | ,, |
| அம்பவிஷம் | ,, | சூர்க்கன்விஷம் | 31 |
| கடியாக்கடி | 20 | மயக்குசர்ப்பம் | ,, |
| விஷபரிட்சை | ,, | முருக்குசர்ப்பம் | ,, |
| உயிர்நிலை | ,, | சாரைப்பாம்பு | ,, |
| உயிர்பரிட்சை | 21 | புடையன்பாம்பு | 32 |
| கடிப்பதற்குக்காரணம் | ,, | மண்ணுளிபாம்பு | ,, |
| சர்ப்பசத்துருவகை | ,, | காலியாங்குட்டி | ,, |
| பஞ்சஜாதிசர்ப்பபேதம் | 22 | கண்குத்திப்பாம்பு | ,, |
| பௌமசர்ப்பம் | ,, | வெண்ணறுக்கைதப்பாம்பு | ,, |
| தருவீகாசர்ப்பம் | ,, | கில்லறைவிஷவருப்பு | 33 |
| மண்டலிசர்ப்பம் | 23 | தேளன் | ,, |
| ராஜகந்தசர்ப்பம் | 24 | தவளை | ,, |

42




| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம் |
|---|---|---|---|
| அடவிா | ,, | பிரத்தியேகச்சிலந்தி | 0 |
| வீட்டுப்பல்லி | ,, | சிலந்திகடிக்கும்ஸ்தானம் | 0 |
| காட்டுமேசகம் | 34 | கடிகாலவிதானம் | 40 |
| மட்சிகா | ,, | சிலந்தியின்அஷ்டபேதம் | 41 |
| மலைப்பீமேகா | ,, | சிலந்தியின்சுவாசம் | 0 |
| சிலந்தியின்பேதம் | ,, | சிலந்தியின்பல் | 0 |
| வாதசிலந்திபொது | ,, | சிலந்தியின்மலம் | 42 |
| பித்தசிலந்திவிஷம் | 35 | சிலந்தியின்மூத்திரம் | 0 |
| குமுதச்சிலந்திவிஷம் | ,, | சிலந்தியின்சுக்கிலம் | 0 |
| ரத்தசிலந்திவிஷம் | ,, | சிலந்தியின்வாய் | ,, |
| சித்திரச்சிலந்திவிஷம் | ,, | சிலந்தியின்வாய்நீர் | ,, |
| சந்தானிகச்சிலந்தி | ,, | சிலந்தியின்ஸ்பரிசம் | ,, |
| மேசச்சிலந்திவிஷம் | ,, | சிலந்திவிஷத்தின்அவுஷதம் | ,, |
| பித்தசிலந்திபொதுகுணம் | 36 | [illegible] | 43 |
| கபிலாசிலந்திவிஷம் | ,, | நாட்டுமரவட்டை | 0 |
| அக்கினிசிலந்திவிஷம் | ,, | விருச்சிகஉற்பத்தி | 44 |
| பீதச்சிலந்திவிஷம் | ,, | தேளின்பேதம் | 0 |
| பதுமச்சிலந்திவிஷம் | ,, | உச்சிலிங்கத்தேள் | 0 |
| மூத்திரச்சிலந்திவிஷம் | ,, | வாதத்தேள் | 0 |
| சுவேதச்சிலந்திவிஷம் | 37 | பித்தத்தேள் | 0 |
| கருப்புச்சிலந்திவிஷம் | ,, | சிலேத்துமத்தேள் | 45 |
| {சிலேட்டும சிலந்தியின் பொதுகுணம்.} | | கட்டுவாய்காலி | 0 |
| | | மூஷிகபேதம் | 0 |
| பாண்டுசிலந்தி | 37 | எலிவகுப்பு | 46 |
| ரத்தபாண்டுசிலந்தி | ,, | லாலனஎலி | 0 |
| வண்டுசிலந்தி | ,, | சபளஎலி | 0 |
| பிங்கலச்சிலந்தி | ,, | புண்டரஎலி | 0 |
| திமிர்மண்டலச்சிலந்தி | 38 | ஹரிதஎலி | 0 |
| அர்க்கந்தசிலந்தி | ,, | சிகுரஎலி | 0 |
| சித்திரமண்டலிச்சிலந்தி | ,, | அசிதஎலி | 0 |
| காகச்சிலந்தி | ,, | கசாயதந்தஎலி | 0 |
| அக்கினிவாதச்சிலந்தி | ,, | குணகஎலி | 47 |
| லாஜவர்ணசிலந்தி | 39 | கோகிலஎலி | 0 |
| வைதேகச்சிலந்தி | ,, | கபிலஎலி | 0 |
| ஜாலமாலினிச்சிலந்தி | ,, | கிருஷ்ணஎலி | 0 |
| மாலாகுணச்சிலந்தி | ,, | ரசாலஎலி | 0 |
| சுவர்சிலந்தி | ,, | கர்கரிஎலி | 48 |





| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| எலிசுக்கிலம் | 48 | அரணை | 57 |
| அசாத்தியஎலி | 0 | சாருண்ணி | ,, |
| எலிவிஷசிகிச்சை | 0 | எலிபேதம் | ,, |
| {சகலஎலிக்கும்வேறு பிரயோகம்} | | ஆவுஷதவகுப்பு | 58 |
| | | பாஞ்சோதிகுழம்பு | ,, |
| திருவடிவிரைக்கன்எலி | 49 | மகாசிந்தாமணிகுழம்பு | 59 |
| மாரபுத்திரன்எலி | 0 | சஞ்சீவிகுழம்பு | ,, |
| உதிரமண்டலி | 0 | சஞ்சீவிகரணிதைலம் | 60 |
| அருணன்எலி | 0 | இராமபாணதைலம் | ,, |
| குலந்தகன்எலி | 0 | சஞ்சீவிமை | 61 |
| மந்திரிஎலி | 0 | பாஞ்சோதிமை | ,, |
| முத்திரையன்எலி | 50 | சூரன்மை | 62 |
| உத்திரியன்எலி | 0 | பாஞ்சோதிமாத்திரை | ,, |
| கிரிசங்கன்எலி | 0 | சூடாமணிமாத்திரை | 63 |
| விசையன்எலி | 0 | காட்டுமாத்திரை | ,, |
| அலியன்எலி | 0 | அகோரருத்திராஞ்சனம் | 65 |
| உத்தமன்எலி | 0 | கண்கலிக்கம் | ,, |
| எலிகள்கடிவிஷம் | 51 | சித்தாங்காவிசேசமாத்திரை | 66 |
| கொப்பிளங்கண்டால் | 0 | சுகோடிவீட்டான்குளிகை | 67 |
| சுவாசங்கண்டால் | 0 | மகாபாஞ்சோதிமை | 68 |
| இருமல்கண்டால் | 0 | நாள்பட்டவிஷத்திற்கு | 70 |
| இரைப்புகண்டால் | 0 | விரியன்கடித்தபுண் | ,, |
| உடல்வீங்கினால் | 0 | சூராதிசூரன் | 71 |
| நாய்கடிக்கு | 53 | மலைக்காந்தன்குளிகை | 72 |
| பேய்நாய்கடிக்கு | 0 | நாகநிவாரணபாய்ச்சான்குளிகை | 73 |
| சகலமிருகவிஷம் | 54 | விரியன்பாம்புகளின | 74 |
| தந்தகவிஷம் | 0 | செவ்விரியன்கடி | 0 |
| நாவிகாவிஷம் | 55 | கருவிரியன்கடி | 75 |
| சிலசாஸ்திரக்கேழ்வி | 0 | பெருவிரியன்கடி | ,, |
| சிதமண்டலி | 56 | கந்திவிரியன்கடி | ,, |
| ரத்தமண்டலி | 0 | புல்விரியன்கடி | ,, |
| பூரான் | 0 | குறுந்தகவிரியன் | ,, |
| செய்யான் | 0 | கடிவாயிற்புதைக்கும்மருந்து | 76 |
| செந்தேரா | 0 | கருவழலைக்கடி | 77 |
| கருந்தேரா | 0 | மஞ்சள்வழலைக்கடி | 0 |
| அறுபுள்ளிவண்டு | 0 | மயக்கரவுக்கடி | 78 |
| செவ்வட்டை | 57 | முருக்கரவுக்கடி | 0 |

| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- | --- |
| கூனைப்பாம்புகடி | 0 | அமுதகண்ணிவிபரம் | 97 |
| செஞ்சோர்வுகடி | 0 | சர்வகரக்குளிகை | 0 |
| கருஞ்சோரகடி | 79 | ஆனந்தபைரவன் | 98 |
| புடையான்கடி | 0 | நேத்திரரோகதைலம் | 99 |
| வெங்கழுத்துப்புடையன் | 0 | பாலசஞ்சீவி | 101 |
| கட்டைப்புடையன் | 0 | பிள்ளைகன்மாத்திரை | 102 |
| வரிப்புடையன் | 0 | அன்னுமாத்திரை | 103 |
| ஊதுபுடையன் | 80 | சிவனாதத்தைலம் | 0 |
| இரத்தமண்டலிகடி | 0 | புறவீச்சுக்கு | 104 |
| கோமண்டலிகடி | 0 | கூழ்பாண்டலேகியம் | 105 |
| இமிர்மண்டலிகடி | 0 | சாமிகாதனன்னை | .. |
| சஞ்சீவியுண்டை | 81 | அமிர்தாதிச்சூரணம் | .. |
| சொரிமண்டலிகடி | 0 | விஷவிக்கத்திற்கு | 106 |
| வீங்குமண்டலிகடி | 0 | வாந்திபேதிக்கு | 107 |
| மண்டலிப்புடையன் | 82 | அதிசாரத்திற்கு | 0 |
| கட்டைப்பாம்பு | 0 | தாம்பிரமாத்திரை | 0 |
| செவிப்பாம்பு | 83 | தங்கபற்பம் | 108 |
| பூரான்கடி | 0 | வெள்ளிபற்பம் | 0 |
| செவ்வரணை, பெரியஅரணை | 0 | பவளச்சுண்ணம் | 109 |
| 18-வகைவிடகடிக்கும் | 84 | அபிரேக்குசெந்தூரம் | .. |
| செவ்வட்டைகடி | 0 | அயச்செந்தூரம் | .. |
| தேள்கட்டுவாகாவி | 85 | அன்னபேதிசெந்தூரம் | .. |
| பரணிமருந்து | 86 | வெள்வங்கபற்பம் | 110 |
| சல்பாம்புவிஷத்திற்கு | 88 | கருமேகத்திற்கு | .. |
| தேள்கடிவிஷத்திற்கு | 0 | கெந்தகபற்பம் | .. |
| சகலவிஷகடிக்கும் | 0 | பவளபற்பம் | 111 |
| (மூலிகைமர்மம் அனுபந்தம்.) | | கல்நார்பற்பம் | .. |
| பிராணசஞ்சீவி | 89 | சிங்கிபற்பம் | 112 |
| கெற்பமுண்டாக | 90 | சிலாசித்துபற்பம் | .. |
| மதனசிந்தாமணி | 0 | வெண்காரபற்பம் | 113 |
| மதனகாமேசுரம் | 92 | கஸ்தூரிமெழுகு | .. |
| மதனகாமேசுரக்குளிகை | 93 | சண்டமாருதசெந்தூரம் | 114 |
| கெஜபலக்குளிகை | 94 | மூலிகைவிபரம் | 117 |
| மதனசஞ்சீவி | 95 | | |
| சொர்ணபற்பக்குளிகை | 0 | | |
| பூரணவல்லாதி | 96 | | |
| மதனப்பால் | 97 | | |


விஷவயித்திய சிந்தாமணி அகராதி முற்றிற்று.

---


உ

சிவராமஜெயம்.

பார்வதிபாணியம்

என்னும்

# விஷவயித்திய சிந்தாமணி.



காப்பு.

சீரரும் பார்வதிதற் றிம்பரணி யாம்நூலைப்
பாரா ரறியவுரைப் பண்ணுதற்கு—சீராரும்
பிஞ்சுமதி கொஞ்சுசடை பெம்மானு ரன்றளித்த
கஞ்சமத வாரணத்தாள் காப்பு.

## நூன்முகம்.

கேளாய் அகத்திய மகா முனியே நீர்நம்மை வணங்கிக் கேட்டபடியால் விஷப் பிராணியின் பூர்வோத்திரத்தை நன்குணர்த்துவோமாக. அதாவது, காசிபன் மனைவியாகிய கத்துருவென்பவளின் வயற்றிலுதித்த விஷப்பிராணிகள் அளவிறந்ததாயினும் இந்த அண்டகோடிகளுக்குள் யிராநின்ற சர்ப்பங்களில் தலைமையாயும் உத்தமஜாதியாயும் உள்ள சர்ப்பபேதங்களை ஜாதியோடந்தமாகவும் மற்றுமுள்ள சில்விஷபேதங்களையும் கிரமமாய்ச்சொல்வோம் கேட்டுக் கொள்வாயாக முனிசிரேஷ்டா.

## உத்தமஜாதி சற்பங்களின் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 1 | வாசுகி | 5 | குளிகன் |
| 2 | அனந்தன் | 6 | பதுமன் |
| 3 | தக்கன் | 7 | மகாபதுமன் |
| 4 | சங்கபாலன் | 8 | கார்க்கோடகன் |

ஆக-சற்பபேதம் 8.

## ஜாதிபேதம்.

வாசுகி யென்னும் சற்பமானது - க்ஷத்திரியஜாதி.
அனந்தன் யென்னும் சற்பமானது - பிரம்மஜாதி.
தக்கன் யென்னும் சற்பமானது - வைசியஜாதி.
சங்கபாலன் யென்னும் சற்பமானது - க்ஷத்திரியஜாதி.
குளிகன் யென்னும் சற்பமானது - பிரம்மாஜாதி.
பதுமன் யென்னும் சற்பமானது - சூத்திரஜாதி.
மகாபதுமன் யென்னும் சற்பமானது - வைசியஜாதி.
கார்க்கோடகன் யென்னும் சற்பமானது - சூத்திரஜாதி.

{ ஷை. உத்தம ஜாதி சற்பங்கள் இருக்கும் இடங்களும் அதினுடைய மணமும், ஆடும்திசையும், படத்தின் குறியும், நிறமும், வயசும், சொல்லுவோமாக. }

### 1 - வது. வாசுகி.

வாசுகி யென்னும் சற்பமானது கிழக்குதிக்கில் விருட்சத் தடியில் இருக்கும் அது இருக்குமிடத்தில் தாழம்பு வாசனை வீசும் மனிதரைப் பார்த்தபடி யெதிர்நோக்கி ஆடும் அதின் படத்தில் சக்கரம்போல் குறியும் கருங்குவளைப்பூப்போல் புள்ளிகளும் இருக்கும் அருகன் கிழங்கு, வண்டு இதுகளைப் புசிக்கும் அதின் தேகம் பொன்னிறமாயிருக்கும் அதற்கு வயசு 800.

### 2 - வது. அனந்தன்.

அனந்தன் யென்னும் சற்பமானது தென்கிழக்கு திக்கில் தெய்வஸ்தலத்தில் வாசமாயிருக்கும் அது யிருக்குமிடத்தில் நா



விப்பூமணம்வீசும், அண்ணாந்துபார்த்து ஆடும், படத்தில் சங்குபோல் குறியும், வெண்டாமரைப்பூப்போல் புள்ளிகளும் இருக்கும், அதற்குப் பசிவேளையில் காற்றைப்பிடித்து உணவுகொள்ளும், அதின்தேகம் சிவந்தநிறமாயிருக்கும் அதற்குவயசு 1008.

### 3 - வது. தக்கன்.

தக்கன் யென்னும் சற்பமானது தெற்கு திக்கில் பாழ்மனையில் வாசமாயிருக்கும், அது யிருக்குமிடத்தில் பாதிரிமலர் வாசனைவீசும், நான்குதிசையும் நோக்கியாடும், அதின்படத்தில் வில்லைப்போல்குறியும் துவாதசத்தின்வடிவான புள்ளிகளுமிருக்கும், அதின்தேகம் கம்மிய வெண்மைநிறமாகும் ஓணான், எலி, இதுகளை உணவாகக் கொள்ளும் அதற்கு வயசு 500.

### 4 - வது. சங்கபாலன்.

சங்கபாலன் யென்னும் சற்பமானது தென்மேற்கு திக்கில் மரத்தடியில் வாசமாயிருக்கும், அது யிருக்குமிடத்தில் தாழம்பு வாசனை வீசும் எதிர்நோக்கியாடும், அதின் படத்தில் திரிசூலம் போல்குறியும் அல்லது பிறைபோலும் யிருக்கும் கிழங்குதினுசுகள் புசிக்கும் அதின்தேகம் பொன்னிறமாயிருக்கும் அதற்கு வயசு 800.

### 5 - வது. குளிகன்.

குளிகன் யென்னும் சற்பமானது மேற்குதிக்கில் பாழடைந்த தேவாலயங்களில் வாசமாயிருக்கும், அது இருக்குமிடத்தில் மலர்மணம் வீசும், அண்ணாந்துபார்த்து ஆடும் அதின்படத்தில் சங்குபோல் குறியும் சிறுபுள்ளிகளுமிருக்கும், வாயுவைப்பிடித்து ஆகாரமாய்க்கொள்ளும் அதின் தேகம் வெங்கநிறமாயிருக்கும் அதற்கு வயசு 1008.

### 6 - வது. பதுமன்.

பதுமன் யென்னும் சற்பமானது வடமேற்கு திக்கில் புற்றுகளில் இருக்கும், அதுயிருக்குமிடத்தில் இலுப்பைப்பூ வாசனை வீசும் பூமியைப் பார்த்தபடி ஆடும் அதின் படத்தில் புள்ளடிபோல் குறியும் பஞ்சகோணப் புள்ளிகளும்யிருக்கும் அதின் தேகம் கருமை நிறமாயிருக்கும் மீன் தவளை இதுகளைப் புசிக்கும் அதற்கு வயசு 300.

### 7 - வது. மகாபதுமன்.

மகாபதுமன் யென்னும் சற்பமானது வடக்குதிக்கில் பாழ் மனைகளில் வாசமாயிருக்கும், அதுயிருக்குமிடத்தில் பாதிரிபூ வாசனைவீசும் பலதிசைகளை நோக்கி நோக்கியோடும், அதின்படத்தில் தனுசைப்போல் குரியும், ராஜவர்த்தனைக் கல்லைப்போல்பிரகாசமான புள்ளிகளிருக்கும், அதற்கு ஆகாரம் ஓந்தி, தவளை, எலி, நத்தை இதுகளைப் புசிக்கும், அதின் திரேகம் வெண்மை நிறமாயிருக்கும் அதற்கு வயசு 500..

### 8 - வது. கார்கோடகன்.

கார்கோடகன் யென்னும் சற்பமானது வடகிழக்கு திக்கில் புற்றுகளில் வாசமாயிருக்கும், அதுயிருக்குமிடத்தில் இலுப்பை மலர் வாசனைவீசும் பூமியைப்பார்த்தபடி ஆடும். அதின் படத்தில் புள்ளடிபோற்குரியும் மூன்றுகண்களைப்போல் புள்ளிகளுமிருக்கும் ஜெலத்திலும் குளக்கரையிலுமுள்ள ஊர்வன ஜீவன்களைப்புசிக்கும் அதின் திரேகம் மிகவும் கருத்த நிறமாயிருக்கும் அதற்கு வயசு 300.

அஷ்டநாகங்களின்விபரம்
முற்றுப்பெற்றது.

—*—

## உத்தமாதி சர்ப்பங்கள்உற்பத்தி

இதுகள் ஆனிமாதத்தில் புணர்ந்து ஆடி ஆவணி மாதங்களில் வயிறுளைந்து கார்த்திகை மாதத்தில் பூபொன் எருக்கம்பூ வெண்மையாகிய நிறங்களாக (உசஅ) முட்டைகளிட்டு ஏழுநாள் அடயங்காக்குமென்றும் அம்முட்டைகளில் ஆண்முட்டைகள் முகிழ்விரியாத எருக்கம்பூ மொக்கைப்போலும் பெண்முட்டைகள் வாகைப்பூ அரும்பைப்போலும் இரண்டு பேதமாயிருக்குமென்றும் அதையீன்ற தாயானது ஏழுநாட்குள் (உஉஅ) முட்டைகளைப் புசிக்குமென்றும் ச - முட்டைகள் அழியுமென்றும் மகூ - முட்டைகள் பொரிந்து குட்டிகளாகத் திரியுமென்றும் அக்குட்டிகளுக்கு மயிர்போல் உச-கால்களிருக்குமென்றும்இது



கள் பிறந்த உஅ - வது நாளில் சூரியனைநோக்கிப் படம்விரித்து ஆடி விஷம்பெற்றுக்கொண்டு தனித்தனியே பிரியுமென்றும் சுய - வது நாளில் தோலுரிக்குமென்றும் சு - வது மாதத்தில் பல்லும் நஞ்சும் வாலும் பிரகாசமாய்த் தோற்றுமென்றும் இதுகள் ஒருவனைக்கடிக்கும்போது கடியுண்டவனுக்கு இறப்பு உண்டோ இல்லையோவென்று சந்தேகிக்குமென்றும் இவைகளுக்குக் கண்களே காதாகவிருக்குமென்றும் வாய்க்கீழ்வரிசையில் காளி, காளராத்திரி, என்ற இரண்டு பல்லும் மேல் வரிசையில் எமன், எமதூதன், என்ற இரண்டு பல்லும் உண்டென்றும் இவ்விஷங்கள் மணிமந்திர அவுஷதாதிகளுக்கு அஞ்சும் என்றும் சித்தர் ஆரூடவிருத்தப்பா என்னும் சாஸ்திரம் கூறுகின்றது.

## பலஜாதி சர்ப்பங்களின் உற்பத்தி.

உத்தமஜாதி சர்ப்பங்கள் சித்திரைமாதம் புணர்ச்சியில் இச்சையுண்டாகி ஆனிமாதத்தில் ஆணும் பெண்ணும் இடைவிடாதிருந்து ஆடிமாதத்தில் கூடி இழைந்து சூலுண்டாகி கார்த்திகைமாதத்தில் ml-உml-சml-முட்டைகளிடும் இவற்றுள் சில முட்டைகள் பெருங்காற்றினாலும் அதிக வெய்யிலினாலும் கெடுதியையடையும் மற்ற முட்டைகள் தனக்குத்தானே விரிந்துடைய அவைகளில் நின்றும் சிறுசிறு குட்டிகள் வெளிப்பட்டுலவும் இக்குட்டிகளுக்குக் கீழ்வாய் வரிசையில் காட்டுவாகைப்பூ கேசரப்பிரமாணங்களை யொத்து மஞ்சள்நிறமான ஏழுகோணைப்பல்லும் முளைக்கும் இவற்றுள் பகலில் விஷமிருப்பது ஈ - ராத்திரியில் விஷமிருப்பது கூ - இவ்விஷம் சுகூ என்னும் துளிக்கணக்காக விழும் இக்கோணைப்பல்லுகள் வருஷத்துக்கொருதரம் விழுந்து முளைக்கும் இவ்வித விஷசர்ப்பஜாதி சய - விதமும் விஷமில்லாத சர்ப்பஜாதி சச - விதமுமாம் இவற்றுள், பிரம,க்ஷத்திரிய,வைசிய,சூத்திர என்னும் ச - ஜாதிசர்ப்பங்களும் ஆண்,பெண்,அலி, யென்னும் கூ - குறிகளையுள்ள சர்ப்பங்களும் மகடு என்னும் நோய்க்குறிபெற்ற சர்ப்பமும் பால்ய,யௌவன,விருத்தாப்பியம், என்னும் முப்பருவங்களையுடைய சர்ப்பங்களும் உண்டு இவைகளுக்கு ஆயுசு கூ,அ00,ரு00,கூ00,உ00,க00,உகூ,என்னும் வருஷ

ங்களாம் சில ஜாதிகளுக்கு ஆயுசு ரு-உ௰-ரு௰-ரு௱ என்னும்வருஷங்களாம் இச்சர்ப்ப சாதிக்குள் பிறக்காமல் பசுவின் நாசியில் ஜனித்துவருகின்ற சர்ப்பம் ஒருவிதம் உண்டென்றறிக ஆனால் சூரிய வெப்பம் மிகுந்த தேசத்திலிருக்கின்ற சர்ப்பங்களுக்கெல்லாம் விஷம் அதிகமாம்.

## க. வது பிர்மசர்ப்பம்.

இது மேற்புறத்தில் வெளுப்பு கருப்பு சிவப்பு கபிலம் என்னும் நிறங்களையும் படத்திற் சங்கத்தின் வடிவான புள்ளிகளையும் அதிகச் சீறலுடன் கோபத்தையும் தாமரைப்பூ குருவேர் வெட்டிவேர் காட்டுவாகைப்பூ குங்கிலியம் நாபி ஆகிய இவைகளின் மணங்களையும் பெற்று ஆலயங்களில் சஞ்சரிக்கும் இதுபடம் விரித்து ஆடும்போது ஆகாயத்தைப் பார்த்து நின்றாடும் காற்றையும் பூமணத்தையும் புசிப்பாகக்கொள்ளும் இதற்கு வயசு ௲அ, என்றறிக அன்றியும் இது ரத்தநிறத்தைப்பெற்றுச் சனிவாரத்தினிரவிலும் ஆதிவாரத்திலும் இரையெடுக்குமென்றும் உதையமுதல் பத்து நாழிகை வரைக்கும் வெளியில் திரியுமென்றும் கடிக்கும்போது முன்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் வாதமே அதிகரிக்குமென்றும் சித்தர் ஆரூடம் என்னும் சாஸ்திரம் சொல்லுகின்றது.

## உ. வது க்ஷத்திரியசர்ப்பம்.

இதுமேற்புறத்தில் பொன் பேரீச்சம்பழம் கிராக்ஷிப்பழம் நாவல்பழம் என்னும் நிறங்களையும் படத்தில் சந்திரன் சங்கு சக்கரம் கலப்பை ஆகிய இவைகளையொத்த புள்ளிகளையும் மிகுந்தபகையுடன் கோபத்தையும் சிவந்த நேத்திரத்தையும் சாதிப்பூ செண்பகப்பூ தாழம்பூ புன்னைப்பூ அருகங்கட்டை யென்னும் இவைகளின் மணத்தையும் பெற்று விருக்ஷப்பொந்துக்களில் வாசஞ்செய்யும் இதுபடம்விரித்து ஆடும்போது சமபார்வையுடன் ஆடும் அருகின் கிழங்கையும் வண்டையும்உணவாகக்கொள்ளும் இதற்குவயசு(அ௱)என்றறிக அன்றியும் இதுசனிவாரப்பகலிலும் சோமவாரத்திலும் எலியை இரையாகக்கொள்ளுமென்றும் பகலில் உதையம்பத்துநாழிகைமுதல் இருபது நாழிகை வரைக்கும்



வெளியில் திரியுமென்றும் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் பித்தமே அதிகரிக்குமென்றும் சிலநூல் கூறுகின்றன.

## ங. வது வைசியசர்ப்பம்.

இது மேற்புறத்தில் வச்சிரம் கோமேதகம் புரு இதுகளின் சாயலையும் உடல்முற்றிலும் சிவப்பு வெளுப்பு மஞ்சள் புகை இவைகளின் நிறஞ்சேர்ந்த விருத்தாகாரமும் வில்லுருவமுமொத்தபுள்ளிகளையும் பாதிரிப்பூ, பால், நெய், வெள்ளாடு, செம்மறியாடு இவைகளின் மணத்தையும் பெற்று மனைகளில் வாசஞ்செய்யும்.

இது படம்விரித்து ஆடும்போது நாலு திசையையும் பார்த்து நின்றாடும் ஓந்தியையும் எலியையும் உணவாகக் கொள்ளும் இதற்கு வயசு (ரு௱) என்றறிக அன்றியும் இது சுக்கிரவாரத்திலும் மங்களவாரத்திலும் தவளையை இரையாகக் கொள்ளுமென்றும் உதையாதி இருபது நாழிகைமுதல் முப்பது நாழிகை வரைக்கும் வெளியில் திரியுமென்றும் இடப்புறத்திலும் பின்புறத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் கபமே அதிகரிக்குமென்றும் விஷநூல் சொல்லுகின்றது.

## ச. வது சூத்திரசர்ப்பம்.

கரி கோதுமை நிறங்களையும் உடலெல்லாம் புள்ளடிபோன்று சிறுத்து நீண்ட புள்ளிகளையும் யானை காட்டெருமை அழுகிய சேறு ரத்தம் இலுப்பைப்பு இவைகளின் மணத்தையும் பெற்று புத்துக்களில் வாசஞ்செய்யும் இது படம் விரித்து ஆடும்போது பூமியைப்பார்த்துக் கவிழ்ந்து நின்றாடும் தவளை மீன இவைகளை உணவாகக்கொள்ளும் இதற்கு வயசு (உ௱) என்றறிக அன்றியும் இது மங்கலவாரத்திலும் குருவாரத்திலும் எலிமுதலிய சகலத்தையும் இரையாகக்கொள்ளுமென்றும் வைசிய சர்ப்பத்தைப்போலவே கடிக்குமென்றும் அந்தக் கடியினால் தொந்தகபம் அதிகரிக்குமென்றும் சிலநூலில் சொல்லப்படுகின்றன இந்நான்குசாதி சர்ப்பங்கள் தவிர மற்றச் சங்கரசாதி சர்ப்பங்கள் கடிப்பதற்குப் பக்கபேதமும் ஸ்தானபேதமும் இல்லையென்றறிக.

## உத்தமஜாதி சர்ப்பங்களுடைய

### பற்களின் பெயர்.

முதற்பல்லின் பெயர்—காளி.
இரண்டாம் பல்லின் பெயர்—காளாத்திரி
மூன்றாம் பல்லின் பெயர்—எமன்,
நான்காம் பல்லின் பெயர்—எமதூதன்.

இந்த பல்லுகள் நான்கில் காளி காளாத்திரி என்னும் இரண்டு பல்லுகள் மேல்வரிசையிலும், எமன் எமதூதன் என்னும் இரண்டு பல்லுகள் கீழ்வரிசையிலும் இருக்கும் இதுகட்கு தொட்டியைப்போன்ற சிறுதுளைகளுள்ளனவாம். சர்ப்பம் கடிக்கும் போது அந்த துளையின் வழியாய் விஷம் சுழன்று கடிவாயில் இறங்கும் இறங்கின உடன் (96) மாத்திரைதின்று ஒவ்வொரு பல்லுக்கும் உடையபாகம்போல் துரிதினாவில் இரத்தாதுவிற் பாய்ந்து மேலுக்கேறி தத்தமது ஜாதிபேதப்படி மனிதருக்கு இடுக்கணுண்டாக்கும்.

---

## விஷநீர் அடையாளம்.

காளியென்ற பல்பட்டால் பனிஜலம்போல் நீர்கசியும்.
காளாத்திரியென்ற பல்பட்டால் மஞ்சள்நிற நீர்கசியும்.
எமன்யென்ற பல்பட்டால் செந்நீர் கசியும்.
எமதூதன்யென்ற பல்பட்டால் கழுநீர்போல் கசியும்.

---

## பல்லின் அடையாளம்.

காளியென்ற பல்பட்டயிடம் புள்ளடிபோலிருக்கும்.
காளாத்திரியென்ற பல்பட்டயிடம் முக்கோணம்போலிருக்கும்.
எமன்யென்ற பல்பட்டயிடம் தொட்டிபோல் காயமிருக்கும்.
எமதூதன்யென்ற பல்பட்டயிடம் வில்லைப்போல் காயமிருக்கும், அல்லது பிறைபோல் அழுந்தியிருக்கும்.

---



## கடிகணக்கு.

ஒருபல் பட்டால் (கால்கடி) யென்றறியவும்.
இரண்டுபல் பட்டால் (அரைகடி) யென்றறியவும்.
மூன்றுபல் பட்டால் (முக்கால்கடி) யென்றறியவும்.
நான்குபல் பட்டால் (முழுக்கடி) யென்றறியவும்.

## விஷகணக்கு.

ஒருபல்லு பட்டால் விஷமானது தோலைப்பற்றியேறும்
இரண்டுபல் பட்டால் விஷமானது மாமிசத்தைப்பற்றியேறும்
மூன்றுபல் பட்டால் விஷமானது எலும்பைப்பற்றியேறும்
நான்குபல்லும் பட்டால் விஷமானது மூளையைப்பற்றியேறும்.

## விஷப்பல்லின் சாத்தியா சாத்தியம்.

ஒருபல் அழுந்தினால் அந்தவிஷம் மூலிகைசிகிச்சையால் தீரும் இரண்டுபல் அழுந்தினால் அவ்விஷம் மந்திரத்தால் தீரும் மூன்றுபல் அழுந்தினால் அவ்விஷம் மணிமந்திர அவுடதத்தால் தீரும், நான்குபல்லும் அழுந்தினால் அவ்விஷம் நீங்குவது அசாத்தியமாகும்.

## மீளாக் கடி.

ஒரே பல்லு அழுந்தினபோதிலும் அந்தபல் அழுந்தின இடத்திலிருந்து இரத்தம் வடிந்தாலும், அல்லது பல்அழுந்தின இடத்தில் (திருகியதுபோல்) சக்கராகாரமாகத் தோற்றினாலும், அந்த இடம் ஆமை ஓட்டைப்போல் மேலெழும்பித் தடித்து வீங்கினாலும், அசாத்தியமாகும். ஆகிலும் மணிமந்திர அவுஷதவலியும், தெய்வவலியும், விதிவலியும், திடமாயிருக்குமாகில் கஷ்டத்தின்பேரில் உயிர் மீண்டு வரும்.

## தாடைப்பல்லின் லக்ஷணம்.

சில சர்ப்பங்களுக்கு தாடைக்குள் முள்ளைப்போல் ஒவ்வொரு கோரைப்பல் முளைத்திருக்கும் அந்த கோரைப்பல் பட்டு விஷம் ஏறுமானால் உடனே அபாயமாம் அவ்விஷம் மீளாது.

## கடியின் அசாத்திய நிறம்.

சர்ப்பங் கடித்தயிடத்தில் கருப்பு நிறமாகவும், கனிந்தநாவல்பழநிறமாகவும், இருந்தால் அவ்விஷம் மிகவும் கொடியதென்றறிக.

## கடிமணத்தின் நிதானம்.

சர்ப்பங்கடித்தயிடத்தில் முகர்ந்துப்பார்த்தால் தாழைமலர் வாசனை வீசினால் நல்லபாம்பென்றறியவும், பாதிரிப்பூ வாசனை வீசினால் வழலைப்பாம்பென்றறியவும், புளியம்பூ வாசனைவீசினால் விரியன் பாம்பென்றறியவும், மல்லிகைப்பூ வாசனைவீசினால் மண்டலிபாம்பென்றறியவும், சுக்கு, மிளகு இவைகளின் வாசனை வீசினால் சிறியபாம்பு, என்று நிதானிக்கவும் இந்த மணம் யாதொன்றும் வீசாமலிருந்தால் சில்லறைவிஷங்களென அறியவும்.

## மரணஸ்தானம்.

மனிதருடைய தலை, நெற்றி, புருவமையம், தாடை, உதடு, நெஞ்சு, உள்ளங்கை, மார்பு, ஸ்தனம், அக்குள், தொப்புள், ஆண்குறி, அல்லது பெண்குறி, குதம், உள்ளங்கால், இந்த இடங்களில் சர்ப்பந்தீண்டுமாகில் தப்பாமல் மரணமேயாம்.

## திதிபேத மரணநிதானம்.

பருவம், அமாவாசை, பஞ்சமி, பிரதமை, அஷ்டமி, நவமி, இந்த ஆறு திதிகளில் சர்ப்பங்கடித்தாலும் மயானத்தில் சர்ப்பங்கடித்தாலும் பலபேர் கூடும் பொதுமரத்தடியில் கடித்தாலும் சூரிய உதயத்திலாவது, மாலைமயங்கும் காலத்திலாவது அசந்து நித்திரைசெய்கிற காலத்திலாவது பாதிராத்திரியிலாவது சர்ப்பங்கடிக்குமாகில் மரணமாம்.

## நட்சத்திரபேத நிதானம்.

பரணி, கார்த்திகை, ஆயிலியம், விசாகம், பூரம், பூரட்டாதி, பூராடம், சதையம், மகம், திருவோணம், மூலம், சித்திரை, சோதி, இந்த நட்சத்திரங்களிலும், இந்த நட்சத்திரத்துடன், பூரணபருவம் அமாவாசைகூடின தினமானாலும் தன்னுடை-



ய ஜென்மநாளிலும் சர்ப்பங்கடிக்குமாகில் அசாத்தியமென்று சில நூலில் சொல்லுகிறது.

—*—

## சர்ப்பந் தீண்டப்படா அசாத்திய இடங்களாவன.

| | |
|---|---|
| பிடாரிகோவில் | மூங்கில்புதரு |
| துர்க்கைகோவில் | நந்தவனம் |
| பாழுங்கோவில் | பிரப்பம்புதர் |
| ஐயனார் கோவில் | மசானம் |
| யாக சாலை | நாணல்புதர் |
| பாழும் வீடு | ஏரிக்கரை |
| பாழூறு | நதிக்கரை |
| ஆலமரத்தடி | குளக்கரை |
| அரசமரத்தடி | நீரில்லாத்தாமரைக்குளம் |
| புன்னைமரத்தடி, | முகத்துவாரம் |
| புளியமரம் | புதுமனை |
| முருங்கைமரம் | தேரடி |
| சந்தனமரத்தடி | புத்து |
| வீட்டியிறப்பிலிருந்து | நாலுசந்திகூடு |

மேற்கூறிய இடங்களிலிருந்து உத்தமஜாதி சர்ப்பமாவது சங்கரஜாதி சர்ப்பமாவது எந்த சர்ப்பம் கடித்தாலும் அந்த விஷம் அசாத்தியமாமே யன்றி லகுவில் இறங்காது பிழைப்பானென்கிற நிச்சயம் கிடையாது.

## கடித்த சர்ப்பத்தின் கடினக்குறி.

மனிதரைக்கடித்த சர்ப்பமானது கடித்தஉடனே படத்தை விரித்து ஆடினாலும் தரையில் புரண்டாலும் கடித்தயிடத்தில் ஆடி பின்பு அசைவற்றுயிருந்தாலும் கடியுண்டவனுக்கு விஷம் மீளாதென்றறிக.

## அற்பவிஷங்கள்.

பசி, தாகம், வியாதி, கீரியைக்கண்டு விரண்டோடல் அக்கினிபட்டு மீண்டோடல், தோலுரித்தல் விஷங்கக்குதல் இவை

களால் மெலிந்தசர்ப்பங்களும் தற்பைப்புதை முள் எரும்புப்புதை இவ்விடத்திலுள்ள சர்ப்பங்களும் மந்திரவாதிகள் இருக்கிற ஊரிலுள்ள சர்ப்பங்களும் வர்ணயீனம் (அதாவது) கீழ்ஜாதிப்பாம்புகளும் கடிக்குமாகில் அது அற்பவிஷமென்றறிக இவ்விஷங்கள் எளிதில் நிவர்த்தியாகும்.

## கடியாக்கம்.

கடிவாயிடத்தில் அணுவேனும் விஷம்பட்டால்மாத்திரம் எரிச்சல் அக்கினிபட்டகுணம் கடிவாயில்தினவு, நோவு, வீக்கம், யெச்சம், கண்சோர்வு,சிட்டல், இக்குணங்கள்உண்டாகும் இந்த குணங்கள் இல்லாவிட்டால் அந்தமனிதர்சர்ப்பத்தின் வாய்க்கு சம்பந்தப்பட்டு விதிவலிவால் மீண்டானென்றி விதியும் விஷமும் சம்பந்தப்பட்டவில்லை யென்றறிக (அதாவது) பாம்பைஅடுத்து பயந்து மருண்டு விரண்டோடி மயங்கிப்பிதற்றுகிறா னென்றறிக இந்தமயக்கம் தந்திரத்தால் நிவர்த்தியாகும்.

## விஷபரிட்சை.

சர்ப்பங்கடித்தஉடன் கசப்புவஸ்துக்களைத் தின்றால் அந்த சுவைமாறுபட்டுஇனிப்பு, துவர்ப்பு, புளிப்பு, முதலியசுவைதோற்றினாலும் தலைமயிரைப்பற்றி யிழுத்தால் நோவு தெரியாதிருந்தாலும் காதைமூடினால் உள்ளிரைச்சல் இல்லாதிருந்தாலும்சூரியன், சந்திரன், அக்கினி, அல்லது, விளக்கு இதுகள் கண்ணுக்குத்தோற்றாதிருந்தாலும் தன்விரல்நகங்களைக்கிள்ளினாலும்விஷம் தலைக்கேறினதென்று நிதானித்து உடனே சகலசிகிச்சையும் செய்யவேண்டும்.

## உயிர்நிலை.

விஷத்தினால் உயிர் அடங்கியிருக்கும்காலத்தில் கண்கள் மேல் நோக்கியிருக்குமாகில் உயிரானது ஊர்த்துவாகாயமான மேற்புறம்நோக்கி லலாடத்தில்யிருக்குதென்றறியவும்கண்களானது கீழ்நோக்கியிருக்குமாகில் உயிர் கீழடங்கி யிருக்குதென்றறியவும் கண்களானது பக்கங்கள்நோக்கியிருக்குமாகில் பங்களில்ஒடுங்கி யிருக்கிறதென்றறியவும் கண்களானது விழித்தபடியே எதிர்நோக்கி சமபார்வையாய் இமைசிமிட்டாதிருந்தால் உடலைவிட்டு உயிர் நீங்கிப்போய்விட்டதென்றறியவும்.



---

## உயிர்பரிட்சை.

விஷத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்பு கொண்டடிக்கில் தடித்தாலும் அல்லது வெதுப்பலோடுசிவந்தாலும் அச்சவத்தை குளத்தில்போட்டால் அமுழ்ந்தினாலும் அல்லது ,சுத்தஜெலத்தைமேலே கொட்டினால் உடம்புகுளிர்ச்சிகண்டுரோமஞ்சிலிர்த்தாலும் கைவிரல் கால்விரல் களைகுலுக்கி யிழுத்தெடுக்கையில் நெட்டம் ஒடிந்தாலும் தலைமயிரைல்பற்றி யிழுத்தால் சொற்பவலியுடன் அருகளிப்புகண்டாலும் தாதுக்களில் ஒன்றுவது சொற்ப நடையாகக்கண்டாலும் உயிர் அடங்கியிருக்கிறதென்று நிதானித்து உடனே பலவித சிகிச்சைகளையும்செய்தால் பிழைப்பான் ஆதலால் விஷத்தினால் உயிர் அடங்கிய சவத்தை(90)தொண்ணூறு நாழிகைவரைக்கும் தகனம்செய்யக்கூடாதென்று சத்தியாருடம் சித்தாருடம் நாகாருடம் இன்னும் சிலசாஸ்திரங்கள் கூறுகின்றது.

---

## சர்ப்பங்கடிப்பதற்குக்காரணம்.

தன்பசிக்காகவும், பயந்தகாலத்திலும், கோபத்தினாலும்,சுபாவகுரூரத்தினாலும், தன்னைமிதித்தாலும்,வைராக்கியத்தாலும் சாபத்தினாலும்,ஏவலினாலும், தெய்வகதியினாலும், காலகதியினாலும் கோரைப்பல்விஷம் அதிகரித்தாலும், சர்ப்பங்கடிக்க நேரிடுகிற தென்றறியவும்.

---

## சர்ப்பவர்க்கச்சத்துருவகை

சர்ப்பங்களுக்கு இருதலைமணியன் செந்நாய், மயில், கோழி,எருதின் குளம்பு மின்னல் இடி கிரி கரடி பன்றி செம்போத்து கருடன் முதலை ஆந்தை கூகை மான் புதுவெள்ளம் புகைமூடிய அனல் முதலியவைகளும் மனிதரும் சத்துருக்களாம்.

சங்கிரமசாதிஎன்னும்

# பலஜாதி சர்ப்பபேதம்

(*)

## பௌமசர்ப்பசாதிபேதம்.

பௌமசர்ப்பம் என்பது தருவீகரம் மண்டலி, ராஜமந்தம், நிர்விஷம், வைகரஞ்சம்,என ஐவகைசாதியை உடைத்தாய்முறையே உகூ-நகூ-மிந-ச-ந-என்னும் அஉ-பேதங்களைப் பெற்றிருக்கின்றது ஆயினும் தருவீகரம் மண்டலி ராஜமந்தம் எனக்கூறிய மூவகைச் சர்ப்பங்களுக்குள் பிறக்கிற சங்கரமசர்ப்பசாதி பேதங்களுக்குக் கணக்கில்லை யென்றறிக இங்கனம் கூறிய ஐவகை சர்ப்பசாதிகளுக்கும் பௌம சர்ப்பங்களெனப்பெயராம் பூமி சம்பந்தம் பௌமம்.

## தருவீகரசர்ப்பம்.

இது மிகுந்த வேக நடையைப் பொருந்தி படத்திலும் சர்வாங்கத்திலும் வண்டிக்கண், கலப்பை, குடை, துவசம், அங்குசம் என்னும் உருவங்களை யொத்த புள்ளிகளைப்பெற்றிருக்கும் இதன் விஷமானது கொஞ்சம் உஷ்ணத்துடன் புளிக்கும் இது தலைக்கேரினல் முகம், கண், நகம், சருமம், மூத்திரம், ஆகிய இவைகள் கறுக்குதல் சிரசில் பாரிப்புடன் நோவு தலைசுழல் தேககனதி வயிற்றிற் சூலை எரிச்சல் பொருமல் முதுகில் குத்தல் எலும்பு நரம்பு இழுப்பு இவ்விடங்களில் வேதனை நாளிறுகல் இருமல் இளைப்பு கொட்டாவி விக்கிதிளைபங்கம் அரோசகம் மல மூத்திரக்கட்டு நெஞ்சிற் களகளவென்னும் ஒரு சத்தம் விக்கல் பேசக்கூடாமையான ஈனத்தொனி எப்பம் வாயில் நொப்பும் நுரையும் விழுதல் அறிவு நீங்குதல் என்னும் இக்குணங்களுடன் வாதசுபாவக்குறி யெல்லாம் உண்டாகும் இதற்கு ஏழுவேகம் உண்டு அவையாவன.

1-வது வாயில் ரத்தங்கம்மி முகமும் நேத்திராதி இந்திரியங்களும் கருத்து சரீரத்தில் பூச்சி யூருதல்போல் இருக்குதல்.

2-வது சர்வாங்கமும் வீங்குதல்.



3-வது சிரசு கனத்துக் கண்சிவந்து பல்லுகளில் நோயுண்டாகுதல்.

4-வது நுரைநுரையான வாந்தியும் எலும்பின் சந்திகளுள் நோவும் பிறக்குதல்.

5-வது சகலகில்களிலும் உபத்திரவம் உண்டாகி விக்கலும்தாகமும் அதிகரிக்குதல்.

6-வது மார்பு அடைப்புடன் தேகம்பாரித்து மூர்ச்சைகண்டு பெதியாகுதல்.

7-வது முதுகு தோள் யிடுப்பு ஆகிய இடங்களில் வேதனை உண்டாகி அவயவங்களில் கொதிப்பேரி சுக்கிலநாசம் அடைகுதல் என்பனவாம்.

இந்த ஏழுவேகத்தில் ஐந்துவரைக்கும் சிகிச்சைசெய்யலாம் அதற்குமேல் அஸ்தேதம் நாசமாம் இது கரண்டியைப்போல்படமுள்ளதாகையால் கருவிகரசர்ப்பம் எனப்பேர்பெற்றது இது நொச்சில் கருந்துளசி தும்பை கஞ்சாங்கோரை பருத்தி சிறுதேக்கு கொட்டாங்கரந்தை என்னும் ஏழுசரக்கரையும் சிறுநீரில்ஊரவைத்து நசியங்கட்டத்திரும்.

அல்லது குப்பைமேனி சுக்கு மிளகு கேழ்வெள்ளுள்ளி என்னும் ஐந்துசரக்கையும் சிறுநீர்விட்டு நருக்கிப்பிழிந்து நசியஞ்செய்ய விஷம்இறங்கும் சீந்தில் கிழங்கையாவது கோவைக்கிழங்கையாவது சிவிச்சிவி ஒரு ஆழாக்குரசம் உள்ளில்தங்கும்படிக்கித்தின்னச்சொல்ல விஷம்மீளும்.

## மண்டலிசர்ப்பம்,

இது மந்தநடையை உடைத்தாய்ச்சிரசில் அநேகபேதவன்னமாய் மண்டலாகார உருவங்களையொத்த புள்ளிகளைப்பெற்றிருக்கும் இதன்விஷமானது மஞ்சள்நிறத்துடன் காரமாகஉரைக்கும் இதுதலைக்கேயினல் கடிவாயில் சுடுகையாயிருக்கும் வேதனையுடன்குத்துதல் எரிதல் நோதல் முகம்மினுமினுத்து மஞ்சளைப்போலிருத்தல் அவ்வாறே சகலவஸ்துக்களுங்காணப்படுதல் தலைநோதல் வயிறு கருத்தல் வாயுலரல் சுரம் தாகம் நரம்புகளுப்புதல் நாசியிலும் வாயிலும் அக்கினிச்சுவாலைபோல் சுவாசம்வ

ருதல் பாதாதிகேசம்வரைக்கும் புகைசூழ்ந்ததுபோலிருத்தல்மூர்ச்சை சீதளத்தில்விருப்பம் என்னும் இக்குணங்களுடன் பித்தசுவாசக்குறியெல்லாம் உண்டாகும் இதற்கு ஏழுவேகமுண்டு அவையாவன.

1-வது குளிர்ச்சியானரத்தம் வடிந்துவாயுங்கண்ணுங் கறுத்துத்தேகத்தில் பூச்சியூருதல்போல் இருக்குதல்

2-வது தாகமும்வீக்கமுங்காணுதல்

3-வது பல்லுகள்கருக்குதல்

4-வது சர்வாங்கத்திலும்எரிச்சலெழும்புதல்

5-வது சப்ததாதுக்களுக்கும்துர்ப்பலம்உண்டாகுதல்

6-வது வாழைத்தண்டைப்போல்தேகந்சில்லிடல்

7-வது தன்னைமறக்குதல்என்பனவாம்

சுருட்டை,பனையன்,விரியன்,முதலியபாம்புகளுக்குமண்டலிசர்ப்பம் யென்பெயராம் இவ்விஷங்களுக்கெல்லாம் புங்கம்வேர் விளாம்வேர் கிருஷ்ணகுரிகைவேர் இம்மூன்றையும் சமமாகவிருத்து முருங்கைப்பட்டை ரசத்திலல் அரைத்துக் கடிவாயில் நன்றாகலேபனம்பண்ணி உள்ளுக்குப்பாகலிலை ரசங்கொடுக்க இறங்கும் வாகைப்பூவைப் பாலில்பிசைந்து வடிகட்டிக்குடிக்கில் திரணமண்டலி விஷந்தீரும் —திரணமண்டலிஎன்பதுபுல்விரியன்.

## ராஜமந்தசர்ப்பம்

இது அதிகமந்தநடையை உடைத்தாய் சிரசிலும் உடலின்மேலிலும் கீழிலும் பக்கங்களிலும் மினுமினுத்து சித்திரவன்னங்களையொத்தப் புள்ளிகளைப் பெற்றிருக்கும் இதன்விஷமானது குளிர்ச்சியுடன்இத்திக்கும் இதுதலைக்கேறினால் கடிவாயில் குளிர்ச்சியோடுவீங்குதல் சோம்பல் முகமும் நகமும் வெளுக்குதல்சரீரம் நமச்சல் பாரிப்பு மரத்தல் கேசாதிபாதம்வரைக்கும் மினுமினுத்துசில்லிடுதல் சிரசும்கண்ணும் நாசியுங்குளிர்ச்சியாகுதல்சிரோபாரம் சுரம்வாய்இனிப்பு அரோசகம்வாந்தி இருமல்மேற்சுவாசம் தாகம் பொறுத்துப்பொறுத்துப் பெருமூச்சுவருதல் நெஞ்சிற் களகளவென்னும் ஒருசத்தத்துடன் இளைவு அடிக்கடி அலை



றல் ரோமச்சிலிர்ப்பு வாயில் நொப்பும்நுரையுந்தள்ளுதல் மார்புதுடித்தல் மனச்சங்கடம் மயங்கியநித்திரைஎன்னும் இக்குணங்களுடன் சிலேஷ்மசுபாவக்குறியெல்லாம் உண்டாகும் இதற்குஏழுவேகம்உண்டு அவையாவன.

1-வது ரத்தமானது வெண்மையாய்முறிந்து தேகமுங்கண்ணும்வெளுக்குதல்

2-வது சர்வாங்கமும்வீங்குதல்

3-வது கண்ணிலும்மூக்கிலும்வாயிலும்ஜலம்வடிதல்

4-வது சிரோபாரமும்தாள்பிடிப்பும்உண்டாகுதல்

5-வது பேசக்கூடாதவருத்தமும்குளிர்சுரமுங்காணுதல்

6-வது தேகங்கனத்துசில்லிடுதல்

7-வது அவயவங்களெல்லாங்கொதித்து மூர்ச்சையுண்டாகித்தன்னைமறக்குதல் என்பனவாம்

மலைப்பாம்பு,தாசரிப்பாம்பு,கட்டுவிரியன், முதலியவைகளுக்கு ராஜமந்தம்எனப்பெயராம்.

இவைகட்குக் காட்டுக்கருணை பழுகாமல் சீந்தில் கோவையென்னும் கிழங்குவகை(ரு)கண்டை கிளிமூக்கு வெட்டிவேர் செந்தொட்டி நீலி மருக்காரை வெற்றிலை பேய்ப்பீர்க்கு பாலை ஊமத்தை செப்புநெருஞ்சில்வெண்சாரணையென்னும்வேர்வகை யஉம் ஆகிய இப்பதினறுவகையையும் தனித்தனியே வஸ்திரகாயம் பொடிசெய்து சமமாகநிறுத்துக் கலந்துவைத்துக்கொண்டு இதில் அரைப்படியும் அரிசி அரைப்படியும் சேர்த்துப்பொங்கிஉண்ணக்கொடுக்கில் விஷம்ஏறுது ஏறியவிஷமும் இறங்கும்.

## கௌதேரசர்ப்பபேதம்.

கௌதேரசர்ப்பமானது கூஉ விதப்படும் இவைகளின்விஷங்கள் தருவீகரசர்ப்ப விஷங்களைப்போலவே இருக்கும்ஆனால்இவைகளில் நின்றும்பிறக்கின்ற சங்கரசாதிகள் அனந்தமென்றறிக இதனைச்சாரைப்பாம்பென்பர்.

## நிர்விஷ சர்ப்பபேதம்

நிர்விஷசர்ப்பமானது திவ்யகம், சாலகம். பாதகம், விருக்ஷசாயி கலசி, புட்கரம், க்ஷீரி, வாகினி, சாரிவாகி,வருஷாப்புவிகம்

சோதிரநம், சுட்கம், கோத்திரம், பலாககம், கசபக்ஷம், பிலவோ ம்பேதம், என, ம்சு விதப்படும் நிர்விஷம்என்பது விஷமில்லாத சர்ப்பமாம்.

## நிர்விஷலக்ஷணம்.

விஷம்யில்லாதசர்ப்பங்கள்கடித்தால் அக்கடிவாயில் ஆமை முதுகைப்போல் தடித்து அச்சருமங்கறுத்து அற்பசோம்பலு ண்டாகும்.

## வைகரஞ்ச சர்ப்பம்.

இதுமூவிதப் பேதங்களைஉடையதாயிருந்தாலும் இவற்றின் விஷம் அதிகவேகத்தைப்பெற்றிருக்கும் இதற்கும்தருவீகரச்சிகி ச்சைஉதவும்.

## ஆண்சர்ப்பம்.

இது அகலமுள்ளடத்தையும் அதிகபிடத்தையும் மிகுந்த சிறலையும்பெற்றிருக்கும் இவ்விஷம்தலைக்கேறினல் மேல்நோக்கி யபார்வையும் வலதுகால்பூமியில் பாவாதிருக்குதல் ஊர்த்துவகா யத்தில் மிகுந்தபலயீனம் என்னும்யிக்குணங்கள்உண்டாகும்.

## பெண்சர்ப்பம்.

இதுகுறுகியபடத்தையும் அற்பச்சிறலையும் பெற்றிருக்கும் இவ்விஷத்தினல் கீழ்ப்பார்வையும் இடதுகால்பூமியில்பாவாதிரு த்தலும் அதோகாயத்தில் பலயீனமும்உண்டாகும்.

## அலிசர்ப்பம்

இதுமிருதுவுடன் நீண்டஉருவத்தையும் வெளுத்தபடத் தையும் மந்தகடையையும் குறைந்ததொனியையும் அற்பகோபத் தையும் உடையதாயிருக்கும் இவ்விஷத்தினல் ஈனத்தொனி பே சி நடுக்கல், பயம். சுரம், புணர்ச்சியில் இச்சை சரீரம்காற்றில்ப றப்பதுபோல் இருத்தல்என்னும் இக்குணங்கள்உண்டாகும் இ ச்சர்ப்பம்பிறந்த நட்சத்திரத்தில்விருத்தியடைவதும் திவ்யசர்ப்ப த்தால் அடிபடுவதுமாயிருக்கும்.

## மலட்டுச்சர்ப்பவிஷம்.

இது சீக்கிரத்தில் அனந்தவேதனையைப் பிறப்பித்தாலு ம் முக்கியமாகவியர்வையை விஸ்தாரமாகச்செய்யும்.



## பாலியசர்ப்பஆண்விஷம்.

இது இடதுகண்ணைக்கோவைப்பழம்போல் சிவக்கச்செய்யு ம் பெண்சர்ப்பக்குட்டி விஷத்திற்கு இக்குணம் கொஞ்சம் பேதிக்கும்.

## யௌவனசர்ப்ப ஆண்விஷம்.

இது வலப்பக்கத்தில் கடிக்கும் இவ்விஷத்தால் அப்பக்கத் துக் கண்ரத்தம்போல் சிவக்கும் பெண்சர்ப்பம் இடப்பக்கத்தில் கடிக்கும் இவ்விஷத்தினல் தடிப்புத் தடிப்பாகச் சிலரோகங்கள் பிறக்கும்.

## விருத்தசர்ப்பவிஷம்.

இதுகடிவாயில் வீக்கம் அற்பநோய் பிதற்றல் இவைகளைத் தரும்.

## கெர்ப்ப சர்ப்பவிஷம்.

இது சிரசு, உதடு, வயிறு, தொடை ஆகிய இடங்களில் நோதல் நாவுகருத்தல் உண்ணாக்கு வளருதல் என்னும் இக்குண ங்களை உண்டாக்கும்.

## சூதிகாசர்ப்பவிஷம்.

இது வயிறு உளைதல், வாயில் ரத்தங்கமுறல், மார்பில் அடைப்பு கண்ணில் நோவுடன் சிவத்தல் சர்வாங்கமும் ஊசியா ல் குத்துவதுபோல் மிகுந்த குத்தல் என்னும் இக்குணங்களை உண்டாக்கும் முட்டையிட்ட சர்ப்பத்திற்குச் சூசிகா சர்ப்பம் எனப்பெயராம்.

## கோனச சர்ப்பம்.

இது அதிவெய்யிலினலும், அலைச்சலினலும், அடிபட்டப் பசுக்களின் நாசிக்குள் சனித்து ஊர்த்துவ பார்வையுடன் அற்ப உருவமும் நீண்டநாவும் சிரசினல்கத்துந்தொனியும் உடையதா ய் வெளிப்பட்டுத்திரியும் பசுவின் நாசியால் பிறப்பதால் கோனச சர்ப்பமெனப் பேர்பெற்றது.

## வழிச்சர்ப்ப விஷம்.

இது எப்போதும் கடிப்பதற்கே வழிகட்டிக்கொண் டிருக்கும் இப்பாம்பு கடித்தால் மரணக்குறிகளெல்லாம் சீக்கிரத்தில் உண்டாகும் இந்த விஷம் மணிமந்திர அவுஷதத்தினுல் நீங்குமென்றறிக.

## விஷவிருத்திலக்ஷணம்.

சர்ப்பக்கடியினுல் அற்பவிஷம் ஏறியிருந்தாலும் அது பசி தாகம், துக்கம், பயம், கோபம், மிகுந்தகளைப்பு, அக்கினித்தொழிலில் இருக்குதல் சுடுகையான நிலத்தில் படுக்குதல் கீழ்காத்தில் திரிதல் இரட்டை அலரிப்பூவை முகருதல் சரீரசுட்கம்பேதி அசிரணம் துர்ப்பலம் பித்தவாயு முதலிய ரோகத்தினுல் மெலிதல் யானைமேகம் எலிமுதலிய தொனிகளை உற்றுக் கேழ்க்குதல் என்னும் இவைகளினுல் மகாவிஷம் மாறும்.

## சர்ப்பவிஷவேகபேதம்.

சகல சர்ப்பவிஷத்திற்கும் வாயுவேகம் தேயுவேகம் வருணவேகம் என மூன்றுவிதவேகமும் இவற்றுள் உட்பிரிவும் உண்டு.

### 1-வது. வாயு விஷவேகநிதானம்.

வாயுவைப்பற்றி விஷம்ஏறும்போது எட்டுவிதவேகம்உண்டாகும்அவையாவன. 1-வது மூர்ச்சையும்மிகுந்தவிபர்வையும்உண்டாகும். 2-வது சரீரம்வெகுப்புதல். 3 வது கண்சொருவுதல் 4 வது செவியையடைக்குதல். 5 - வது நெஞ்சில்கபங்கட்டுதல் 6 -வது அறிவுமாறுதல். 7 -வது மேல்மூர்ச்சுவாங்குதல் 8 -வது உயிர்நீங்குதல் என்பனவாம் ஆனுல் இவ்வேகம் பிறக்குமுன்விஷமானது கடிவாயில். (௫௰) மாத்திரைக்காலம் நின்று பின்புதேகமெங்கும் வியாபித்துச்சிரசில் ஏறும்.

### 2-வது. தேயுவிஷவேகநிதானம்.

தேயுஎன்னும் பித்தத்தைப்பற்றி விஷம்ஏறும்போது ௰-விதவேகமுண்டாகும் அவையாவன. 1 வது முகங்கடுத்துக்கண்கள்சிவக்குதல். 2 வது ரோமங்களின் முனைபிளந்து சிறுநீர்கருத்திருந்து முகம்வெளுத்தல். 3 வது வேதனையுடன் சரீரம்நீண்டு சிந்தைமயங்கி வாய்குளறுதல். 4 வது சோபம்பிறந்து குடலில் எரிச்சல்கண்டு தேசசுமாறி நாசியால் ஜலம்வடிகுதல். 5 - வது தேகமும்கண்ணும் விட்விட்த்துஆடுதல். 6-வது அங்கம்பதைத்து இளைத்து நாசியால் ஜலம்பெருகி மொழிமாறிப் பல்லைக்கடிக்குதல் 7 வதும் 8 வதும் கபங்கட்டிச்சுவாசம்எழும்பிஊர்த்துவ திஷ்டியாகப்பார்க்குதல். 9-வது உயிர் அடங்கியிருக்குதல். 10-வது உடலைவிட்டு ஆவிநீங்குதல் என்பனவாம் இவ்வேகம்பிறக்குமுன் விஷமானது கடிவாயில் (௱௫௰) மாத்திரைநின்று பின்புஏறும்.



### 3-வது. வருண விஷவேகநிதானம்.

வருணன்என்னும் சிலேஷ்மத்தைப்பற்றி விஷம்ஏறும்போது பத்துவிதவேகம்உண்டாகும் அவையாவன. 1-வது தேகஞ்சிவந்துரோமஞ்சிலிர்க்குதல். 2 - வது வாயுலர்ந்து தேகங்கருத்து வெதும்புதல். 3-வது தேகத்திற்குட்புரத்தில்உளைக்குதல். 4-வது கபம் அதிகரித்து மனங்கலங்கிதத்தளிக்குதல். 5-வது தலைநடுக்கலும் அறிவழிதலும் பிறக்குதல். 6-வது கண்மலர்விழித்து மேல்நோக்குதல். 7-வது அவயவம்முறைக்குதல். 8-வது சரீரவியாபாரமடங்குதல். 9 வது சுக்கிலம் நசிக்குதல். 10 வது உயிர்நீங்குதல் என்பனவாம் இவ்வேகம்பிறப்பதற்குமுன் விஷமானது கடிவாயில் (௱௫௰) மாத்திரைநின்று பின்புஏறும்.

## கருநாகவிஷம்.

இது அவுஷதாதிகளால் இறங்கினுலும் இரண்டு காதுகளையும் பாரிசவாதத்தைப்போல் செவிடாக்கும் இந்தவிஷம் நிலப்பனைக்கிழங்கும் உப்பிலாங்கொடிவேரும் அரைத்து சிறுஎலுமிச்சங்காய்ப் பிரமாணம் முகூர்த்தத்திற் கொருதரமாக அ - தரம் விழுங்கில் முறியும்.

## சிறுநாகம்.

இது தருப்பை அகலம் உள்ளபடத்தையும் பருத்த ஈர்க்கையொத்த உடலையும் பெற்று தாழைமலர்க்குள் வாசமாயிருக்கும் இவ்விஷத்திற்கு மகாவிஷ சிகிச்சைவேண்டும் இதனை பூநாகம் புஸ்பாகம் யென்பர்.

## விரியன்பேதம்.

விரியன்யென்பது பெருவிரியன், ரத்தவிரியன், செவ்விரியன், நீர்விரியன் பொறிவிரியன், புல்விரியன், என ஆறுவிதப்படும் இவைகள் பத்திரகாளியின் ஆடையில் யிருந்து பிறந்ததாகச் சிலர் சொல்லுகுரார்கள்.

## பருவிரியன்விஷம்.

இது மயக்கம் தயக்கம் உறக்கம் வெப்பம் என்னும் இவைகளை யுண்டாக்கும் ஆனல் கடிவாயில் ரத்தமும் வீக்கமும் எரிச்சலும் பிறக்கும்.

### ரத்தவிரியன்விஷம்.

இது வயிற்றில் வியாபித்தால் அவ்வயிற்றில் வலியையுண்டாக்கிக்கொல்லும் அப்போது கடித்தவாயில் உதிரமும் மேலில் தடிப்பும்பிறக்கும் இது தவிர மற்ற நான்குவிதவிரியன் விஷத்தினல் நித்திரை மயக்கமும் உண்டாகுமென்றறிக இவைகளுக்கு மகிழம்பருப்பு, வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கள்ளிப்பால்,வேப்பெண்ணெய், இலுப்பைப்புண்ணுக்கு, ரசம்,வெண்காரம்,மருக்காரைப்பழம், பூவம்பழம், இப்பவிரண்டும் வகைக்கு விராகனிடை க - ம் வெற்றிலே ய்சா - ம் ஒன்ருய்ப் போட்டரைத்து சீலையில் தடவிக் காயவைத்துக்கொண்டு சிறுநீரில் உரைத்து நாசியிற் பிழிய சகலவிரியன் விஷங்களும் தீரும்.

### வழலேச்சர்ப்பவிஷம்.

இது கடித்தயிடத்தில் ரத்தமும் வாயில் அனற்றலும்உண்டாக்கும் இதற்கு சிகிச்சை ஏலம், மிளகு, வங்கணத்திவேர் இம்மூன்றும் சமனுகக்கூட்டிக் கற்பூரவள்ளிச்சாறு விட்டரைத்து உலர்த்தி அம்மாத்திரையைத் தண்ணீரில் உரைத்துக் கடியுண்டவன் கண்ணில் கலிக்கவிட விஷந்தீரும்.

### கருவழலேச்சர்ப்பவிஷம்.

இது சரீரத்திற் காங்கையோடு அதிகவியர்வையும் உள்ளங்கால், உள்ளங்கையில் சிவப்பும் கோழையால் மார்பில் அடைப்



பும் பிறக்கும்படிக்குச்செய்யும் இதனல் அனந்தம் வேதனையும் உண்டாகும் இது நீலஞ்சோதியும் கடகரோகணியும் கோழிமுட்டை வெண்கருவும் சமமாகக்கூட்டி அரைத்துப் பசும்பாலிற் கலந்து உள்ளுக்குக் கொடுக்கத்தீரும்.

## மூர்க்கன்.

இது கடித்தவிடத்திலும் முதுகிலும் வேதனைபிறப்பதுந்தவிர அவ்விஷத்தினல் வாயும் கழுத்தும் முறுக்கிக்கொள்ளுதல் குரல் கெரிதல் தேகம் பதறல் தலே சுழலல் என்னும் இக்குணங்கள் உண்டாகும் இவ்விஷம் காடியைத் தெளித்து வன்னியிலேயை இடித்து அரை ஆழாக்குச் சாறுபிழிந்து உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும் அத்துவாலே யிடத்தீரும். இதற்குக் கொம்பேறிமூர்க்கன், சாரைமூர்க்கன், பனேயேறி எனப்பெயராம் இது தன்னல் கடியுண்டவன் சுடுகாட்டில் தகிக்கப்படுகின்றுனு என்று உயர்ந்த மரக்கொம்பில் ஏறிப்பார்க்குமென்றும் அவ்வளவு தெரிந்தவர்கள் உடனே வைக்கோல் சுமை முதலியவைகளை அச்சுடுகாட்டிலிட்டுப் புகைக்கக்கண்டு அவன் இறந்தானென்றிரங்கியிடுமென்றும் அதன்பின் சிகிச்சை செய்யில் விஷம் திரும்புமென்றும் சொல்லுவது உலகவழக்கம்.

## மயக்குச் சர்ப்பம்.

இது கண்ணில்விஷத்தையுடையது இப்பார்வைசற்று நேரம்படினும் உடனே அவர்களுக்குமயக்கமும் கண்களில்சுழற்சியுமுண்டாகும்.

### முறுக்குச்சர்ப்பம்.

இது சரீரமெல்லாம் திருகுக் கள்ளியைப்போல் முறுக்கிக்கொள்ளுதலேயும் முறித்தால் தெள்ளுவதுபோல் பதறலேயும் உண்டாக்கும்.

### சாரைப்பாம்பு.

இதுநீண்டஉடலேயும் வேகநடையையும்பெற்று மனுஷரை வாலால் அடிப்பதும் அன்றிப்பாதமுதல் மார்புவரைக்குமசுற்றி

இடுப்பையும் ஒடிக்கும் இதில்வெண்சாரை கருஞ்சாரை செஞ்சாரை மஞ்சள்சாரையென நான்குபேதம்உண்டு அவைகளும் இவ்வாறேசெய்யும் இவைகளைப்பார்த்த எருமைமாடுகளுக்கு மாலைக்கண் உண்டாகும்என்பர்.

### புடையன்

இது நீண்டஉருவத்தையும் அழுக்கு நிறத்தையும்பெற்று வாலின்முனையால் குத்தித்தேகத்தில் புடைகளைவிஸ்தாரம் உண்டாகும்.

### மண்ணுளிப்பாம்பு.

இது தம்பாக்கு வெள்ளிரத்தம் ஆகியஇவைகளின் நிறத்தைப்பெற்று நீண்டபயிற்றங்காய்ப் பிரமாணமுள்ளதாயிருக்கும் செவியில்நுழையில் அபாயமாம் இவ்விஷத்தினால் பருவகாலந்தோறும் சிறு சிறுதடிப்பும் நமைச்சலும்உண்டாகும் இதனைச்சிறுபாம்புக்கடியென்பர் இத்தடிப்புஎண்ணைவிட்டுக்கலந்த கூழைமூநாள் சாப்பிடத்தீரும்.

### காலியாங்குட்டி

இது ஒருசாண் இரண்டுசாண் நீளத்துடன் தேககுறைந்திருக்கும் ஆனால் கடிக்கஅறியாது கடிக்கில்பெருஞ் சிகிச்சைவேண்டும்.

### கண்குத்திப்பாம்பு

இது பசியநிறத்துடன் நீண்டஉருவத்தையும்பெற்று விருக்ஷங்களில் வாசம்பண்ணுவதும் நேரிட்டவர் கண்களைக்குத்துவதுமாயிருக்கும் இதுவேபச்சைப்பாம்பாம்.

### வெண்ணுந்தைப்பாம்பு

இது பருத்தசெக்குபனைமரம் தூண்முதலியபிரமாணங்களையும் உடம்பெல்லாம் வழுவழுப்பையும் உள்ளதாய் வாலும் தலையும்ஒரேமொத்தமாய் மேலில்வெளுத்தவரிகளைப்பெற்று கோழி ஆடு, மாடு, முதலியவைகளை விழுங்குவதாயிருக்கும் சிலர்யானையைவிழுங்குமென்றும் சொல்லுகுறார்கள் இதுமலைப்பாம்பு தாசரிப்பாம்பு எனச்சொல்லப்படும்.



# சில்லரைவிஷ வகுப்பும்.

அதற்கு சிகிச்சையும்.

## 1 வது ஓணான்.

இது கடிக்கில் அங்கு பிறையைப்போல் காயம் உண்டாகும் அப்போது வீக்கம், நமைச்சல், குத்தல், நோவு, சோருதல் மலத்தில் பலநிறம் என்னும் இக்குணங்களுண்டாகும் இவ்விஷத்திற்கு மூக்கில் குருத்து ரசம் காலுமாக்கில் மிளகு சூர்ணம் பலம்-வ - சேர்த்து - ஙு - நாள் - உ - வேளையும் சாப்பிடத்தீரும். இது பச்சை ஓணானுக்கும் தவளைக்கும் உதவும்.

## 2 வது தவளை.

இது கடிக்கில் அதிக சோம்பலான நித்திரையும் மூர்ச்சையும் கறுத்துப் பரவுகின்ற சொறியுமுண்டாகும். இவ்விஷம் ஓட்டறை, லவணம், உத்தாமணிவேர், இம்மூன்றையும் சமமாகநிறுத்துச் சிறுநீரால் அரைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு கடிவாயிலும் தேகமுற்றிலும் - அ நாள் லேபனம் பண்ணத்தீரும், லேபனம் மென்பது பூசித்தேய்த்தல்.

## 3 வது அட்டை.

இது கடிக்கில் அதிக நித்திரையும் மிகு மூர்ச்சையும் உண்டாகும்.

## 4 வது வீட்டுப்பல்லி.

இது கடிக்கில் நோவு, வியர்வை, வீக்கம், எரிச்சல், மார்பு வேதனை, பொடிச்சிரங்கு, எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும். இவ்விஷம், குதிரைச்செவி மருந்தின்வேர், பெருங்கரந்தைவேர், இவ்விரண்டும் வகைக்குப் பலம் உ - ஆகச்சேர்த்து அதை பாகலிலைச்சாறும், பசும்பாலும் சமமாகக் கலந்துவிட்டு அரைத்து தடிப்பாக வைத்துக்கொண்டு கடிவாயில் லேபனம் பண்ணி உடம்பெங்கும் துவாலையிடத்தீரும். இவ்விஷம்கொடிய

தென்றும் ஆதிவிரைவில் மகாவிஷ சிகிச்சைகளைச் செய்யவேண்டுமென்றும் இல்லாவிடில் ஒருவருஷத்துக்குள் மரணம் உண்டாகுமென்றும் சில நூல்களில் சொல்லுகின்றது.

## 5 வது காட்டுமசகம்.

இது கடிக்கில் அவ்விடத்தில் நமைச்சலும், அற்ப வீக்கமும், வேதனையும் உண்டாகும் இது அசாத்தியம் ஆயினும் நீலியிலை கலிகத்தாலும் அவ்வேரின் கஷாயத்தாலும் போம் மசகம் என்பது கொசுவு.

## 6 வது மக்ஷிகா.

இது கடித்தாலும் கொட்டினாலும் அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல், எரிச்சல் முதலிய குணங்கள் உடனே உண்டாகி அடங்கி பின்பு தடித்து உபத்திரவம் உண்டாவதும் தவிர அத்தடிப்பில் மாறாது சிலைத்தண்ணீரும் வடியும். (மக்ஷிகா) வென்பது குளவி முதலிய வண்டுகளாம்.

## 7 வது மலைப்பீலிகா.

இது கடிக்கில் அவ்விடத்தில் நீர்துளியைப்போல் தடித்தல் அதிக நோவு நெருப்பால் சுட்டதுபோல் எரிச்சல், நமைச்சல், தேகத்தில் அழலை என்னும் இக்குணங்கள் உண்டாகும். (பீலிகா)யென்பது எறும்பு.

## 8 வது சிலந்திப்பூச்சியின்பேதம்.

சிலந்திப்பூச்சி (உஅ) பேதப்படும். அதன் விவரம் வாதத்தில் (7) பித்தத்தில் (7) சிலேஷ்மத்தில் (7) சங்கிரணத்தில் (7) ஆக இருபத்தெட்டாம் தவிரவும் பிரத்தியேகச் சிலந்தி என்பது ஒன்றுண்டு.

---

## வாதச்சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் வெளுப்பு, சிவப்பு, நிறத்தையும் ஆசனத்தில் சித்திரங்களான மெல்லிய நூலையும் உள்ளதுகளாயிருக்கும். இவ்



விஷங்களால் இருமல் முதலிய வாதரோக குணங்களெல்லாம் உண்டாகும்.

## 1 வது பீதச்சிலந்தி விஷம்.

இது தலைநோவும் அரோசகமும் சுரமும் உண்டாகும்.

## 2 வது குமுதச்சிலந்தி விஷம்.

இது பட்ட இடத்தில் கொப்பிளங்கள் எழும்பி அதில் நின்றும் மாறாது சீழ்வடிவதும், எரிச்சல் பிறப்பதுமாக இருக்கும் இதனால் இளைப்பும் நெஞ்சடைப்பும் உண்டாகும்.

## 3 வது மூலச்சிலந்தி விஷம்.

இது அதிக கொப்பிளங்களையும் அக்கினிக் குணத்தையும் உண்டாக்கும்.

## 4 வது ரத்தசிலந்தி விஷம்.

இது பட்டவிடத்தில் சிவந்து தடித்து அதைச் சுற்றிலும் சிறிய கொப்பிளங்கள் எழும்பி அதில் நின்றும் ஓயாது ரத்தமும் சீழும் வடிந்துக்கொண்டேயிருக்கும், இதனால் இளைப்பும் பேதியும் உண்டாகும்.

## 5 வது சித்திரச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் சிவந்த கொப்பிளங்கள் எழும்பி அவைகள் பழுத்து உடைந்தபின்பு அங்கு கறுத்த விரணமாகி அதில் நின்றும் நுரைபோல் சீழ்வடிவதாயிருக்கும் இதனால் தலையிலும், கீல்களிலும், நோவு, சுரம், இளைப்பு, வீக்கம், என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

## 6 வது சந்தானிகச் சிலந்தி விஷம்.

இது பட்டவிடத்தில் சகிக்கக்கூடாத குத்தலும் விரணமும் உண்டாகும்.

## 7 வது மேகச்சிலந்தி விஷம்.

இது நீலநிறம் உள்ளது இவ்விஷத்தினால் அநேகக்கொப்பிளங்கள் எழும்பும்.

ஆக வாதசிலந்தி எ - ம் முற்றியது.

---

## பித்தச்சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் கருமை பொன்மை கலந்த நிறத்துடன் முகத்தில் அனலையும் ஆசனத்தில் தாமரை நூலைப்போல் நூலையும் உள்ளதுகளாயிருக்கும். இவ்விஷங்களால் முக்கியமாகப் பித்தரோக குணங்கள் உண்டாகும்.

### 1 வது கபிலாசிலந்திவிஷம்.

இது கண்களினால் பார்க்கில் தேகமுற்றும் சிவந்த தடிப்பும் வாய்நீர் ஊறலும் மயிர்க்கால்களில் எரிச்சலும் தலைப்பாரமுமுண்டாகும்.

### 2 வது அக்கினி முகச்சிலந்தி விஷம்.

இது அதிக கோவையும் நெருப்பாற் சுட்ட கொப்பிளங்கள் போல் கொப்பிளங்களையும் பிறப்பிக்கும் இதனால் தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, ரத்தம் வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 3 வது பீதச்சிலந்தி விஷம்.

இது பட்டயிடத்தில் கட்டை நெருப்பாற் சுட்டதுபோல் இருத்தல் மூர்ச்சை, வாந்தி, சிரோவேதனை, சுரம், அரோசகம் சூலை, மலமும் மூத்திரமும் மஞ்சளித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 4 வது பதுமச்சிலந்தியின்விஷம்.

இது பட்டயிடத்தில் தாமரைப்பூவைப்போல் வட்டவடிவான கொப்பிளம் உண்டாவதும் மறைவதும் பின்பு எழும்புவதும் அதில் மாறுது சலம் வடிவதும் நோதலுமாயிருக்கும்.

### 5 வது மூத்திரச்சிலந்தி விஷம்.

இது பட்டயிடத்தில் கருப்பு சிவப்பு நிறமான கொப்பிளம் எழும்பித் துர்க்கந்த விரணம் பிறக்கும் இதனால் இருமல், இளைப்பு, சுரம், வாந்தி, தாகம், மூர்ச்சை, பிரமை என்னும் இக்குணங்கள் உண்டாகும்.



### 6 வது சுவேதச்சிலந்தி விஷம்.

இது பட்டயிடத்தில் விசர்ப்பிரோகக் கொப்பிளம்போல் கொப்பிளமும் எழும்புவதன்றியும் அதில் மாறுது சலம் வடிதல் தாகம், மூர்ச்சை, சுரம், நோவு என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 7 வது கறுப்புச்சிலந்தி விஷம்.

இது பட்டயிடத்தில் கறுத்த வீக்கம் உண்டாகி விரணம் பிறக்கும் அதில் துர்க்கந்தத்துடன் நிற்பேதமான ரத்தமும் சீழும் மாறுது வடிந்துகொண்டேயிருக்கும்.

ஆக பித்தச்சிலந்தி எ - ம் முற்றியது.

---

## சிலேஷ்மச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் வெண்மை நிறத்தையும் குடலில் நீலநிறத்தையும் ஆசனத்தில் சிவந்த நூலையும் உள்ளதுகளாயிருக்கும். இவ்விஷங்களால் சிலேஷ்மரோக குணங்களெல்லாம் உண்டாகும்.

### 1 வது பாண்டுச்சிலந்தி விஷம்.

இது பட்டயிடத்தில் வீக்கத்துடன் கனத்த விரணம் பிறக்கும் இதனால் சுரமும் ரோமச் சிலிர்ப்பும் சிரோபாரமும் உண்டாகும்.

### 2 வது ரத்தப்பாண்டுச் சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் வெளுத்துத் தடித்து விரணமாகி ரத்தம் வடியும்.

### 3 வது வண்டுச் சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் வண்டைப்போல் கறுத்த கொப்பிளம் உண்டாகி அதைச்சுற்றிலும் எரிச்சலைத் தருகின்ற சிறுசிறு கொப்பிளம் பிறக்கும் அன்றியும் தேகமெல்லாம் கறுத்த மச்சங்களும் எழும்பும்.

### 4 வது பிங்கச்சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் கொப்பிளம் எழும்பி அதில் நின்றும் ரத்தம் ஒழுகும் இதனால் சுரம், நோவு, வீக்கம், அதிக எரி

ச்சல், தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும் (லிங்கம்) எல் பது மஞ்சள் நிறம்.

### 5 வது திரிமண்டலச் சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் கறுத்த விரணம் உண்டாகி அதில் நின்றும் ரத்தம் வடியும் இதனால் அரோசகம் கண் எரிச்சல் உடம்பிலும் முகத்திலும் மச்சங்கள் எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 6-வது தூர்க்கந்தச்சிலந்திவிஷம்

இது பட்டயிடத்தில் பேய்ச்சுரைப் பிஞ்சைப்போல் கட்டி எழும்பி அதைச்சுற்றிலும் நெருங்கிய சிறுசிறு கொப்பிளம் எழும்பும் இதனால் விசர்ப்பிகுணமும் வியர்வையும் தூர்க்கந்தமும் யெரிச்சலும் பிறக்கும்.

### 7-வது சித்திரமண்டலச்சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் விசர்ப்பிபோல் விரணம்உண்டாகி அதைச் சுற்றிக்கொப்பிளங்கள் யெழும்பும்.

ஆக சிலேஷ்மச்சிலந்தி - எ ம் முற்றியது

—*—

### சங்கீரணச் சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் ஆசனத்தில் பலநிறநூலேயும் நெருப்பாற்சுட்டது போல் எரிச்சலும் திரிதோஷகுணங்களையும உள்ளதுகளாயிருக்கும் இவ்விஷங்கள் சாத்தியமும் கஷ்டசாத்தியமும் அசாத்தியமும் ஆகும்.

### 1-வதுகாகச்சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் வெளுத்தும் சிவந்தும், பூனைப்புடுக்கன் காயினது, விரையைப்போல் கொப்பிளமெழும்பும் இதனால் அதிகவேதனைவிக்கல் இளைப்பு, மிகுந்ததாகம் மூர்ச்சை நித்திரைபங்கம் சதாமார்பு நோவுஎன்னும் இக்குணங்கள்உண்டாகும்.

### 2-வது அக்கினிபாதச்சிலந்தி.

இது கால்கள்தோறும் விஷமுள்ளது அக்கால்கள்தேகத்தில் படில் பட்டயிடமெல்லாம் கொப்பிளங்கள்உண்டாகும்.



### 3-வது லாஜவர்ணச்சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் தூர்க்கந்த விரணம்பிறந்து அதில்சுப்பலாக்குத்துவதுபோல்குத்தலும், ரத்தமும், பெருகும் இதனால் சீதசுரம், தாகம், மூர்ச்சை பேதிஎன்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 4 - வது வைதேகிச்சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் நெருப்பினால் சுட்டதுபோலிருக்கும் இதனால் அதிகவேதனையும் சுரமும் மோகமும் மார்புநோவும் உண்டாகும்.

### 5 -வது ஜாலமாலினிச்சிலந்திவிஷம்.

இது பட்டயிடத்தில் விரணம்பிறந்து அதன்மேல்பச்சமும் விக்கமும், எழும்பும், இதனால் நோவு, தாகம்பிரமை இரைப்பு தேகம்மரத்தல் மோகம் பேதியென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 6-வது மாலாகுணச்சிலந்திவிஷம்.

இது தேகமுழுதும் மச்சங்களைப்போல் கறுத்ததடிப்புகளை யெழுப்பும் இதனால் உள்ளில் யெரிச்சல். மேலில், குளிர்ச்சி,வயிறுப்பல், மூத்திரக்கிரிச்சரம் மூர்ச்சை, பேதி, சுரம், தலைநோவு, கண்ணோவு இளைப்பு, தாகம், வீக்கம்,யென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 7 - வது சுவர்ச்சிலந்தி விஷம்.

இது வர்ன்னபேதமாயிருக்கும் இவ்விஷத்தினால் பலநிறக் கொப்பிளம் பிறக்கும்.

ஆக சங்கீரணச்சிலந்தி 7 - ம் முற்றியது.

—*—

### பிரத்தியேகச் சிலந்திலக்ஷணம்.

இது புணருங்காலத்தில் அச்சுக்கிலத்துளி எத்தனை தெரிக்கின்றதுகளோ அத்தனை கொப்பிளங்கள் விரைவில் உண்டாகும்

### சிலந்திக்கடிக்கும் ஸ்தானநிதானம்.

கபிலா சிலந்திமூக்கில் அக்கினிமுகச்சிலந்தி சந்தில்தானபரம்புகளில் பீதச்சிலந்தி காலடைகளில் பதுமச்சிலந்தி இடதுகண்

ணில் அர்க்கச்சிலந்தி வலதுகண்ணில் மூலவிஷச்சிலந்திசுவேதச்சிலந்தி, மூத்திரச்சிலந்தி, கறுப்புச்சிலந்தி, ஆகியனான்கும் வலதுபுஜத்தில், பாண்டுச்சிலந்தி காதில், ரத்தபாண்டுச்சிலந்தி இடதுவிலாவில், வண்டுச்சிலந்தி வலதுவிலாவில், பிங்கச்சிலந்தி வயிற்றில், திரிமண்டலச்சிலந்தி முதுகில், பீதச்சிலந்தி கையில், குமுகச்சிலந்தி நாபியில், சித்திரமண்டலச்சிலந்தி இடதுதோளில் சிரசில், ரத்தச்சிலந்தி காதில், சித்திரச்சிலந்தி நெற்றியில், சந்நாளிகச்சிலந்தி உதட்டில், ரோஜகச்சிலந்தி சிரசில் உள்ளங்கையில், அக்கினிபாதச்சிலந்தி கண்டத்தில், காகச்சிலந்தி மார்பில், லாஜாவர்ணச்சிலந்தி தனத்தில், வைதேகிச்சிலந்தி தோளில், சாமமாலினிச்சிலந்தி கடைக்கண்ணில், மகாருணச்சிலந்தி மார்பின் பள்ளத்தில், சுவர்ச்சிலந்தி காதுக்குப்பின்புறத்தில் கடிக்கும்.

## கடிகால நிதானம்.

சிலந்திப்பூச்சி சுக்கிலபக்ஷ திதிகளில் சாயங்காலவேளையிற் கடிக்கும் இவ்விஷங்களினால் கடித்தவாயில் வெளுப்பு, கறுப்பு சிவப்பு, மஞ்சள், என்னும் நிறமாகவும் இருப்பதன்றியும் அவ்விடத்தில் மிருதுவாகவுயர்ந்து கடித்த அத்தடிப்பைச்சுற்றிலும் சிறுசிறு கொப்புளம்உண்டாகும் அக்கொப்புளச்சலம்பட்டவிடமெல்லாம் கொப்புளிக்கும் இதனால் விச்சிப்பைரோகத்திலும் சோபைரோகத்திலும் உண்டாமென்ற வருத்தமும் சுரமும் வியர்வையும் உண்டாகும்.

(சிலந்தியின்சப்தவேகவிஷநிதானம்)

மேற்கூறியவிஷமானது தேகத்தில்வியாபித்த.

1 வது நாளில் அவ்விடத்தில் நிறம்தோற்றுமல் கொஞ்சம்நோவு உண்டாகுதல்.

2-வது நாளில் இயற்கை வர்னத்துடன் தடித்து நிலவேம்பின்கூடிய சிறியகட்டிகள் யெழும்புதல்.

3-வது நாளில் அகல் கவிழ்த்ததுபோல் தடித்துச்சிவந்து அவ்விடத்தில் உரோமரோமங்கள் சிலிர்ப்பதுமன்றி அந்தமயிர்க்கால்களில் ரத்தம் கசிவுஞ்சுரமுண்டாகுதல்.



4-வது நாளில் அங்குலிக்கம் யெரிச்சல் யிளைப்பு பிரமை இவை உண்டாகுதல்.

5-வது நாளில் விஷதுர்க்குணங்களெல்லாம் அதிகரிக்குதல்.

6-வது நாளில் அவ்விஷம்மர்மஸ்தானங்களில் வியாபிக்குதல்.

7-வது நாளில் உயிர்க்கு அபாயம்வருகுதல் யென்றறிக.

ஆகையால் அவ்விஷங்களில் உத்தம மத்திம அதமாதங்களின் பலாபலங்களை அறிந்து தகுந்தபடி மந்திர அவுஷதாதிகளினால்சிகிச்சைசெய்யில். 21 - நாளில் சுகுணம்உண்டாகும் ஒருநாள் இரண்டுநாள் கடிவாயில் எரிவுண்டாகி அடங்கிப்பின்பு கொப்பளமும் யெழும்பும்யென்பர்.

## சர்வசிலந்திகளின் சாமானிய விஷலக்ஷணம்.

சிலந்திபூச்சிகளின் விஷம்யேறினால் அவ்விடத்தில் யெழும்புகின்ற விரணங்களில் சிலது கொப்புளங்களாயும் சிலது மண்டலாகாரமாயும் சிலது சுவேத நிறமாயும் சிலது சிவந்த நிறமாயும் சிலது மஞ்சள் நிறமாயும், சிலது நீலநிறமாயும், சிலது மிருதுவாயும், சிலது கடினமாயும் இருக்கும் எட்டுக்கால் பூச்சியும் இச்சிலந்திப் பூச்சிகளின் பேதமேயாம்.

## சிலந்தியின் அஷ்டவிஷபேதம்.

சிலந்திப்பூச்சிகளின் சுவாசம் பல்லு, மலம், மூத்திரம், சுக்கிலம், வாய், வாய்நீர், ஸ்பரிசம் என்னும் எட்டுஸ்தானங்களில் நின்றும் விஷங்கள் பிறக்கும் அவைகளில் மனிதர்மீது படில் சகல துர்க்குணங்களும் உண்டாகும்.

### 1 வது சிலந்தியின்சுவாசம்.

இது சுரத்தையும் மிகுந்த தாகத்தையும் உண்டாக்கும்.

### 2 வது சிலந்தியின் பல்.

இது அழுந்திய விடத்தில் பிறக்கின்ற விரணம் நிறபேதமும் கடினமும் ஸ்திரமும் உள்ளதாயிருக்கும் இதனால் சரீரத்தில் வீக்கம், எரிச்சல், வேதனை, வியர்வை, தாகம் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 3. வது சிலந்தியின் மலம்.

இது பட்டவிடத்தில் இலுப்பைப்பூரம்போல் வெளுத்த விரணம் பிறந்து அதில் நீர்க்கசிவும் எரிவும் பசபசவென்கிற தினவும் உண்டாகும்.

### 4 வது சிலந்தியின் மூத்திரம்.

இது பட்டவிடத்தில் நடுவில் கருத்தும் உயர்ந்தும் சுற்றிலும் வாடியும் புஷ்பம்போல் மலர்ந்துமிருக்கின்ற விரணம் பிறக்கும் அதில் நீர்க்கசிவும் யெரிச்சலும் மாறுதலுமுண்டாகும்.

### 5 வது சிலந்தியின் சுக்கிலம்.

இது பட்டவிடத்தில் கடினமான கொப்பளமும் நோவும் உண்டாகும்.

### 6 வது சிலந்தியின் வாய்.

இது பட்டவிடத்தில் முருக்கம்பூவைப்போல் நிறமுள்ள விரணம் பிறந்து அதில் குத்தலும் எரிவும் உண்டாகும்.

### 7 வது சிலந்தியின் வாய்நீர்.

இது பட்டவிடத்தில் புங்கின்பூவைப்போல் நிறமுள்ள விரணம் பிறக்கும் அவ்விரணத்தின் பக்கங்களில் பூச்சி யூருவது போல் பறபறத்தலும் ஊசியால் குத்துவதுபோல் குத்தலும் யெரிச்சலும் உண்டாகும்.

### 8 வது சிலந்தியின் ஸ்பரிசம்.

இது தேகத்தில் பட்டாலும் இப்பரிசத்தைப்பெற்ற வஸ்திரம் பட்டாலும் முற்கூறிய குணங்களெல்லாம் விரைவில் உண்டாகும்.

சிலந்திப்பூச்சியின் விஷநிதானம் முற்றியது.

——*——

## சகல சிலந்திவிஷத்திற்கும்

## அவுஷதம்.

மேற்கூறிய சகல சிலந்திவிஷங்களுக்கும் சங்கம்வேர்ப்பட்டை மிளகு இவ்விரண்டையும் வகைக்குப் பலம் ௨ - விதமாக



நிறுத்து மெழுகுபோல் அரைத்துப் பசுவினது நெய்யில் குழைத்து (உக) நாள் இரண்டு வேளையும் சாப்பிட்டு இச்சாபத்தியம் இருக்கில் தீரும். அல்லது நிரிப்பல்லைத் தூளாக்கி அதில் கற்றாழைரசத்தை விட்டு நன்றாக அரைத்துக் கடிவாயிலும் தேகமுற்றிலும் (உக) நாளைக்கு (3) வேளையும் லேபனம்பண்ணத்தீரும். அல்லது அவுரியினது சமூலமும் பலம் க - ஆக நிறுத்து அதில் நல்லஜலம் ௭ - படி விட்டு ௳ - ஆழாக்குக் கஷாயமாகக் காய்ச்சி எ - நாள் இரண்டு வேளையும் சாப்பிடத்தீரும். இவ்வாறே மும்முறை கொடுக்கவேண்டும் அல்லது சிறுசின்னியிலை ரசம் ௳ அளவாக யிரண்டு வேளையும் எ - நாள் ௩ - முறை சாப்பிட்டு உப்பில்லாப்பத்தியம் இருக்கிலும் விலகும்.

### மீன் விஷம்.

சிலமீன் கடிக்கில் நோவும் யெரிச்சலும் உண்டாகும் அன்றியும் நீர்வண்டு, குழல்வண்டு, பாசிவண்டு, யெரிவண்டு, முதலிய சிலவிஷம் உள்ளவைகள் கடிக்கில் அவ்விடத்தில் வீக்கம் நமைச்சல், நோவு, கண்சிவப்பு, சரீரத்தில் தடிப்பு என்னும் இக்குணங்கள் உண்டாகும் இவ்விஷம் பச்சை கஸ்தூரிவேரை மேல்தோலும் உள்நரம்புமீக்கிக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து கற்றாழைச்சோற்றில் கலந்து (௰) நாள் அருந்தியருந்தத்தீரும் இதற்கு யிச்சாபத்தியம்.

### நாட்டுமரவட்டை.

இது கடிக்கில் வியர்வை, நோவு, சீரம், தடித்தல், வீக்கம் கருப்பகத்திப்பூ நிறம்போல் பொடிச்சிரங்குகள் யெழும்புதல் பிரமையென்னு மிக்குணங்கள் உண்டாகும் இவ்விஷம் திரிகடுகு அல்லது காட்டுயொகைப் பஞ்சாங்கம்யென்பது வேர்மேல்பட்டை இலை பூ காய் ஆகிய இவ்வைந்தில் யாதேனும் ஒன்றை வெந்நீரிலரைத்துப் பிழிந்து வடிகட்டி நசியமும் லேபனமும் செய்து உள்ளுக்குங் கொடுக்கில் முறியும் இது மற்றை அட்டைகட்டும் உதவும் இதற்குச்(சதபதி)யென்றும் பெயர்.

——(*)——

## விருச்சிகோற்பத்தி.

சர்ப்பங்கள் செத்தழிந்த விடத்திலும் சாணம் கோணிப் பட்டை முதலியவை மக்கின விடத்திலும் மயானத்தின் சாம்பலிலும் பிறக்கும் இதுகள் முறையே வெளுத்தும் கறுத்தும் சிவந்தும் இருக்கும் இவற்றின் விஷம் ஏறினால் நாவுதடித்தல், தேகமரத்தல், அதிகநோவு, நாசியால் ரத்தம் விழுதல், சர்வாங்கத்திலும் வியர்வை மூர்ச்சை வாயுலரல் என்னும் இக்குணங்கள் உண்டாகும் இது மந்திரவலி அவுஷதவலி தெய்வவலி இம்மூன்றும் ஒத்துக்கொள்ளில் இறங்கும் விருச்சிகமென்பது (தேள்.)

## சாதாரணதேளின்பேதம்.

தேளானது உச்சிலிங்கத்தேள், வாதத்தேள், பித்தத்தேள், சிலேஷ்மத்தேள் என 4 விதப்படும். அன்றியும் நண்டு வாய்க்காலி ஒன்றுண்டு.

### 1 வது உச்சிலிங்கத்தேள்.

இது பகற்காலத்தில் கொட்டும் இவ்விஷத்தினால் அவ்விடத்தில் வீக்கம், நரம்புகளில் இருவேதனை ரோமச்சிலிர்ப்பு அதிகசீதளம் என்னும் இக்குணங்கள் உண்டாகும் இது மந்திரத்தால் வசப்படும்.

### 2 வது வாதத்தேள்.

இது மார்புநோவு, மேல்சுவாசம், எலும்பு, நரம்பு, கீல் இவைகளில் நோவு தேகங்கறுத்தல் கூச்சல் புரளல் முதலிய குணங்களை உண்டாக்கும்.

### 3 வது பித்தத்தேள்.

இது அறிவு நீங்குதல் கடுமையான மேல்மூச்சு வாயானது காரமாயிருக்குதல் முகத்தில் வெண்ணெய் தடவினதுபோல் பளபளப்பு மாமிசங்கரைதல் சோஷையென்னும் இக்குணங்களை உண்டாக்கும், அன்றியும் அவ்விடத்தில் வியர்வை கவுட்டியில் நெறிகட்டுதல், எரிச்சல், கடுத்தல், பருகாள் வரைக்கும் நோதல் என்னுமிக்குணங்க ளுண்டென்பாரு முளர்.



### 4 வது சிலேஷ்மத்தேள்.

இது வாந்தி அரோசகம் மார்பு அதிரல் வாயில் சலம் வடிதல் பீனசம் சரீரமுற்றிலும் வாழைத்தண்டையொத்த சீதளம் வாயினிப்பு என்னும் இக்குணங்களை உண்டாக்கும் இவ்விஷங்கள் கோழிமலம் உலர்ந்ததை நெருப்பில் இட்டுக் கடிவாயில் புகைபிடிக்கவிறங்கும் அல்லது கருநாவியைத் தண்ணீரில் உரைத்துக் கொட்டினவாயில் போடத்தீரும். அல்லது பூனைக்காஞ்சொறிச்சாறும், முருங்கிலைச்சாறும், முருங்கவிலைச்சாறும், கொட்டுவாயில் வேதுபிடிக்கக் குளிரும் அல்லது வெண்குன்றிவேரை வெந்நீரில் அரைத்துப் பிழிந்து வடிக்கட்டிப் பஞ்சில் ஊட்டிக் கொண்டு இடதுபக்கம் கொட்டினால் வலதுநாசியிலும் வலதுபக்கங் கொட்டினால் இடதுநாசியிலும் நசியம்பண்ணத் தீரும்.

## நண்டுவாய்க்காலி.

இது கொட்டினால் வியர்வையும் நெறி கட்டுதலும் வீக்கமும் கடுப்பும் குடைச்சலும் எரிச்சலும் குமுறலும் வாயில் நுரையும் உண்டாகும் இந்த விஷம் வெட்டிவேர்ப்பட்டையை நெருப்பெல்லிக்காய்ப் பிரமாணம் அரைத்து அரையாழாக்கு வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுப்பித்துக் கொட்டினவாயில் கத்தரிக்காயைச் சுட்டுக் கட்டினால் தீரும்.

## மூஷிகபேதம்.

மூஷிகமென்பது (௰௮) வகைப்படும் அவையாவன லாலனம் சாளம், புண்டரம், ஹரிதம், சிகுரம், அசிதம், கஷாயதந்தம் குருகம், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், சுவேதம் கபோதம், உந்துரு, பலினி, ரசாலம், என்பனவாம் அன்றியும் ககரியென்பது ஒன்றுண்டு இதுவே மூஞ்சூறு மூஷ்கம் என்பது எலி.

மூஷிகபேதமென்னும்

## எலிவிஷவகுப்பு.

**1**-வது லாலனஎலி.

மிகுந்த அலைச்சலை உடையதாயிருக்கும் யிதுகடிக்கில்வாந்தி மூர்ச்சை,வாய் நீர்ஊறல்,என்னும் யிக்குணங்கள்உண்டாகும்.

**2** வது சபளஎலி.

பல நிறத்தைப் பெற்றிருக்கும் யிதுகடிக்கில் திரிதோஷகுணத்துடன் வாந்தி, மிகுந்தமூர்ச்சை, அதிகதாகம் யென்னும்யிக்குணங்கள்உண்டாகும் சபளம்யென்பது பலநிறமாம்.

**3**-வது புண்டரஎலி.

பேய்க்கரும்பின் நிறத்தைப்பெற்றிருக்கும் யிதுகடிக்கில்சரீரம் வெளுறலும் அக்கரும்பு வர்ணமுள்ளவிரணமும்உண்டாகும்

**4**-வது ஹரிதஎலி.

மஞ்சள் நிறத்தைப்பெற்றிருக்கும் யிதுகடிக்கில் அக்கினிமந்தமும் கொட்டாவியும் மயிர்க்கூச்செரிதலும் உண்டாகும்.

**5**-வது சிகுரஎலி.

தேகமுற்றிலும் முளைத்த ரோமங்களைப் பெற்றிருக்கும் யிதுகடிக்கில் தலைநோவு, விக்கம், வாந்திபிரமை தேகமுற்றிலும் மச்சம் யென்னும் இக்குணங்கள் உண்டாகும் சிகுரமென்பது ரோமம்.

**6**-வது அசிதஎலி.

உடம்பில் கறிய நிறத்தைப்பெற்றிருக்கும் யிதுகடிக்கில் சரீரம் கறுத்தலும் மூர்ச்சையும் வாந்தியும் மார்புநோவும் உண்டாகும்.

**7**-வது கஷாயதந்தஎலி.

சிவந்தபற்களைப் பெற்றிருக்கும் யிதுகடிக்கில் சகாஉறக்கமும் மார்புவறளலும் மலபந்தமும் உண்டாகும் யிதனைத்தாம்கெலியென்பர்.



**8**-வது குருகஎலி.

மரக்கால்போல் உடலைப்பெற்றிருக்கும் யிதுகடிக்கில் சிவந்தமச்சங்களுடன் நோவுண்டாகும் குருகயென்பது மரக்கால்.

**9**-வது கோகிலஎலி.

குயில்போல் புள்ளிகளைப் பெற்றிருக்கும் யிதுகடிக்கில் பிரந்தியும் உக்கிரமான சுரமும், தாகமும் உண்டாகும் கோகிலம்யென்பது குயில்.

**10**-வது கபிலஎலி.

கபிலநிறம் உள்ளதாயிதுகடிக்கில் கண்டிகண்டாகயெழும்பிவிரணமாகும் யிதனால் சுரம்பிரமை வாந்தியென்னும் இக்குணங்கள்உண்டாகும்.

**11**-வது கிருஷ்ணஎலி.

கரிய நிறத்தைப்பெற்றிருக்கும் யிதுகடிக்கில் தினந்தோறும் ரத்த, வாந்தியும், மழைக்காலத்தில் அதிகரத்தம் விழுதலும் உண்டாகும்.

**12**-வது முதல் **17** வரையில் அருணாதிஎலியாறும்.

அருணம் சபலம், சுவேதம், கபோதம், உக்ரருபஸினி ஆக 6 - விதஎலிகளுங்கடிக்கில் திரிதோஷம் அதிகரித்து சந்நிபாதகுணங்கள் அதிகரித்தலுடன் கடித்தவிடத்தில் ரத்தம்வடிதல் கிரந்திகள் யெழும்புதல் காதின்கீழ்கட்டிகள் பிறத்தல்என்னும் இக்குணங்கள்உண்டாகும்.

**18**-வது ரசாலஎலி.

நாமக்கரும்பு நிறமாயிருக்கும் யிதுகடிக்கில் நெஞ்சுமரத்தலும் சொல்லக்கூடாத வேதனையும்உண்டாகும் சகலஎலிவிஷங்களும் தேகத்தில் அடங்கியிருந்து மழை மேகம் யெழும்புகிற காலத்தில் அதிகரிக்கும் பெருச்சாளிக்கும் யிவ்விஷம்உண்டு ரசாலம் யென்பது நாமக்கரும்பு.

எலி வகுப்புகள் **18**ம் முற்றியது.

## சுசுந்தரி.

இதுகடிக்கில் சரீரம்பினைத்தலும் பேதியும் வாய்பேசக்கூடாமையும் உண்டாகும் இதற்கு (கீலி) குபுநீர் ஆகும்.

## எலிச்சுக்கிலவிஷநிதானம்.

எலிகள் புணருங்காலத்தில் அச்சுக்கிலம்யார் மீதாவதுமிதறுமாகில் அந்தவிடத்தில் கிரந்திவீக்கம் மச்சங்கள்எழும்புதல்பிரமை அரோசகம் குளிர்க்காய்ச்சல் தலைநோவு, நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு மூர்ச்சை சிலேஷ்மாதிக்கம் வாந்திதாகம் முதலியகுணங்களுண்டாகும்.

## அசாத்தியஎலிவிஷலக்ஷணம்.

எந்தஎலியினாலாவது மயக்கம், தேகவீக்கம், மாறுருவம் வியர்வை காதுமந்தம் சுரம், தலைநோவு, வாய்நீர்வரல் ரத்தவாந்தியென்னும் இக்குணங்கள் உண்டாகில் அசாத்தியமே.

## மேற்கூறியஎலிவிஷத்துக்குசிகிச்சை.

இருமல், இரைப்பு, கோழை, வாந்தி, முதலியதுர்க்குணங்களை பிறப்பிக்கிற எலிவிஷத்திற்கு அழிஞ்சிவேர்ப்பட்டையை புளிக்காய்வீதம் வெந்நீரிலரைத்து 8 - நாள் இரண்டுவேளையும் கொடுக்கில்தீரும் குரட்டைஎலி சண்டைஎலியிவைகளின் விஷம் இலந்தைக்காய் அளவுபனைவெல்லத்தில் 8 - துளி எருக்கம்பால் விட்டு மத்தித்து 7 - நாள் சாப்பிடத்தீரும் வயிற்றில் ரத்தபாய்ச்சலையும் பல்லுகளில் குடைச்சலையும் தருகின்ற எலிவிஷம் அவுரிவேரை நெல்லிக்காயளவு உ - ஆழாக்குபாகம் பாலிலரைத்துக்கரைத்து 8 - நாள் உள்ளுக்குக்கொடுத்து அந்தஇலையை அரைத்துக்கடிவாயில் துவாலையிடத்தீரும் இன்னும் நீலக்காக்கணம் வேரைச்சிறிய கொட்டைப்பாக்குப் பிரமாணமாக அரைத்துக் காலையில்மாத்திரம் 7 - நாள் அல்லது 5 - நாள் சாப்பிடத்தீரும் இவைகட்கு உப்பில்லாப்பத்தியம்.



## சகல எலிவிஷத்திற்கும் வேறுவகை,

### அதுகள் கடித்ததற்கு ஔஷதம்.

திருவடிவிளக்கன், மாரபுத்திரன், உதிரமண்டலி, அருணன், குலந்தன், மந்திரி, முக்கிணாயன், உக்கிரியன், விரிசெங்கன், விஜயன், அலியன், உத்தமன், இவை ௰உ-க்கும் அதின் குணமும் ஔஷதமும் இதினடியிற் காண்க.

### திருவடிவிளக்கன் எலி.

இது கடிக்கில் கண் சிவந்து தேகம் சொரியாகும் கோரைக்கிழங்கு என்னும் முத்தகாசம் இந்துப்பும் தேனில் குடிக்க.

### மாரபுத்திரன் எலி.

இது கடித்தால் சரீரத்திற்குள் வெதும்பும் எரிக்கும் தலைசுண்டி வாய்சாத்தமாகும். அதற்கு வாகைப்பட்டையும் அதின் விதையும் தேனில் அரைத்துக் குடிக்க.

### உதிரமண்டலி எலி.

இது கடித்தால் சிறுநீர் ரத்தம்போலிருக்கும் கடிவாயில் வட்டம்போல் இருக்கும் அதற்கு மஞ்சள் பற்பாடகமும் நெய்யில் அரைத்துக் கொடுக்க.

### அருணன் எலி.

இது கடிக்கில் உடம்பு கருக்கும் இருப்புல் தேகமினைக்கும் அதற்கு முத்தகாசம் பர்ப்பாடகமும் தேனிலரைத்துக் குடிக்க.

### குலந்தன் எலி.

இது கடிக்கில் உடம்பு குளிர்ந்து நடுக்கங்காணும். அதற்கு செஞ்சந்தனம் தேனில் அரைத்துக் குடிக்க.

### மந்திரி எலி.

இது கடிக்கில் சொரியாகி தினவாகும் பாவட்டம் இலை மாடப்புறா எச்சம் இவைகளை அரைத்து முகத்திலும் காதிலும் பூசி காக்கணவேர், கருவேல்பட்டை, வில்வவேர் சமன் தேனில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

### முத்திரையன் எலி.

இது கடித்தால் உடம்பு வெளுப்புண்டாகும். அதற்கு வாலக விளையை சூரணித்து தேனில் கொடுக்க.

### உத்திரியன் எலி.

இது கடித்தால் உடம்பில் கொப்புளங்களாகும் அதற்கு தகரவிரையை காடியிலரைத்து பூசி உள்ளுக்கும் கொடுக்க தீரும்.

### விரிசங்கன் எலி.

இது கடித்தால் காதுகோளாது வீங்கும் உடம்பெரியும் அதற்கு கடுகுரோகணியும் கற்கண்டும் கொடுக்கத் தீரும்.

### விசையன் எலி.

இது கடித்தால் வாய்நீருண்டாகும் வீங்கும், உடம்பு கழறும், கிலுகிலுக்கும் அதற்கு நாழி உளுந்தும் அரிசியும் விளாக்காசதையும் அரைத்து நெய்யில் குழைத்து உடம்பிலும் தலையிலும் பூச நீங்கும்.

### அலியன் எலி.

இதுகடித்தால் உடம்பு தத்துபோல்காணும் வீங்கும் கண் கருக்கும் அதற்கு சிறுகீரைவேரை தேனில் குழைத்து குடிக்க.

### உக்கிரன் எலி.

இது கடித்தால் திரேகமெங்கும் கொப்புளமாகும் அதற்கு பாஷாணபேதி இலைசாறும் புளிச்சாறும் தேனில்மத்தித்துக் கொடுத்து உடம்பிலும் பூச நீங்கும்.

மேற்கண்ட நாமமுடைய எலிகடித்தால் மேற்கண்ட விதமாக நோய்கள் உண்டானால் மேற்கண்டபடி அவிழ்தங்களை 10, 15 நாள் கொடுக்க நிவர்த்தியாகும் அப்படி வியாதிகளை கவனிக்காமல் வேறு சம்பந்த வியாதிகள் என்று மதித்து பலவாரான அவிழ்தங்களை கொடுப்பதில் வியாதிகள் நீங்காமல் போவதுமன்றி அவிழ்தங்கள் புகைந்து முன்னேறும் பேரில் பிறைமுகமாவது வீணல்லவா.



### எலிகளின் கடிவிஷக் குறிகள்.

### அவைகட்கு நிவர்த்திகள்.

எலிகடி பல்லிலையும் உளையும் இரத்தமுங் கண்டால் அவுரிவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் ஏழு நாள் கொடுக்கத் தீரும்.

தேகத்தில் கொப்பிளங் கண்டால்.

பெருமரப்பட்டை, பிசின், வேர், இம்மூன்றையும் சமனெடுத்துச் சூரணித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்துக் கால்மண்டலங் கொள்ளத் தீரும்.

சுவாசகாசங் கண்டால்.

சங்கு, வெள்ளைக் காக்கட்டான் இவ்விருவகை வேர்களையும் அரைத்து ஆவின்பாலில் கொடுத்துவரத் தீரும்.

உடல் பூரித்து இருமல் இளைப்புங் கண்டால்.

கோரைக்கிழங்கைச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற் சாப்பிட்டுவந்தால் தீரும். இதன்றியும் வேர்ப்பட்டையை ஒரு புன்னைக்காய் பிரமாணம் அரைத்து வெந்நீரில் ஏழுநாள் காலையில் கொடுக்கத் தீரும்.

இருமல்கண்டால்.

நாயுருவி சமூலம் அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

இரைப்புகண்டால்.

மூக்கரைச் சாரணைவேரை ஆவின்பாலில் வேகவைத்து உலர்த்திச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

உடல்வெதும்பித் திகைத்தால்.

நாவல்க்காயுந் தேனியும் அரைத்துச் சாப்பிட்டுவரத் தீரும்.

உடல்வீங்கினால்.

நீலக்காக்கட்டான்வேரை ஒருகொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து ஆவின்மோரில் கொடுக்கத்தீரும் அவுரிச்சாற்றை தேகத்திற்கு பூசவும்.

கைகால் வராவிட்டால்.

அவுரிவேர் சங்கம்வேர் இவ்விரண்டையும் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்.

உடலிற்கழலைபோலும், பிலாவித்துபோலும்.
தடித்தால்.

வெல்லத்தில் ஏழு துளி வெள்ளெருக்கம் பால்விட்டு ஏழுநாள் கொடுக்கத்தீரும். எருமைச் சாணிப்பாலை மாகாணிப்படிவிதம் மூன்றுநாள் கொடுத்து அந்தச்சாணியை வருக்க ஒத்திடச்செய்யவும். வெள்ளை ஆதளைக்கிழங்கை அரைத்துக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரில் ஏழுநாள் கொடுக்கத்தீரும்.

முகத்தில் கருவங்குபோலும், தேகத்தில் குஷ்டம்போலும்.
கழுகணையைப்போலும், விழுந்தால்.

ஆடுதின்னாப்பாளைவேர் சங்கவேர் இவ்விரண்டையும் சூரணித்துக் கால்மண்டலங் கொள்ளத்தீரும்.

கைகால் உளையும், கண் கறுக்கும், உடம்பிற் கழலைபோற்கட்டித் தினவெடுக்கும் வெடித்துப்புண்ணாகும். இதற்கு,

சித்திரமூலம் } குமட்பாலை
சிவனிவேம்பு } வெள்ளறுகு

இந்நான்கையும் சூரணித்து திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

உடல் குளிர்ந்து விக்கி, கடுவாய் பட்டாற்போலிருந்தால்.

செஞ்சந்தனம் திப்பிலி, இவ்விரண்டையும் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத் தீரும்.

கால்கை முடங்குவதற்கும்.

அழுக்குராக்கிழங்கைச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணமாகத் தேனில் ஒரு மண்டலங்கொள்ளத்தீரும். வெடி கிழங்கை அரைத்துப் பூசிவரத் தீரும். அவுரிசமூலம் இடித்துச் சாறு வாங்கி மாகாணிப்படிவிதம் உள்ளுக்குக்கொடுத்து அந்தச் சாற்றை உடம்பெங்கும்பூசி முழுக்கச் சகல எலிகளின்விஷம் நீங்கும். விழுதிவேரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் வெந்நீரில் மூன்றுநாள் கொடுக்கத் தீரும். பேய்ப்பீர்க்கிலைச் சா



ற்றை மாகாணிப்படிவிதம் 3 நாள் கொடுக்க சகல எலிகளின் விஷந்தீரும் இதுகளுக்கு பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

—*—

## நாய்கடிக்கு.

நாராக்கரந்தை, நன்னாரி, சென்னாயுருவி இந்த (3)இலையும் எள்ளும் புகையூறலும் சேர்த்தரைத்து கடிவாயிற் பூசவும். மேலும் கோவையிலையை அரைத்துப்பூசவும். சுண்டையிலையும் உப்பும் அரைத்துப் பூசினாலும் தீரும்.

—*—

நாய், நரி, சிறுபுலி, குரங்கு.
பூனை, குதிரை, மிதளை, வேங்கை, கடிவிஷத்துக்கு.

அவுரிவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலிற் கலக்கிமூன்றுநாள் கொடுத்து அந்தவேரை அரைத்து கடிவாயிற் பூசத்தீரும். விழுதியிலைச்சாற்றை மூன்றுநாள் கொடுக்கத்தீரும் கொல்லங் கோவைக் கிழங்கை ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து வெந்நீரில் (3) நாள் கொடுத்து அதை அரைத்துக் கடிவாயிற் பூசவும்.

மனிதர், பேய்நாய், பேய்நரி.
பெருச்சாளி, எலி கடிகளின், விஷத்துக்கு.

இமங்குசிந்திப்பட்டையை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரிற் கலக்கி (3) நாள் காலையில் கொடுக்கத்தீரும் இந்த மருந்தினால் வாந்தி பிராந்தியுண்டானால். சுக்கு, மிளகு, வசம்புக்கரி இந்த 3 பங்கையொன்றுக்கு விராகனிடை 1 முருங்கை ஈர்க்கு, ஒருபிடி. இவைகளை இடித்து அரைப்படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்ற வைத்துக் கொடுக்க வாந்தி நிற்கும்.

—:—

## பேய்நாய்.

இதுகடித்தால் அவ்விடத்தில் விரணம் பிறக்கும் இதனால் சரீரமெல்லாம் வாய்நீரூறல் கண்மயக்கம் தாகமுங்கம் தேஜசுகிக

குதல் தாள்பிடிப்பு சிரோபாரம் தூக்கும்போது அவ்விரணத்தில்
நின்றும் கறுத்தரத்தம்வடிதல் மார்புநோய் சுரம் தேகம் மரத்தல்
தாகம் மூர்ச்சையென்னும் மிக்குணங்கள் உண்டாகும் இதற்குச்
சுற்றுமுறையட்டவும் லவணமும் சமமாகவிடித்துக் கடிவாயில் -
**3** - தினம் கட்டுவதும் தவிர பேய்த்திவேர், ஆலம்பட்டை,
வேப்பிலை, - **3** - ம் வகை கூ-றி பலம் ம் ஆக கூட்டிடியிடித்து ஒரு
படி கழுநீர்போட்டுக் கொதிப்பித்துக் குழம்பாயிறக்கி ஏழுநாள்
மேவிச்சூதி மருந்தால் விரோசனமும் செய்விக்கத்தீரும்.

## சகலமிருகஜெந்துக்களின் விஷநிதானம்.

குதிரை, புலி, கரடி, காட்டுப்பன்றி, கோணாய், நரி, பூனை, மாயப்பூ
னை குரங்கு, கீரி, முதலை, முதலியஜெந்துக்கள் கடிக்கில் அந்த கோ
ரைத்தந்தங்களில் இருக்கின்ற விஷத்தினால் நிறைவு உருவபேதம்
நோவு நித்திரையில் வியர்வை தழுழுதல் சுரம் பிரமைதாகம் வீக்
கம் கிராந்தி மயக்கம் கடிவாயில் மச்சமும் அதன்மேல் கொப்பள
மும் எழும்பிப்புடையும் அனேகரோகமும் பிறக்குதல் என்னுமிக்
குணங்கள் உண்டாகும் இவைகட்கு உடனே ரசகந்தக பாஷாண
வருக்கம் சேர்ந்த விஷமருந்துகளைக் கடிவாயில்வைத்துக் கட்டி
அந்தயிடத்தில் ரோமங்கள் முளைக்கவொட்டாத விரணஞ்செய்
வித்து அனைக்காலந்திருத்தில் ஆற்றுவதுந்தவிர அந்த அவுஷத
ங்களை உள்ளுக்குங் கொடுப்பிக்கில் தைவிஷம் சாந்தியமாம்இவ்
வளவு பெரியசிகிச்சைகளைச் செய்யாவிடின் யென்றால் அவ்விஷ
ங்கள் அற்பமேனும் தேகத்தில் தங்கி ஊறுமாயின்பின்பு சகலது
ர்க்குணங்களும்பிறக்கும் ஆதலால் செய்யவேண்டும் இதுதப்பிக்
காலாதிதச் சிகிச்சை செய்யில் விஷமும்முதிர்ந்து அந்தந்த ஜெந்
துக்களின் நடைகுரல் பார்வை சேஷ்டை முதலிய குணங்களும்
பிறக்கும் அப்போது அசாத்தியமாம்.

## தந்தரதகவிஷநிதானம்.

பாம்புமுதலிய மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் பல்முகம்இவை
களில் விஷம் உண்டு அவைகள் பட்டு விரணம் பிறந்தால் அதி
ல் வீக்கத்துடன் ரத்தம் வடியும் இதனால் சுரம் உண்டாகும்
இது சாத்தியமாம்.



## சகலவிஷ உபத்திரவ நிதானம்.

சகல விஷங்களுக்கும் சுரம், இருமல், இளைப்பு, வாந்தி, அரி
க்கல், மயக்கம், தாகம், சரீரத்தில் கடினத்துவம், வயிறுப்பிசம்,
அடிவயிறும் தலையும் நோதல், வீக்கம், துர்க்கந்த ரத்தம் வடிகி
ன்ற விரணம் வாதாதிக்கம் யென்னும் (௰௫) துர்க்குணங்கள் பிற
க்கும் இதுவே விஷ உபத்திரவமாம் இக்குணங்கள் உண்டாவத
ற்கு முன்னமே தகுந்த சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியமாம்
நீடிக்கில் கஷ்ட சாத்தியமாம்.

## தூஷிவிஷநிதானம்.

முற்கூறிய வெவ்வகை விஷமாவது தானே க்ஷீணகதியானா
லும் விஷஹரமான சிகிச்சையால் அதமானாலும் வெய்யில் காற்
றுத்தீ காற்று முதலியவைகளினால் சோஷித்தாலும் சுபாவமாக
வே சோஷித்தாலும் அவ்வுடம்புள் அழுகப்பட்டிருந்தாலும் அ
வ்விஷங்களுக்குத் தூஷிவிஷம் யெனப்பெயர் இவைகள் அற்ப
மாயிருந்தாலும் மனிதர் தேகத்தில் பாய்ந்தவுடனே சிகிச்சை
செய்யவேண்டும் செய்யாவிடில் ஒரு வருஷபரியந்தம் உடம்பினு
ள் அடங்கியிருந்து பின்பு கபத்தைப்பற்றி ஏறும் இதனால் பல
கிறமான மலம் வாயினால் ரத்தம் விழுதல், சாகம், அரோசகம்,
வாந்தி, மயக்கம், கனத்தொனி சோருதல் என்னும் இக்குணங்
கள் உண்டாகும். அதற்கு பின்பு அது ரகசிய ஸ்தானத்தைப்
பற்றி ஏறும் இதனால் சிலேஷ்ம வாதரோகங்கள் பிறக்கும் அதற்
கு பின் அதுபக்குவாசய ஸ்தானத்தைப்பற்றிக் கலக்கும் அப்
போது வாதரோக குணங்களெல்லாம் பிறப்பதுமன்றித் தலைம
யிர்கள் உதிரும் அதற்கு பின் அது சப்ததாதுக்களையும் பற்றி
ப்பரவும் அப்போது அனேக விகாரங்களுண்டாகும். ஆதலால்,
அற்ப விஷத்திற்கும் மகாவிஷ சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.
தூஷியென்பது அற்பமாம்.

## சிலசாஸ்திரக்கேள்வி.

குமட்டிலையுள், தேள், நண்டுவாய்க்காலி, பூரம், சிலந்தி, பு
லிமுகப்பூச்சி சென்பான், பொறிவண்டு, இவைகள் விரியன்யென்

னும் பாம்பின் தழுதுகு வெடிக்க அதன்வழியாகப் பிறக்குமென்று சிலசாஸ்திரம் கூறுகின்றது.

## சிதமண்டலி.

இது கடித்தால் குடல் குளிர்தலும் அரட்டலும் மிகுந்தவியர்வை பெருகி ஓடுதலும் உண்டாகும் இதற்கு ரசகந்தமாதி உண்டை ஆகும்.

## ரத்தமண்டலி.

இது கடித்தால் மயிர்க்கால்கள் தோறும் ரத்தமொழுகும் இதற்கு பரிகாரமில்லை இல்லையாமாத்திரம் பெரிய எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்து ஆறாக்கு கல்லஜலத்தில் கரைத்துகொடுக்கில் நலமாம்.

## பூரம்.

இது கடிக்கில் அது ஊறுவதுபோல் தினவும் அவ்வுருவத்தைப்போல் தடிப்பும் உண்டாகும் இதுகுப்பைமேனிச் சாற்றை உள்ளுக்குக் கொடுத்து பத்தியமிருக்கவும்.

## செய்யான்.

இது கடித்தால் அவ்விடத்தில் விக்கமும் தேளைப்போல் மறுநாள் வரைக்கும் கடுப்பும் உண்டாகும் இதற்குத்தேள்விஷச் சிகிச்சை உதவும்.

## செஞ்சோரா.

இது கடிக்கில் மேனியில் சிவந்த புள்ளிகளான தடிப்புகள் உண்டாகும் இவ்விஷம் உத்தாமணியிலை ரசத்தில் கன்னாம்புரைத்துப் பூசத்தீரும்.

## கருஞ்சோரா.

இது கடித்தால் தேகத்தில் கறுப்புக்கறுப்பான தடிப்புகள் உண்டாகும் இதற்கும் மேற்கூறிய சிகிச்சைகள் ஆகும்.

## அறுபுள்ளிவண்டு

இது கடித்தால் சர்வாங்கத்திலும் கொட்டைசென்ற பின்பு வட்டம் வட்டமான தடிப்புகள் உண்டாகும்.



## செவ்வட்டை.

இது கடித்தால் அவ்விடத்தில் சிவந்து தடித்து அரித்திருக்கும்.

## அரணை

இது கடித்தால் சரீரமுழுதும் நடுக்கல், வாயால் நுரைவிழுதல், நாவுதடித்தல், என்னும் மிக்குணங்கள் உண்டாகும் மிதற்கு ஓணான் விஷத்திற்குச்சொல்லிய சிகிச்சைகள் உதவும்.

## சரகுண்ணி.

இது கடித்தால் விக்கம் எழும்பும் கட்டெறும்புக்கு மிக்குணத்துடன் கடுப்பும் உண்டாயிருக்கும் மிதற்குக் குப்பைமேனி ரசம் ஆகும்.

## எலிபேதம்.

சுந்தரிமணியன் செம்முக்கன், வரலி, குறட்டை, கருங்காலன், தலையன், கிடைவலி, செறவெலிமூட்டி, செவ்வெலி, வீங்கெலி, நாங்கெலி, உலப்பெலி, புடையெலி, இரைப்பெலி, செங்கண்ணன், புள்ளக்காடன், குறுங்காலன், நச்செலி ஆக 18 வகையாம்.

சில்லரைவிஷ பேதம் முற்றியது.

—

இதற்கு முக்கிய மூலிகைமர்மம். என்னும் சாஸ்திரத்தில் ரசபாஷாணநிவர்க்கம் ஒன்றேனுமின்றி புத்தகம் முதலிலிருந்து கடைசிமட்டில் மூலிகைப் பிரயோகமே அடங்கியது மூலிகை யெடுக்கும் மூலமந்திர சாபநிவர்த்தியுடன் 640 முறைகள் அடங்கிய நூல் விலை அணா 8 க்குக்கிடைக்கும்.

## சகல விஷகடிகட்கும்,

# அவுஷதவகுப்பு.

### சர்வ விஷத்திற்கு,

## பாஞ்சோதிக்குழம்பு.

| | |
|---|---|
| ஊமத்தன்பருப்பு | இரதம் |
| மகிழம்பருப்பு | கெந்தகம் |
| அழிஞ்சில்பருப்பு | வெண்காரம் |
| தில்லைப்பருப்பு | குக்கில் |
| வெண்குன்றிப்பருப்பு | நாவிக்கிழங்கு |
| வாளப்பருப்பு | நிருவிஷம் |
| மனோசிலை | பொன்மெழுகு |
| அரிதாரம் | பெருங்காயம் |
| கெவுரி | சுக்கு |
| வெள்ளை, | மிளகு |
| இலிங்கம் | திப்பிலி |
| நவச்சாரம் | வெள்ளைப்பூண்டு |
| பினக்காரம் | வெந்தயம் |
| நீலத்துருசு | |

இவைகள் வகையொன்றுக்கு விராகனிடை 2 ஆகச்சுத்தி செய்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஐந்துநாள் வரையில் கைவிடாமல் அரைத்து மேதிக்கொம்புச் சிமிழிலடைத்துக்கொண்டு பணவிடை வெற்றிலையிற் றடவிக்கொடுக்க அஷ்டநாகம் விரியன், மண்டெலி, செய்யான், செவ்வட்டைக்கடி, தேள், நட்டுவாக்காலி, எலி, முஞ்சூறு, பூனை, அரணை, முதலியானை, பேய்நரி, பேய்நாய், இவைகளின் கடிவிஷமும் மற்ற ஊர்வன விஷஜெந்துக்களின் கடிவிஷமும் நீர்வாழும் ஜீவ ஜெந்துக்களின் கடிவிஷங்களுந் தீரும் இதற்குப்பத்தியம் ஆவின்பால் அன்னம் சாப்பிடவும்.



## மகா சிந்தாமணிக்குழம்பு.

| | |
|---|---|
| இரதம் | சாரம் |
| கெந்தி | நிருவிஷம் |
| வெள்ளைப்பாஷாணம் | சன்னிநாயகம் |
| நாவிக்கிழங்கு | சுக்கு |
| இலிங்கம் | மிளகு |
| தாந்தம் | கடுக்காய் |
| துருசு | வாளப்பருப்பு |

இவைகள் வகை கழி விராகனிடை க.

| | |
|---|---|
| குப்பைமேனி | ஊமத்தை |
| தைவேளை | அவுரி |
| பேய்பீர்க்கு | வேலிப்பருத்தி |

இவைகளின் இலைச்சாறு வகைக்கு அரைக்கால்படி பேய்குமட்டி பழச்சாறுபடி அரைக்கால், காஞ்சிரம்பழச்சாறு படி ஒன்று, இவைகளை விட்டு மேற் சரக்குகளைக் கனிக்கனியே அரைத்து ஒரு சட்டியிற்போட்டு கொஞ்சம் வேப்பெண்ணெய்விட்டு மெழுகுபதமாய்க்கிண்டி சிமிழிலடைத்துக்கொண்டு அஷ்டநாகம் முதலாயுள்ள சர்வவிஷத்திற்கும் ஒரு குன்றியிடை அல்லது அரைக்குன்றியிடை கொடுக்கத்தீரும் பத்தியம் பால் அன்னம்.

## சஞ்சீவிக்குழம்பு.

| | |
|---|---|
| துருசு | அரிதாரம் |
| இரதம் | நாவிக்கிழங்கு |
| காயம் | வெள்ளைப்பாஷாணம் |
| ஜாதிலிங்கம் | கெந்தகம் |
| வெண்காரம் | வேப்பம்பருப்பு |
| வாளப்பருப்பு | |

இவைகளை வெள்ளெருக்கம் பாலில் ஒரு ஜாமமும் வேப்பெண்ணெயில் ஒருஜாமமும் அரைத்து சிமிழிலடைத்துக்கொண்டு பயறளவு வெற்றிலையிற் கொடுக்க சருவவிஷமும் விஷவேகத்தால் பற்கிட்டியிருந்தால் பணவிடை வெந்நீரில் கலக்கிப்புகட்டத் தீர்க்கும். பத்தியம் பாலும் அன்னமும் மூன்றுநாளையிலேயே உப்பில்லாமல் அவித்து மிளகுபொடி தூவிக்கொடுக்கவும்.

## [illegible]ஞ்சீவகாணித் தயிலம்.

| | |
|---|---|
| காஞ்சிரம்பழம் | கொடிவேலிவேர் |
| பேய்க்குமட்டிப்பழம் | காஞ்சிரைவேர் |
| இவை வகை க-இ பழம் ௩ா | அமுக்கிராக்கிழங்கு |
| வெண்குன்றிப்பருப்பு | கொடுக்கிழங்கு |
| நீர்க்கடம்புபருப்பு | நாவிக்கிழங்கு |
| நீர்வெட்டிமுத்து | முருங்கைவேப்பம்பட்டை |
| இவை வகை க-க்கு படி உ | மாவிலிங்கப்பட்டை |
| வேர்வாளக்கொட்டை | பெருமாத்துப்பட்டை |
| வேப்பங்கொட்டை | கருங்குமைப்பட்டை |
| இவை வகை க-க்கு படி ௩ | வேலிப்பருத்திவேர் |
| | இவை வகை க-க்கு பலம் உ0 |

இதுகளை யெல்லாம் இடித்து வில்லைவில்லையாய்த் தட்டி காயவைத்து பாண்டத்திலிட்டு பூப்புடத்தில் தயிலம்வாங்கி அந்தத் தயிலத்துக்குச் சமன் வேப்பெண்ணெய் கலந்து அதில், இரசம் விராகனிடை உ, பச்சைப்பாம்பு க, மூஞ்சூறு க, இந்த 3 யினையும் கூடப்போட்டுக் கலசவாயைமூடி ஒரு மண்டலம் எருக்குப் பையில் புதைத்தெடுத்து வெற்றிலையிலாவது வெந்நீரிலாவது இரண்டு துளிகொடுக்க அஷ்டநாகம், விரியன், வழலை முதலான சர்வவிஷங்களும் இறங்கும் உயிர் அடங்கியிருந்தால் உச்சியைக் கீறி அதில் தயிலத்தைத் தேய்த்து நாசிகாரத்தில் விட்டு நாவிலுந் தேய்க்க உயிர் மீளும் பத்தியம் பால் அன்னம்.

## இராமபாணத் தயிலம்.

| | |
|---|---|
| இலங்கரிஞ்சிவித்து | கருஞ்சீவித்து |
| புங்குவித்து | காட்டுகோல்வித்து |
| தான்றிவித்து | கடுக்காய் |
| புன்னைவித்து | |

இவைகள் வகையொன்றுக்குப் படி க இவைகளை வெள்ளாட்டு நீரிலும் சிறுபிள்ளைகள் நீரிலும் வகையொன்றுக்கு உம்-ரைந்து உலர்த்தி குழித்தயிலம் வடித்து பணவிடை வெற்றிலையிற் றடவிக் கொடுத்தாக் கடிவாயிலும் பூச அஷ்டநாகங்கள் கலி, விரியன், புடையன், தேள், நட்டுவாய்க்காலி, முறுக்



கரவு, அரணை முதலிய சில்லரை விஷங்கள் தீரும் விஷக்கடியால் கேரிடும் குஷ்டமுதலிய ரோகங்கள் தீரும் பத்தியம் வெள்ளாட்டுப்பால் அன்னம்.

## சஞ்சிவினை.

திருகுகள்ளியின் மேற்பொருக்கு இரண்டுபங்கும் இலுப்பைப்பிண்ணாக்கு ஒருபங்கும் ஒன்றாய்க்கலந்து ஒரு பாண்டத்திலடைத்து வெள்ளாட்டு எருக்கொட்டிக் குழித்தயிலம் வடித்துக் கொள்ளவும். புதியகாஞ்சிரை விரையும் அதுபோல் தயிலம் வடித்துக்கொள்ளவும் இந்த யிரண்டு வகை தயிலத்தையும் ஓர் நிறையாய் ஒன்றாய்க் கலந்து ஒரு பழயசட்டியில் விட்டு காஞ்சிரைவேர் தடியால் கைவிடாமல் மையாகும் வரையில் கடைந்து செப்பு சிமிளிலடைத்துக்கொண்டு ஒரு குன்றிமணியிடை வெற்றிலைச் சாற்றிலாவது வெந்நீரிலாவது கலந்துகொடுக்க அஷ்டநாகம் முதலாயுள்ள சகலவிஷமும் தீரும் உயிர் அடக்கமாயிருந்தால் கீர்த்தாரைவழி நாசமூலமாய் இம்மையைப் பிரயோகிக்கத் தூங்கினவன்போல் விழிப்பன்.

## பாஞ்சோதமை.

இருபது காய்ச்சீலை ஒரு பேய்காளிப்போட்டு கால்விராகனிடை வெங்காரத்தைப் பொரித்துப் பொடித்தூவி வெயிலில் வைக்கத் தயிலமாகும் அந்தத்தயிலம் களஞ்சி ௩.

| | |
|---|---|
| சுக்கு | சூதம் |
| பெருங்காயம் | இந்துப்பு |
| கெந்தி | வேப்பன்பருப்பு |

இவைகள் வகையொன்றுக்கு களஞ்சி க இதுகளை யொன்றாய்ச் சேர்த்தரைத்து மைப்பதத்தில் சிமிளிலடைத்துக் கொண்டு பணவிடை வெற்றிலையிற் சேர்த்துக்கொடுக்க அஷ்டநாக முதலாயுள்ள சர்வ விஷமும் தீரும். விஷம் சிரசிலேறி மயக்கமாகிவிட்டால் எட்பிரமாணம் இம்மையைக் கண்ணில் கலிக்கமும் நாசியில் நசியமுமிட மயக்கம் தெளிந்து விஷமிறங்கிப்போம் வெறிநாய், எலிகடி விஷமும்தீரும். மேற்படிவிடை வெற்றிலையில் பெ

ண்களுக்குக்கொடுக்க மலைநீக்கும் குஷ்டம் பதினெட்டு குன்ம வலி வயிற்றுவலி நீங்கும்.

## சூ ர ண ம்.

| | |
|---|---|
| மூஞ்சூறுவயிற்றில் | கெந்தகம் |
| சூதம் | வெள்ளைப்பாஷாணம் |

இவைகள் வகையொன்றுக்கு விராகனெடை ௨ - பொடித்து அவைத்துக் கைத்து ஒரு கலசத்திற்போட்டு அது மூடும்படி வேப்பெண்ணெய்விட்டுக்கலசவாயைமூடி சீலைமண்செய்து எருமைத் தொழுவில் ஒருமண்டலம் புதைத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மையாக அரைத்து சிமிளிலடைத்துக்கொண்டு நல்லபாம்பு விஷத்திற்கு ஒரு குன்றிக்காய்ப்பிரமாணமும் விரியன் விஷத்திற்கு இரண்டு குன்றிக்காய்ப் பிரமாணமும் மற்ற சில்லரை விஷத்திற்கு ஒரு மிளகு பிரமாணமும் வெற்றிலையிற்றடவிக் கொடுக்கத் தீரும்.

## பரஞ்சோதிமாத்திரை.

| | |
|---|---|
| திப்பிலி | சூதம் |
| மிளகு | [illegible] |
| இந்துப்பு | இலுப்பைப்பருப்பு |
| பெருங்காயம் | சேனைபகவேர் |
| பழம்பாகற்கிழங்கு | இருவாட்சிவேர் |
| கொல்லங்கோவை கிழங்கு | முருங்கைவேர் |
| நாவிக்கிழங்கு | காஞ்சிரைவேர் |
| ஆத்திதண்டாப்பாலைவேர் | வாளப்பருப்பு |

இவைகள் வகையொன்றுக்கு விராகனெடை க இவைகளை வெள்ளைப் பொடித்து மூஞ்சூறு வயிற்றில் வைத்துத் தைத்து ஒரு கலசத்திற்போட்டு அதின் வாயைமூடி பூமியில் புதைத்து மண்டலஞ்சென்றெடுத்து பொன்னாங்கண்ணிச் சாற்றால் அரைத்து பயற்றளவுமாத்திரைசெய்து ஒரு மாத்திரையை வெற்றிலையில் வைத்துக்கொடுக்க சர்ப்பவிஷமுந்தீரும் விஷந்தலைக்கொண்டிருந்தால் ஒரு மாத்திரையை வெற்றிலைச்சாற்றில் மத்தித்துக் கண்ணில் கலிக்கமும் நாசியில் நசியமும் செய்ய தீர்த்தாளயில் மாத்திரமுமலம் பிரயோகிக்க விஷமிறக்கும்.



## சூடாமணிமாத்திரை.

| | |
|---|---|
| தொட்டிப்பாஷாணம் | வெண்காரம் |
| வெள்ளைப்பாஷாணம் | வாலுளுவையரிசி |
| கெவுரிபாஷாணம் | வாளப்பருப்பு |
| அரிதாரம் | இந்துப்பு |
| சூதம் | கார்கோலரிசி |
| சேங்கொட்டைப்பருப்பு | முசுமுட்டை |
| காக்கைகொல்லிவித்து | நவச்சாரம் |
| துருசு | கல்லுப்பு |
| பெருங்காயம் | வெடியுப்பு |
| விளாவரிசி | பேய்க்காளான் |
| கருநாவிக்கிழங்கு | எட்டிவித்து |
| மூஞ்சூறுச்சதை | |

இவ்வகையொன்றுக்கு விராகனெடை 1 இவைகளை வெள்ளெருக்கம் பாலால் 3 நாள்வரையில் கைவிடாமல் அரைத்து குன்றிபோல் மாத்திரைசெய்து ஒரு மாத்திரையை வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சகல விஷமுந்தீரும் உயிர் அடங்கியிருந்தால் உச்சியிலும் தோளிலும், தொடையிலும், கீறி ஒரு மாத்திரையைச் சிறுநீரிலுரைத்துச் சூடுபிறக்கத் தேய்த்துவிட உயிர்திரும்பும்.

## கடிவாயிற்கட்டுமாத்திரை.

| | |
|---|---|
| இரதம் | நாவிக்கிழங்கு |
| வாளப்பருப்பு | நெய்க்கொண்டான்பழம் |
| கெவுரிபாஷாணம் | |

இவைகளை யோர் நிறையாகவெடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் பயறளவாக மாத்திரை செய்துக்கொண்டு எந்தபாம்பு தீண்டினாலும் கடிவாயில் வைத்துக் கட்டவிஷத்தைக் கீழ்நோக்கி யிழுத்துக்கொள்ளும் மேற்செல்லவிடாது.

## வேறு.

| | |
|---|---|
| வெண்காரம் | அரிதாரம் |
| இரதம் | பச்சைப்பாம்புகண்டம் |

இவைகளை வெற்றிலைச்சாற்றால் ஆட்டி மாத்திரை செய்துக் கொண்டு கடிவாயில் வைத்துக்கட்டவிஷம் நீங்கும்.

## அடக்கம்பெருப்ப அஞ்சனம்.

| | |
|---|---|
| ரசம் | துத்தம் |
| வாளப்பருப்பு | வெண்காரம் |
| அரிதாரம் | நீலிவேர்க்கு |
| நீலத்துருசு | |

இவைகள் வகையொன்றுக்கு விராகனிடை 1 இவைகளை பேய்ப்பீர்க்கிலைச் சாற்றால் அரைத்து மாத்திரைகளாகச் செய்துக்கொண்டு பணவிடைவெற்றிலைச் சாற்றிலாவது பேய்ப்பீர்க்கிலைச் சாற்றிலாவது உரைத்து வழியிலிட்ட அஷ்டநாகமுதலாயுள்ள விஷஜெந்துக்களின் கடியால் அடங்கினஉயிர் மீளும்.

## கெருட அஞ்சனம்.

| | |
|---|---|
| இந்துப்பு | பெருங்காயம் |
| இரசம் | அரிதாரம் |

இவைகளையோர் நிறையாயெடுத்து பேய்ப்பீர்க்கிலைச் சாற்றாலாட்டி மாத்திரைசெய்து பணவிடை வெற்றிலைச் சாற்றில் மத்தித்துக் கண்ணிலிட அஷ்டநாக முதலாயுள்ள சர்வவிஷமும் நீங்கும்.

## அடக்கம்பெரும் ஆக்கிராணம்.

நாம்பூலப்பூச்சி, இரசம், துருசு, வகையொன்றுக்கு விராகனிடை 1 இவைகளை ஒன்றாய்ப்பொடித்து சுத்தரிவயிற்றுக்குள் வைத்தரைத்து புகையடிக்கிறயிடத்தில் கட்டிவைத்துக் காய்ந்த பின்பொடித்து அதை நாசியிலூதச் சகல அரவுவிஷமுமிறங்கும்

## வேறு

சாம்பலம்இஞ்சியை மேற்றோலைப்போக்கி அதுமூழ்கும்படி வெள்ளெருக்கம்பால்விட்டு நிழலில் உலர்த்தி.

துருசு, மஞ்சள் வகைக்குப்பலம் ஆரைக்கால் கூட்டிப்பொடித்துப் பேய்ச்சுரைக்குடுக்கையில் அடைத்துக்கொண்டு நாசியிலூத சகல விஷமும் அடக்கமுமிறங்கும்.





சகலவிஷத்திற்கும்.

## அகோரருத்திராஞ்சனம்.

கேளிரதம்பேய்ப்பீர்க்கன் சாற்றிற்றோய்த்து
வெடியானவாளமொடு துத்தந்தாரம்
நீளவேவெண்காரந் தன்னைவாங்கி
நேராகவிவையைந்தும் சமனாய்க்கூட்டி
மாளவேபேய்ப்பீர்க்கன் சாற்றாலாட்டி
வழித்துருட்டிகாயவைத்து யெடுத்துக்கொண்டு
பாம்புவிடங்கள் தீண்டிமண்டைக் கொண்டால்கண்ணிலிட்டு
பதித்துவிடும்பொரிபட்ட பஞ்சாந்தானே.

இதற்குவிபரம்.

பேய்ப்பீர்க்கன் சாற்றைக் கொதிக்கவைத்து அதில் இரசத்தைச் சாய்க்கவும் இப்படி மூன்றுவிசை மேற்படி சாற்றில் சுத்தியான,

| | |
|---|---|
| இரசம் | அரிதாரம் |
| வாளம் | வெண்காரம் |
| துத்தம் | ஆக 5. |

இவை ஐந்துசரக்கும் சமனிடையெடுத்து கல்வத்திலிட்டு பேய்ப்பீர்க்கன் சாற்றால் அரைத்து மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு விட்டுத்தீண்டியவர்களுக்கு உமிநீர் அல்லது முலைப்பால் அல்லது வையக்கரைச்சாற்றால் மிழைத்துக் கண்ணில் இட்டிறால் விஷம் மீளும்.

சகலவிஷத்திற்கும்,

## க ள் க லி க் க ம்.

தானென்றஇந்துப்பு இரசங்காயம்
தகட்டரிதாரமிவை சமனாய்க்கூட்டி
ஏனென்றுசொல்லாமல் பேய்ப்பீர்க்கன்சாற்றால்
இருசவரைத்துருண்டைசெய்து யெடுத்துக்கொண்டு

நாலென்றகண்ணிலிடு உமிழ்நீராலே
நாகமதுநாலுப்பல் காட்டினாலும்
வாலென்றஅண்டமதில் பரிதிகண்ட
வாடையெனும்பனிபோலே வாங்கும்பாரே.

இதற்குவிபரம்.

| | |
|---|---|
| இந்துப்பு | தட்டுஅரிதாரம் |
| இரதம் | காயம் |

இவை நான்குசரக்கும் சமனிடையெடுத்து பேய்ப்பீர்க்கன் சமூலச்சாற்றினால் இரண்டுநாள் அரைத்து கலுவத்துடன் காற் குன்றிப் பிரகு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு உமிழ்நீரால் யிழைத்துக் கண்ணில் தீட்டினால் நாகத்தின் நான்குபல்லும் பட்டபோதிலும் அவ்விஷமானது சூரியனைக் கண்டபனிபோல் நீங்கிவிடும்.

சகலவிஷத்திற்கும்,

## சித்தாந்த பிரசமாத்திரை.

பாரடாசித்தாந்தபிரசஉண்டை
பாடுகிறேன்மகிழ்வித்துதேவதாளி
சேரடாபேய்ப்பீர்க்குவித்தும்கூடும்
நேர்வாளமிவையந்தும்சமனாய்க்கூட்டி
ஏரடாசம்பீரச்சாறுவிட்டு
எட்டுநாள்ஊறவைத்துஎட்டொன்றுநாள்
சேரடாபயறுபோலரைத்துருட்டி
திரமாகநிழலுலர்த்திவைத்துக்கொள்ளே.
வைத்துக்கொள்விஷந்தீண்டி செவ்வுபோனால்
வாகானகையான்சார் யெருக்கன்சாற்றால்
வெற்றியாயொருகுளிகை யுரைத்துக்காதில்
விட்டிடைக்கமறுசெவியில் காந்தல்காணும்
மெத்தவேகாணட்டால் அமுரிதன்னில்
சிறைந்திழைத்தொருகுளிகை விழியிற்போட



முத்தியாய்புதாச்சிலே நனைத்துமூடில்
மூன்றேகால்நாழிகையில் முழிப்பான்காணே.

இதற்குவிபரம்.

| | |
|---|---|
| மகிழ்வித்து | இரசம் |
| தேவதாளிவித்து | வாளம் |
| பேய்ப்பீர்க்கன்வித்து | ஆ 5. |

இவை ஐந்துசரக்கும் சமனிடையெடுத்து எலுமிச்சம்பழச் சாறு மிதக்கவிட்டு எட்டுநாள் ஊறவைக்கவேண்டும் சாறு சுவறிப்போனால் மறுபடியும் விடவும். ஒன்பதாநாள் யெடுத்து மைபோல் அரைத்து சிறுபயறுபோல் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் விஷந்தீண்டினபேர்களுக்கு கையாந்தகரைச்சாற்றில் அல்லது யெருக்கன் சாற்றிலாவது யிழைத்து காதில் விட்டால் மற்றொருகாதில் அனல்வீசும் அப்படி அனல் யெழும்பாவிட்டால் சிறுநீர்விட்டு ஒரு குளிகையை யிழைத்துக் கண்ணில் கலிக்கம் தீட்டினால் 3 முக்கால் நாழிகையில் முழித் தெழுந்திருப்பான்.

## சுடுகாடுமீட்டான்குளிகை.

காணப்பாகாலன்கடி யெங்கேபோச்சு
காசினியில்விஷந்தீண்டி சாவாரில்லை
வீணென்றுயெண்ணாதே வேகம்மெத்த
விருதுகட்டிக்காப்பேனென்று விருதுபோடு
ஊணப்பாஇக்குளிகை சூட்சமாகும்
உருதியிலேசுடுகாடு மீட்கலாகும்
நாணப்பாநாவிரசங் காயங்கோஷ்டம்
நல்வாளப்பருப்புதிஞ்சி பருப்பும்பேயே.
பேய்ப்பீர்க்கன்வித்துகாஞ் சிரையின்வித்து
பேர்சமனாய்தேசிச்சார் மிதக்கவிட்டு
ஓயாமல்ஒருஜாமம் அரைத்துருட்டி
உண்டைசெய்துநிழலுலர்த்தி வைத்துக்கொ

தீயானகாலவிஷந் தலைமேற்கொண்டால்
சிறுநீரில்உரைத்திடுவாய் கண்ணிலேதான்
ஓயாதவிஷமதுதா னுன்பேர்சொன்னால்
ஒழிந்தோடிப்போச்சுதடா உண்மைதானே.

இதற்குவிபரம்.

| | |
|---|---|
| நாபி | வாளம் |
| இரசம் | அமிர்தசிலித்து |
| காயம் | பேய்ப்பீர்க்கனவித்து |
| கோஷ்டம் | எட்டிவித்து |

இவை 6 இடையும் சமனிடையெடுத்து எலுமிச்சம்பழச் சாரில் தக்கவிட்டு ஒரு ஜாமம் கைவிடாமல் அரைத்து பயறுபிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திவைத்துக் கொண்டு விஷந்தீண்டிய பேர்களுக்கு ஒரு மாத்திரையெடுத்துச் சிறுநீரில் உரைத்துக் கண்ணில் இட்டால் விஷம் நீங்கி யெழுந்திருப்பான்.

—o:o—

## சகலவிஷத்திற்கும்,
## மகாபரஞ்சோதிமை.

போச்சுதிந்தபரஞ்சோதி மைமையைக்கேளு
புகழ்நாகிழ்வித்து அமிர்தசிலித்து
வாய்ச்சிந்தவெண்குன்றி பருப்புடனும்
வகைகுள்ளிக்கிழலுடன் கெவுரிதாரம்
தேய்ச்சிந்திடவச்சாரந் திரிகடுகுநாவி
நிருவிஷவெண்காரம் மனோசிலைலிங்கம்
ஆச்சிந்தபொன்மெழுகு இல்லிவித்து
அழகானசினமுடன் துருசுவாங்கிக.

வாய்மியேவகைவகைக்குக் கழஞ்சிநிறம்
வைமானநெய்இரசம் ஒவ்வொன்றுக்கும்
ஓங்கியெலுமிச்சம்பழச்சாறதனில்
உருதியாய்விட்டரைப்பா யைந்துநாள்தான்
பாங்கானரவியில்வைத் தெடுத்துக்கொண்டு
...ப்பாகவாய்குவிந்த பிங்கான்றன்னில்



தாங்கியேவைத்தடைத்து நீக்கவித்தக்
தயவாகப்பணவெடை வெற்றிலையிலேயே.
சந்திடவேகுஷ்டவகை பதினெட்டும்போம்
யெரிவிரியன்வகையாறு நாகமெட்டும்
காய்த்திடுமெண்டலிகாலும் கடிவிடங்கள்பூரான்
கதறுமடாசெவ்வட்டை முதலைமூஷி
ஆய்ந்தரவிணவித்புருதி யாறுமோடும்
அப்பனேஜன்னிபதி மூன்றுமோடும்
சேர்ந்தவிலாதிஸ்விட்ட மெழுகாய்ப்போகும்
இரமான பரஞ்சோதி திடமாங்கூறேனே.

திடமானமைதுதான் தேசமெல்லாம்
ஜெயஸ்தம்பம்நாட்டிவைக்கும் விருதுபோடு
விடமீட்கவல்லருணத் கெதிரியில்லை
...றுமைவுலகுதனில் மைதான்மெத்த
படிக்குள்ளேயிம்முறைபோ லெதுவுமில்லை
பார்ப்பதற்குயிதுகளுக்கு பரிட்சைமெத்த
கொடிக்குமன்னேறேய்விஷங்கள் ஓடிப்போகும்
தாருண்டுகாலவட்டம் கீர்த்தியாமே.

இதற்குவிபரம்.

| | |
|---|---|
| மயிழம்வித்து | நவாச்சாரம் |
| அமிர்தசிலித்து | சுக்கு |
| வெண்குன்றிப்பருப்பு | திப்பிலி |
| வாளப்பருப்பு | மிளகு |
| காயம் | நாவி |
| மைசாட்சி | நிருவிஷம் |
| கெவுரிபாஷாணம் | வெண்காரம் |
| அரிதாரம் | மனோசிலை |
| பொன்மெழுகு | லிங்கம் |
| கெந்தி | இரசம் |

இந்த 20 வகையும் சமனிடையெடுத்து எலுமிச்சம் பழச் சார்விட்டு இரண்டு நாள் ஊரவைத்து அதன்பிறகு ஐந்து நாள் வரையிலும் கைவிடாமல் அரைத்து ஒருஜாமம் சூரியகாந்தியில் வைத்து யெடுத்துக்கொண்டு வாய்சிறுத்த பிங்கான் கோப்பை

யில் வைத்து பதனம்பண்ணி பிரதி தினமும் பணவிடை யெடுத்து வெற்றிலையில் மடித்துக்கொடுக்க குஷ்டம் 18 வகையும் ஆறுவகை விரியன் விஷமும் எட்டுவகை சர்பவிஷமும் மண்டலி, பூரான், செவ்வட்டை, முதலை, அரணை, எலி, முதலான விஷங்களும் விப்புருதி ஜன்னி பதிமூன்று இதுகள் யாவும் தீரும். வியாதியும் விஷதிதானமும் பார்த்து 5 நாள் அல்லது 7 - 10 நாள் விதம் கொடுக்கவும் பத்தியம் கால்புளிப்பு கூட்டவும்.

## நாள்பட்ட விஷத்திற்கு

### உண்டை.

கீர்த்தியாம்வெள்ளெருக்கன் சிறியாநங்கை
கொடிவெள்ளைக்காக்கணம்வே ரிவைகள்மூன்றும்
பார்த்திபனேவகைப்பாக் களவுரைத்து
பரிவாகதேசிக்கா யளவுவெல்லம்
நாற்றிசையும்மெய்த்திடவே மைந்தாகொள்ளு
நற்குருவையரிசிச்சோ றுண்ணச்சொல்லு
மூர்த்திகட்கும்நாட்சென்ற விஷங்கள்போச்சு
மூன்றுநாள்ராப்பகல் பத்தியமதாமே.

இதற்குவிபரம்.

வெள்ளெருக்கன்வேர், சிறியாநங்கைவேர், வெள்ளைக்காக்கணம்வேர், இம்மூன்றும் வகைக்குப் பாக்களவெடுத்து அரைத்து எலுமிச்சங்காயளவு வெல்லத்துடன் மத்தித்து ஆறு பங்காக்கி காலை மாலை யிருவேளையும் 3 நாள் கொடுக்கவும் குருவையரிசிச்சாதம் புளியற்ற மிளகுநீர்கூட்டவும் 3 நாள் இராப்பகலும் இப்படியே பத்தியமிருக்கவும், நாட்பட்டு உடம்பில் ஊறியவிஷம் தீரும்.

## விரியன்கடித்த புண்ணுக்கு

### மருந்து.

பத்தியமாம்பாவட்டையிலை யெடுத்து
பண்பானவென்னீரால் கழுவிப்போட்டு



வெற்றியாம்அவ்விலையை வைத்துக்கட்ட
விரியனதுகடிவீங்கி வெடித்தபுண்கள்
சுத்தமாய்த்தீர்ந்திடும் சொன்னேன்சொன்னேன்
குராதிகுராவென்ற அவுஷதத்தைக்கேள்
நித்தியமும்ராச்செல்லான் பலமேவாங்கி
வெடிபேய்ச்சுரையருகில் நின்றுபாரே.

இதற்குவிபரம்.

விரியன் கடித்து வீங்கி வெடித்தபுண்ணுக்கு பாவட்டை இலைபோட்டு தண்ணீர்க்காச்சி அந்த நீரைக்கொண்டு கழுவிவிட்டு ஈரமில்லாமற்படிக்கி துணியினால் ஒத்திடம்செய்து மேற்படி இலையை வதக்கிவைத்துக்கட்டவும் இப்படி 5 - 6 வேளைகள் கட்ட விரியன் கடித்தபுண் ஆறிவிடும் குருவையரிசிச்சோறும் மிளகுநீரும் கூட்டவும்.

## சகலவிஷத்திற்கும்,

### குராதிகுரான்.

பாரேனிவொருகனொன்றும் அருமையேதான்
பருதிநாள்காய்குடைந்து ராச்செல்லானை
சேரவேவைத்தடைத்து சதையால்மூடி
செடிச்செத்துஉலருமட்டுமே போட்டுப்பாரு
வாரமதிலேயெடுத்து வைத்துக்கொண்டு
வசம்புள்ளிவிரையளவு அரைத்துநீரில்
ஊசவேகலக்கிவிட்டு உள்ளுக்கீவாய்
ஓடுமேவிஷமொழிந்து உடலைவிட்டே.

இதற்குவிபரம்.

இராச்செல்லான் என்னும் கரியப்பு ஒரு பலம் எடுத்து பேய்ப்பீர்க்கன் செடியினிடம் ஆதிவாரத்தில் சென்று அதின் காயை மேல் சுரத்தில் வட்டமாகக் கீரியெடுத்து உள்சதையை எரித்துவிட்டு மேற்படி உப்பைக்கொட்டி மேல்பில்லைமூடி கயத்றால் கட்டிவைக்கவும் நாலுநாள் பொறுத்து அதேகாயில் மறுபடியும் ஒரு பலம் உப்புப்போட்டு முன்படியே கட்டிவைக்கவும்,

அந்த செடியானது வேர் கசிந்து உலருமட்டும் காயை அறுக்காமலிருந்து மேற்படி செடி செத்து உலர்ந்துபோன பிறகு ஆதிவாரம் பார்த்து அந்தகாயை அறுத்து வசம்பு, உள்ளி கொஞ்சம்கூட்டி நீர்விட்டு அரைத்து மிளகின் விதையளவு நாக்கில் போட்டு ஊரியபின் மோச்சிங்ஙீரவு உள்ளுக்குக் கொடுக்கவும், சகலவிஷமும் தீரும். இப்படி விஷந்தீருமளவும் சில நாள்கொடுக்கவும் முன்போலவே பத்தியமிருக்கவும்.

இது அரவுகடித்தவுடன் கொடுக்கப்பட்ட அவுஷதமன்று நாட்பட்ட விஷங்களுக்கு செய்யவேண்டிய சிகிச்சையாம்.

———

சகலவிஷத்திற்கும்,

## நஞ்சிற்பாய்ந்தான் மாத்திரை.

வரிசையிதுசொல்லுகிறேன் நாவிருகம்
வளமானதுரிசிதுத்தம் வாலுத்தாரம்
தரியாதசிலைகுன்றி பருப்புவெள்ளைச்
சாரணைவேர்மகிழ்வித்து பச்சைப்பாம்பின்
சிரங்கூட்டிச்சரிசமனாய் சம்பிரச்சார்
தெளிவாகவிட்டரைநீ கல்வத்திட்டு
உரித்தானவெண்காரங் கூடப்போட்டு
உகந்துதிரிநாளரைத்து உண்டைபண்ணே.
பண்ணியேநிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
பாரவிடந்தீண்டியிக தலைமேற்கொண்டால்
திண்ணமாம்உச்சியிலும் துதலிலேயும்
திடமானபிட்டரியிலுங் கன்னத்தேயும்
கண்ணுகக்கீறிவைத்துக் கட்டும்போது
நாகவிடம்பூதற்கொண்டு கெங்கிப்போகும்
புண்ணியமாமலைக்காந்தான் குளிகைகேளு
புதியதுத்தந்துரிசுசிலை காயந்தானே.

இதன்விபரம்.

| | |
|---|---|
| நாவி | துரிசு |
| இரசம் | துத்தம் |



| | |
|---|---|
| வாளம் | சாரணைவேர் |
| அரிதாரம் | மகிழம்வித்து |
| மனோசிலை | வெண்காரம் |
| வெள்ளைகுன்றிமணிபருப்பு | பச்சைப்பாம்புதலை |

இவையாவும் சமனிடையாய் கிருத்தெடுத்து 3 நாள் வரையிலும் அரைத்தபிறகு நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு விஷந்தீண்டி தலைக்கேறி சுவாசமில்லாதவர்களுக்கு உச்சியிலும், நெற்றியிலும், பிடரியிலும், கன்னத்திலும், கத்தியிற் கீறி இம்மருந்தை வைத்து கட்டினால் உடனே விஷம் கசிந்து உயிர் மீண்டெழுந்திருப்பான்.

———

## மலைக்காந்தான்குளிகை.

தானென்றவாளமரிதாரங்கெந்தி
ஜாதிலிங்கம் கவ்வெள்ளை கெவுரிகுதம்
ஏனென்றதொட்டிபோடு பெலிபாஷாணம்
பெரியதொரு குதிரைப்பல் பாஷாணந்தான்
வசனென்றதிப்பிலிமிளகு வகைகளெல்லாம்
வளமாகசமன்கூட்டி மேனிச்சாறு
நீவிளைவாய்விட்டரைத்து உண்டைபண்ணி
நிழலுலர்த்திமிகுபொடி தன்னில்சேர்த்தே.

இதற்குவிபரம்.

| | |
|---|---|
| துத்தம் | கெந்தி |
| துருசு | ரசம் |
| காயம் | லிங்கம் |
| மனோசிலை | குதிரைப்பல்பாஷாணம் |
| நாவி | தொட்டிபாஷாணம் |
| கெவுரிபாஷாணம் | எலிபாஷாணம் |
| வாளம் | திப்பிலி |
| அரிதாரம் | மிளகு |

இவைசமனிடை யெடுத்து பொடிசெய்து குப்பைமேனிச்சார்விட்டரைத்து உண்டைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு விஷந்தீண்டிவந்தவர்களுக்கு நஞ்சிற்பாய்ந்தான் மாத்திரைபோல் இதையும் உபயோகித்தால் விஷமொழிந்து உயிர்மீண்டெழுந்திருப்பான்.

## சகலவிஷத்துக்கும் நசியம்.

| | |
|---|---|
| முருங்கிலை | மிளகு |
| தும்பை | வெற்றிலை |
| எருக்கிலைபழுப்பு | நவாச்சாரம் |

இவைகளைத்தட்டி நாசிகாநில் நசியமிட சகல விஷமும் நீங்கும்.

## வேறு.

| | |
|---|---|
| தும்பையிலை | வசம்பு |
| அவுரியிலை | உள்ளி |
| பெருங்காயம் | மிளகு |

சிறுபிள்ளைகளின் அமுரிவிட்டுத் தட்டிக்காது நாசியில்விட்டால் கிழ்நோக்கும்.

## வேறு.

| | |
|---|---|
| நைவேளையிலை | சுக்கு |
| வேலிப்பருத்தியிலை | மிளகு |
| வெற்றிலை | வசம்பு |
| கரியபட்டு | வெள்ளுள்ளி |

இவைகளையோர் நிறையாயெடுத்து சிறுநீர்விட்டுத்தட்டி நாசியில் நசியமிட அடங்கினஉயிர் திரும்பும்.

---

## விரியன்பாம்புகளின் கடிக்குறியும் அவைகளுக்கு சிகிச்சையும்.

இது விரியன் வகைகள் ஆறும் அவற்றில் குருவிரியன் கடித்தால் செந்நிறமாயும், பொன்னிறமாயும் நீர்வடியும் கடிவாயிற் றசைத்துள்ளி வீங்கும் கடுக்கும் உடல் வெதும்பும்.

நாட்பட்ட வரகரிசியும் பொரசமரப்பட்டையும் இடித்து மாவுசெய்து வெள்ளாட்டுப்பாலில் சமைத்து மூன்றுநாள் இன்று மருபத்தியம் மூன்றுநாளிருக்கத்தீரும் உப்புபுளிதள்ளவும்.

## செவ்விரியன்கடி.

செவ்விரியன், கருவிரியன், பகைமெத்தவிரியன் இவை கடித்தால் கடிவாயில் உதிரம் வடியும் வீக்கம் கடுப்பு இரத்தவாந்தியுண்டாகும்.



செவ்விரியன் கடித்தவுடன் ஒமினைவேரை அரைத்துக்கொடுக்கத்தீரும். வன்னியிலையை தேசிக்காய்ப் பிரமாணம் அரைத்து ஆவின் வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுத்து கடிவாயிலும் பூசத்தீரும்.

வெள்வேலம்பட்டையை ஆவின்மோரில் அரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

## கருவிரியன் கடி.

கருவிரியன்கடித்தாலும் பகைமெத்தவிரியன் கடித்தாலும் அரைக்காற்படி மிதிபாகலிலைச்சாற்றில் காற்பலம் மிளகைப்பொடித்துப்போட்டுக் கொடுக்க மேற்படி விரியன்களின் விஷமும் மற்ற விரியன்களின் விஷமும் தீரும்.

## பெருவிரியன் கடி.

பெருவிரியன் கடித்தால் பேய்க்குமட்டிவேர், அவுரிவேர், தலைச்சுருளிவேர், மிளகு சமனாயிடித்துப் பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் சிறுபிள்ளைகளின் நீரிற் கலக்கிக்கொடுத்து கடிவாயிலும் பூசத்தீரும் இம்பூரல் மிழ்காய் நெல்லி கோழிக்கால் மிளகு மஞ்சள் இவைகளை ஓர்நிறையாய் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சி கடிவாய்ப் புண்ணிற் போட்டு ஆத்தியிலையை வெதுப்பிப் பொடித்துத்தூவிவர புண்கள் ஆறிவிடும்.

## கத்திரிவிரியன்கடி.

கத்திரிவிரியன் கடித்தால் உதிரம் வடியும் அதில் வீக்கம் கடுப்பு எரிச்சல் மயக்கம்காணும் உடல்வெதும்பும்.

## புல்விரியன் கடி.

புல்விரியன் கடித்தால் கடிவாயில் விலச்சுண்டுவதுபோல் சுண்டி வலித்துவீங்கும் உடற் கணுக்கள் வீங்கும் தூக்கம்போல் மயக்கங்காணும்.

## சுழற்றுக்கோல் விரியன் கடி.

சுழற்றுக்கோல் விரியன் கடித்தால் தலைசுழலும் உடலுளையும் காதும் நடுங்கும் செவிமந்திக்கும் கண்பஞ்சடையும் மேற்

சொல்லிய எவ்வகை விரியன் கடித்தாலும் உடனே ஒரு குன்றுமணிப்பிரமாணம் அருசைப்பத்து வெற்றிலையில் வைத்து மடித்துத் தின்னக்கொடுக்க மேற்படி விஷங்களிறங்கும் கடிவாய் வீக்கமும் கடுப்பு எரிவு உடனே தீரும்.

அவுரிவேரை அரைத்து ஆவின்பாலிற் கொடுக்க சகல விரியன்களின் விஷமும் தீரும்.

சன்னிநாயகம் சரூலம் இடித்துச் சாறுவாங்கி அரைக்காற்படி உள்ளுக்குக்கொடுத்து மேற்படி இலையை அரைத்து உடல் முழுக்கப்பூசிவிட சகலவிரியன்களின் விஷம் தீரும் மிருதிநாயகத்தையும் இப்படியே செய்யத்தீரும்.

குட்டிக்கக்காளி இலையும், பெருந்தக்காளியிலை இவ்விரண்டையும் இடித்து அரைக்காற்படிச் சாறுவாங்கி உள்ளுக்குக்கொடுத்து மேனியிலும் அப்பிவிட மேற்படி விஷங்கள் தீரும்.

## கடிவாயிற் பூசும் மருந்து.

தலைமயிரைக்கருக்கி ஆவின் வெண்ணெயில் மத்தித்துக் கடிவாய் வீக்கத்திற் பூசலாற்றும்.

பாலட்டையிலையை அவித்து அந்தத் தண்ணீரால் புண்ணைக் கழுவி வெற்றிலையை வைத்துக் கட்டிவரத் தீரும்.

அம்மான்பச்சரிசியிலையை அரைத்துப்பூசிவர வீக்கமே கடுப்பு எரிவும் தீரும்.

தக்காளிவேர், நாயுருவிவேர், இவைகளைச் சிறுநீர் விட்டரைத்துக் கடிவாயிற் பூசிவர வீக்கம் வற்றும் உடம்பிற் பூசி முறுக்க மயக்கந்தீரும்.

கோழிச்சாறையையாவது அதின் கொழுப்பையாவது மூன்று நாள் வைத்துக்கட்டி அப்பால் காடியாற்கழுவி இரணடியிற் கல்லிருக்கிற எண்ணெயைப்போடவும்.

## சகலவிரியன் விஷகடிக்கும், வீக்கத்திற்கும், புண்ணுக்கும் போட்டுந் தயிலம்.

| | |
|---|---|
| இரண்டுகோழிக்கால் | மஞ்சள் |
| இட்டூரல் | மிளகு |
| கடுகாய்மிலகல் | இந்துப்பு |



இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சி புண்ணிற்போடத்தீரும்.

| | |
|---|---|
| மூஞ்சுறு | சுக்கு |
| வசம்பு | உள்ளி |

இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி பண்ணிற்போட சகல விரியன்களின் கடிவிஷமும் புண்ணும் ஆறும்

## கருவழலைமுதலிய மற்ற சில்லரைப் பாம்புகளின் கடிவிஷக்குறியும், அவைகட்கு சிகிச்சையும்.

உடல் நீய்போம் காந்தும் வியர்க்கும் உள்ளங்கால் கைசிவக்கும் கண்மயங்கும் நெஞ்சடைக்கும் கோளைகட்டும் பல்வலிக்கும்

மற்றவகை வழலைகடித்தால் உடலிற் பகமை நரம்புதோன்றும் வியர்க்கும் வாயில் நீர் வடியும் கடிவாயில் உதிரம் வடியும் வாய் வறுவறுக்கும்.

## கருவழலைக் கடி.

| | |
|---|---|
| வேலிப்பருத்திவேர் | அதின்யிலை |
| அதின்யிலை | நீலிவேர் |
| வெள்ளைச்சாரணைவேர் | பெருங்காயம் |

இதுகளை ஓர் நிறையாயரைத்துத் தேசிக்காய்ப் பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து கடிவாயிலும் பூசத்தீரும்.

## மற்றவழலைகள் கடித்தால்.

நற்குப்பியிலை, வசம்பு, உள்ளி, இவைகளை அரைத்து கடிவாயிற் பூசி உடம்பிற்றேய்த்து முறுக்கவும்.

| | |
|---|---|
| சிற்றாமணக்கின்வேர் | பழம்புளி |
| குன்றிமணிவேர் | சிலப்பனைக்கிழங்கு |

இவைகளை ஓர் நிறையாய் அரைத்து சிறுநீரிற் கலக்கிக் கொடுக்கத்தீரும்.

உப்பிலிவேர், சிலப்பனைக்கிழங்கு, இவ்விரண்டையும் ஓர் தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்து சிறுநீரிலாவது ஆவின் வெண்ணெயிலாவது கொடுக்கத்தீரும்.

## மயிக்கரவுகடி.

மயக்கரவு கடித்தால் இருவிழியும் சுழலும் அடிக்கடி மயக்கம் காணும் முகம் கருக்கும் படபடப்பாய் விஷமேறி மார்பை அடைக்கும் கைகால் காம்புகள் விடைக்கும்.

கரிப்பாலைப்பிள்ளை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் மூன்று நாள் கொடுத்து மிளகுப்புகையை நாசியிலும் முகத்திலும் காட்டத்தீரும்.

## முருக்கரவுகடி.

முருக்கரவு கடித்தால் உடலைத் திரித்து முறுக்கும் அங்கம் பதரும், இதற்கு பெருங்காயம், திப்பிலி, வசம்பு இவைகளை ஓர் நிறையாயரைத்துத் தேங்காய்ப்பிரமாணம் கொடுத்து அதை உடம்பிற்பூசி முருக்கி நாசியில் நசியமிடத் தீரும்.

அரைக்காற்படி பிரண்டைச்சாற்றில் காற்பலமிளகைப் பொடித்துப்போட்டுக் கொடுத்தாலும் ஒரு தேங்காய்ப்பிரமாணம் வெள்ளைக்கிழங்கை அரைத்து வெந்நீரிற் கொடுத்தாலும் தீரும்

## கூவிரப்பாம்புகடி.

கூவிரப்பாம்பு கடித்தால் சிலகாலத்துக்குப்பின் குஷ்டம் போற் ரோகத்திலுண்டாகி கால் கை விரல்கள் குறையும் இது கருமையும் வெண்மையும் கலந்த புள்ளியுள்ளதாயிருக்கும்.

இதற்கு உசிலம்பட்டையை ஆவின்பால் விட்டரைத்துப்பிழிந்து அரைக்காற்படி வீதம் ஏழுநாள் கொடுத்து உப்புப்புளி தள்ளி பத்தியமாயிருக்க மேற்படி விஷம் தீரும்.

## செஞ்சோர்வுகடி.

செஞ்சோர்வுகடித்தால் உடம்பு வெளுத்து புள்ளிபோற் தடித்து சிவப்புநிறமாயிருக்கும்.

இதற்கு எருக்கம்பால் எருமைச்சாணி பசுவெண்ணெய் இவைகளைக் கலக்கவும் இப்படி மூன்று நாளைக்கு ஒன்றுபணிடை ஒருநாள் கொடுக்கத்தீரும்.



## கருஞ்சோராகடி.

கருஞ்சோர்வு கடித்தால் தேகம் முழுதும் கருத்துத் தடித்துத் திமிராயிருக்கும்.

இதற்கு நன்னாரிவேர், சிறியாநங்கைவேர் இவ்விரண்டையும் சமனாய் ஒரு தேங்காய்ப்பிரமாணம் அரைத்து ஆவின் பாலில் கொடுக்கத்தீரும்.

## புடையான்விஷம்.

புடையான்பாம்பானது அதின் வாயின் முனையால் மனிதர் முதலிய ஜீவஜெந்துக்களை குத்தும் அந்த விஷம் தேகத்தில் சில நாள் தங்கியிருந்து அப்பால் தேகமெங்கும் புடைகளுண்டாய்ப் பொத்துச் சீழ்வடியும்.

அதற்கு ஒருபிடி புத்தான்சோற்றைக் காற்படி நல்லெண்ணையிற்போட்டுக் காய்ச்சிக் கொஞ்சம் உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத்தீரும்.

பிராய்ப்பட்டையும் நாய்ப்பட்டை வாகம் இடித்து மாவு செய்து நனி இன்றி 3 நாள் சாப்பிட்டு மருந்தியம் 3 நாளிருக்கத்தீரும்.

## நெடுங்கழுத்துப் புடையன் விஷம்.

நெடுங்கழுத்துப்புடையன் விஷத்துக்கு கொல்லன்கோவைக்கிழங்கைப் பாலிலரைத்துக் கொடுக்கத்தீரும்.

புகையிலை, அவுரிச்சிலை, இருப்பையிலை இவைகளைகொடிக்கள்ளிப்பால் விட்டரைத்துப்பூச புடையன் குத்தும் விக்கமும் தீரும்.

## கட்டைப்புடையன் விஷம்.

கட்டைப்புடையன் விஷத்துக்கு பத்துவிரலளவு கொருக்கம் பூவை வெற்றிலையிற் சுருட்டித் தின்னக்கொடுத்து வசம்பை நெருப்பிலிட்டு அந்தப் புகையை நாசியிலேற்றத்தீரும்.

## வரிப்புடையன்விஷம்.

வரிப்புடையன் விஷத்துக்கு புத்தான் சோறும் வசம்பும் எருக்கம்பால்விட்டுத் தட்டி நாசியில் நசியமிடத்தீரும்.

## ஊதுபுடையன்விஷம்.

ஊதுபுடையன் விஷத்தால் கடிவாய்வீங்கி விஷமேறும் கை கால் உளையும் உடல் வீங்கும் கண்ணில் நீர் வடியும் மயக்க முண்டாம். விழுதிப்பூவை ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்துக்கொடுக்கச் சகலபுடையன் விஷங்களும் தீரும்.

| | | |
|---|---|---|
| காட்டுக்கருணைக்கிழங்கு | } | புனைபூரல் |
| கொட்டாங்கரந்தை | } | இலுப்பைப்பிண்ணாக்கு |

இவைகளைச் சிறுநீர்விட்டரைத்துப், புடையன் குத்தும் வீக்கத்திற் பூசத்தீரும்.

## இரத்தமண்டலிகடி.

இரத்தமண்டலி கடித்தால் கடிவாயிலும் மயிர்க்காலிலும் இரத்தம் தாரைதாரையாய் வடியும்.

அதற்குச் சிறுசெருப்படையையாவது கொல்லங் கோவை யிலையையாவது இடித்துச் சாறுவாங்கி அரைக்கால்படி 3 நாள் காலையிற் கொடுத்து உடம்பிலும் அந்தச் சாற்றைப்பூசத்தீரும்.

வெள்ளைவெங்காயம்பட்டைபைக் காடியாவது ஆவின் மோராவது விட்டிடித்து அரைக்கால்படி கொடுக்கத்தீரும்.

பூலாநெருஞ்சிலையைச் சிறுநீர்விட்டிடித்துப் பிழிந்து அரைக்கால்படிசாறு உள்ளுக்குக்கொடுத்து உடலிலும்பூசத்தீரும்.

## சீதமண்டலிகடி.

சீதமண்டலிகடித்தால் உடம்பு குளிரும் கடுக்கும் வியர்வை மிகவுமுண்டாம்.

முருங்கைச்செவி அல்லது வேப்பம்பட்டையைக் காடி விட்டுச் சிறுத்து அரைக்கால்படி உள்ளுக்குக்கொடுத்து அதைக் காடியில் வேகவைத்து ஆவிபிடிக்கத் தீரும்.

## மயிர்மண்டலிகடி.

பொன்னாங்காணிப்பூவை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்துக் கொடுத்து கடிவாயில் பூசத்தீரும்.



சகலவிஷத்திற்கும்,

## சஞ்சீவி புன்னை.

பாரடா உயிர்தருஞ் சஞ்சீவிபுன்னை
பகருகின்றேன் தானிதுதன் பிசாசுசேர்த்து
சேரடாவானாயிந்த இடைச்குருபியரட்டு
கினைவாகவெலுமிச்சம் பழத்தின்சாற்றை
வாரடா ளுமுன் அகா தைாவைத்து
வடித்தெடுத்தெடுத்து காலாவச்சாற்றிலே
சேரடாவரைத்துரைவடம் செய்துகண்ணில்
தேய்த்துவிடவேவிஷமும் தீர்ந்துபோமே.

இதற்குவிபரம்.

அருகு, துத்தம், மிளகு, சமனிடை இந்த 3 க்கும் சரியிடை வாளம் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றை விதக்கவிட்டு 3 நாள் வைத்து வடித்தெடுத்து வெயிலில் வைத்து மேற்படி சாறுவிட்டு அரைத்து மாத்திரை செய்து கண்ணில் இட்டிடுதல் சகல விஷமும் தீரும்.

---

## சகலவிஷத்துக்கும் தயிலம்.

குப்பைமேனியிலை, வெற்றிலை, நவாச்சாரம், இவைகளைச் சிறுநீர் விட்டிடித்தட்டி துணியிற்கட்டி காதில் நசியமிட சகலவிஷமும் தீரும்.

## சொறிமண்டலிகடி.

கன்னெருசிவேரை ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் கொடுத்தாலும் வெள்ளைவெங்காயம் பட்டையைக் காடி விட்டிடித்து அரைக்கால்படி சாறுகொடுத்தாலும் தீரும்.

## விரியன்மண்டலிகடி.

| | | |
|---|---|---|
| அழுக்கறா | } | இஞ்சி |
| சூரை | } | நக்காலி |
| பங்கு | } | இலுப்பை |

இவைகளைச் சிறுநீர்விட்டு அரைத்துப் பூச கடிவாய் வீக்கந்தீரும்.

## மண்டலிபுடையன் விஷம்.

| | |
|---|---|
| மேற்பூச்சு | வசம்பு |
| நற்றுளசியிலை | உள்ளி |

இவைகளை அரைத்துக் கடிவாயிலும் உடம்பிலும் பூசி முழுக்கத்தீரும்.

## இரத்தவிரியன், இரத்தமண்டலி, இரத்தப் புடையன் விஷங்களுக்கு.

வெள்வேலம் பட்டையை ஆவின்மோர்விட்டு இடித்துப் பிழிந்து அரைக்காற்படிசாறு உள்ளுக்கு கொடுத்தாலும் அல்லது கற்சாம்போளச்சாற்றை அரைக்காற்படிவிதம் கொடுத்தாலும் கொடிவேலிவேரை அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஆவின்பாலிற் கொடுத்தாலும் மேற்படி விஷங்கள் தீரும்.

| | |
|---|---|
| ஆடுதின்னாப்பாளைவேர் | வெள்ளெருக்குவேர் |
| கருந்தும்பைவேர் | மருக்காரைவேர் |

இவைகளை ஓர் நிறையாய் அரைத்து உடம்பிற்பூசி முழுக்க மேற்படி விஷங்கள் தீரும்.

## சுருட்டைப்பாம்புகடி விஷத்திற்கும், குழிப்பாம்புகடி விஷத்திற்கும்.

| | |
|---|---|
| கொல்லங்கோவை | பேய்க்குமட்டி |
| நீலகுருவி | அவுரி |
| அமுக்குரா | ஆடுதின்னாப்பாளை |
| முப்பிரண்டை | வெள்ளெருக்கு |
| கொடிவேலி | |

இவைகளின் மூலம் ஓர் நிறையாய்ச் சூரணஞ்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் வைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கத்தீரும் மேற்படி விஷகடியாலுண்டாகும் புண்கள் ஆறும்.



## செவிப்பாம்பென்ற செய்யான்கடி.

வெண்மை செம்மை நிறமாய் சிகம்புற்போல் நீண்டதாயிருக்கும் இதுகடித்தால் தேகமெங்கும் சிறு தடிப்பும் நமைச்சலும் உண்டாம் இது செவியில் நுழைந்தால் பிராணபயமுண்டாம்.

| | |
|---|---|
| கோவையிலை | வேலிப்பருத்தி |
| வெற்றிலை | முடக்கொத்தான் |
| கொழுஞ்சி | |

இவைகளின் இலைகளை இடித்துச் சாறுவாங்கி கொதிக்க வைத்து கடிவாயிற் பூசக் கடுப்புத்தீரும்.

பேய்ப்பீர்க்கம்வேர், மிளகு இவை சமன் பொடித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுக்கத்தீரும்.

நாதுளைவேர், நல்வேளைவேர் இவ்விரண்டையும் அரைத்துக் கடிவாயிற் பூசத்தீரும்.

## பூரான்கடித்தால்.

அரைக்காற்படி வன்னியிலைச்சாற்றில் காற்பலம் நாகதாளிவேரை அரைத்துக்கலக்கி ஆறுநாள் அந்திசந்தி கொடுக்கவும் உப்புப்புளிதள்ளிப் பத்தியமாயிருக்கப் பூரான் செய்யான் விஷந்தீரும். மேலும் அவுரிச்சாற்றில் மிளகுத்தூள்சேர்த்து மும்போதுகொள்ள மேற்படி விஷங்கள் தீரும்.

## செவ்வரணை நக்கினால்.

சுக்கு, வசம்பு, கடுகு, ஓர் நிறையாய்ப் பொடித்து திரிகடிப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து வெண்சாரணைவேரை அரைத்து உடம்பிற்பூசி முழுக்கத்தீரும். மேலும் கச்சங்கிராய்வேரும் உள்ளிப்பூண்டும் அரைத்துக்கொடுக்கத் தீரும்.

## பெரிய அரவணை நக்கினால்.

மூக்கறைச்சாரணைவேரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஆவின்பாலிற் கொடுக்கத்தீரும்.

### சிலந்திப்பூச்சி கடித்தால்.

| | |
|---|---|
| ஆடுதின்னாப்பாளைவேர் | இலவங்கப்பட்டை |
| மாங்கிழங்கு | ஏலம் |

இவைகளில் ஒன்றை கொட்டைப்பாக்களவு அரைத்து உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத்தீரும்.

## பதினெட்டுவகை வண்டுகடிவிஷத்திற்கும்

வண்டு கொல்லிப்பட்டையை அரைத்து கொட்டைப்பாக்களவு எட்டுநாள் கொடுத்து உடம்பிலும் பூசிவரத்தீரும்.

ஆடுதீண்டாப்பாளை வேராயாவது பிராய்வேராயாவது சூரணஞ்செய்து சாப்பிட்டுவரத் தீரும்.

வெள்ளருகு, சிறியாநங்கை, வெள்ளைக்காக்கட்டான் இவைகள் மூன்றையும் சமனெடை சூரணஞ்செய்து சாப்பிட்டுவர சர்வ வண்டுகடிவிஷங்களுந் தீரும்.

## செவ்வட்டை கடிவிஷம்.

எட்டிக்கொட்டையை ஆவின் நெய்யில் வேகவைத்து ஒரு காசிடைவீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

புனல்முருங்கைவேர், நந்தச்சூரிவேர் இவ்விரண்டும் சூரணித்து அதில் வெப்பாலைப் பட்டைத்தயிலம் காசிடை வைத்து உண்ண மேற்படி அட்டை விஷமும் காட்டு அட்டைவிஷமும் தீரும்.

## முசுஉண்ணி, காட்டுண்ணி, சருகுண்ணி, இவைகள் கடித்தால்.

குப்பைமேனியிலையும், உப்புங் கசக்கித்தடவத்தீரும்.

காணாக்கடிக்கு கருஞ்சிவனார்வேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து பெருந்தும்பை யிலையை அரைத்து உடம்பிற்பூசி முழுக்கத் தீரும்.

## செஞ்சாரை, கருஞ்சாரை, வெண்சாரை, மஞ்சட்சாரை என்ற நான்கு வகையி லொன்று அடித்தால்.

அவுரிவேரும், மிளகும் அரைத்து உள்ளுக்குக்கொடுத்து நல்லவேளைச்சாற்றை உடம்பிற்பூசி முழுக்கத் தீரும்.



## தேள் நட்டுவாக்காலி கொட்டினால்.

| | |
|---|---|
| காஞ்சிரைவேர் | நாய்க்கொட்டான்வேர் |
| அவுரிவேர் | பொன்முசுட்டைவேர் |

இன்னான்கையும் ஓர் நிறையாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் இளவெந்நீரில் கொடுக்கத் தேள் நட்டுவாக்காலி விஷம் தீரும்.

| | |
|---|---|
| பொன்முசுட்டை | ஆடுதீண்டாப்பாளை |
| முப்பிரண்டை | வேலிப்பருத்தி |
| நாகதாளி | நிலவேம்பு |

இவைகளின்வேரை ஓர் நிறையாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் வெந்நீரில் கொடுக்க சகலவிஷங்கள் தீரும்.

| | |
|---|---|
| கொல்லங்கோவைக்கிழங்கு | மாவிலிங்கைவேர் |
| ஆடுதீண்டாப்பாளைவேர் | |

இந்த 3-ல் எதையாவது ஒன்றை ஆதித்தவாரத்தில் வெட்டிவந்து கொஞ்சம் வெற்றிலையில் வைத்து தின்னக்கொடுத்து கடிவாயிலும் பூசத் தீரும்.

எட்டிவிரையை முலைப்பாலிலுரைத்துக் கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் பூசத்தீரும்.

முந்தின செவ்வலரிவேர் பட்டையை வெள்ளெருக்கம் பாலில் 3 நாள் ஊறப்போட்டு நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு கொஞ்சம் வெற்றிலையில் வைத்துத் தின்னக்கொடுத்து அதை எருக்கம்பாலில் உரைத்துக் கடிவாயிற்பூசத்தீரும்.

மனிதருடைய கேசத்தைச் சீவித் துணியிற் சுருட்டித் தீயிற் கொளுத்தி அந்தப் புகையை நாசியிற் பிடிக்க மேற்படி விஷம் வெளியிறங்கும்.

உ

ஸ்ரீராமஜெயம்.

## சகலமான சற்பவிஷத்திற்கும்

# பரணிமருந்து.

இந்த பரணி மருந்தானது எமது முன்னோர்கள் முதல் குமாரர் மூன்று தலைமுறைகளாகக் கையாடப்பட்டது மிகவும் அநுபோகமானது இந்த அவுஷதத்தை யாவரும் செய்து வைத்துக் கொண்டிருந்தால் விஷமென்பதற்கு எள்ளளவும் பயப்படவேண்டியதில்லை இம்மட்டில் சொல்லிய முறைகளெல்லாம் பல சாஸ்திரத்திலிருந்து பொறுக்கியெடுத்ததே யொழிய இதைப் அநுபோகமானதல்ல.

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாஷாணம் | விராகனிடை | 1 |
| மனோசிலை | ,, | 1 |
| இரசம் | ,, | 1 |
| அரிதி | ,, | 1 |
| நெல்லிக்காய்கெந்தகம் | ,, | 1 |
| பெருங்காயம் | ,, | 1 |
| வெப்பாலருப்பு | ,, | 1 |

ஆக இவைகள் 7-க்கும் மொத்தம் விராகனிடை 7 ம் சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனிடை 14 ஆக மொத்தம் 21-விராகனிடையும் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கம் பால் ஆழாக்குப் பிடித்தாவது கொஞ்சகொஞ்சமாய் விட்டுவிட்டு அரைக்கவும் மேற்படி ஆழாக்குப்பாலும்விட்டு இரண்டுஜாமம் அரைத்தபிறகு வேப்பெண்ணை அரையாழாக்குவிட்டு ஒரு ஜாமம் அரைக்கவும் மெழுகுபதமாய் அரைத்து வழித்து எருமைக்கொம்பு டப்பியில் வைத்துக்கொள்ளவும் விஷந்தீண்டி வந்தவர்களுக்கு உளுந்தளப்பிரமாணம் யெடுத்து வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும் (இதற்குப்பத்தியம்) மோர் சாதம் கொடுக்கவும் அல்லது கட்டுப்புளி மருந்துக்கொப்பு கூடிய மிளகுநீர் சாதம்கொடுக்கவும் அன்றிரவு நித்திரை செய்யக்கூடாது.



விஷம் தலைக்கேறி பற்கிட்டியிருந்தால் உச்சியில் கீறி அந்த கீறலுக்குள் இந்த மருந்தில் உளுந்தளவு வைத்து அழுத்தி இரும்பவும் கொஞ்சம் மருந்துவைத்து அழுத்திதேய்த்து வட்டமாக ஒட்டுபில்லை நறுக்கி உச்சியில் அழுத்தமாக வைத்துக்கட்டவேண்டியது. வென்னீரில் உளுந்தளவு மருந்திழைத்து பல்லை நீக்கி உள்ளுக்குச் செலுத்தவேண்டியது மூன்றேமுக்கால் நாழிகையில் மூர்ச்சையானவன்போல் யெழுந்திருப்பான் பத்தியம் முன்போலவே செய்யவேண்டும்.

ஆடு மாடு முதலிய மிருகங்களுக்கு குன்றிமணியளவு வெற்றிலைச்சாற்றிலாவது வென்னீரிலாவது இழைத்து மூக்கிற் குழையினால் உள்ளுக்குச் செலுத்தவேண்டியது. குருணையரிசி கஞ்சிகாய்ச்சிக் கொடுக்கவும்.

## பத்திய விபரம்.

முன்கூறியபடி மனிதருக்கு மருந்து கொடுத்தபிறகு 24-மணிநேரம் வரையில் ஆகாரம், தாகம், நித்திரை இதுகள் கூடாது. அதன்பிறகு குருணையரிசிச்சாதம் மிளகுநீர் இவைகொடுக்கலாம். ஆடு மாடு முதலிய மிருகத்திற்குக்கூட 24 - மணிநேரம் வரையில் ஆகாரம்வைக்கல் தண்ணீர் இதுகள் காட்டக்கூடாது. அதன்பிறகு கருப்புநெல் அல்லது மணக்கத்தை அல்லது குருவையரிசி யெடுத்து கஞ்சிகாச்சி மாடுகளுக்கு 2 படி கஞ்சிக்கு அதிகப்படாமல் கொடுக்கவும். அதற்குப்பிறகு தாங்கள் வழக்கம்போல் கொடுக்கிற தீனி கொடுக்கலாம்.

## மருந்துசெய்யும் காலம்.

இம்மருந்து செய்யவேண்டியவர்கள் ஆதிவாரத்தில் சகல மருந்தும் தயார் செய்துக்கொண்டு நடுவாசலில் சுத்திசெய்து கல்வமும் மருந்துகளும் வைத்து சூரியபகவானுக்கு தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து ஆகாயத்தைப்பார்த்து கெருடபகவானை நினைத்து நமஸ்காரம்செய்து அரைக்கவேண்டியது. அரைக்கும்போது புளிப்பு மோரும் கூழும் கரைத்து திருப்தியாக சாப்பிட்டு விட்டு அரைக்கவேண்டியது. மேற்கூறிய கணக்குப்படி 3 ஜாமம் அரைத்தபிறகு விளக்கெண்ணை தேய்த்து தலைமுழுக வேண்டியது.

## நல்லபாம்பு விஷத்திற்கு.

நேரும்வாளைப்பருப்பெடுத்து நேர்த்தகன்னம்மைத்தரைத்து
காரும்வெற்றிலைபாக்கிலிட்டு கைச்சிமென்று முழுங்கிவிட
மாரும்வாக்கியேபேதியுமாய் மண்டையிலேறாவிஷந்தீரும்
பாரும்பத்தியம்பாசிபயர் பச்சரிசியும் பால்கூட்டே.

## தேள்கடி விஷத்திற்கு.

விருட்சிக மாத்திரை 50 எட்டிப்பழ சதையுடன் வெள்ளை பாஷாணம் பலம் 1 சிறு துண்டுகளாக யிட்டு ஆட்டு கோமையம் வெள்ளெருக்கன்பால் இரண்டு பலம் விட்டு மூடி 40 நாள் புதைத்து எடுத்து பாஷாணமாத்திரம் எடுத்து எருக்கன் பாலா லரைத்து மாத்திரைசெய்து ஜலத்திலிழைத்து கடிவாயில் தடவி அனல் காட்ட விஷம் நீங்கும்.

## சகல எலிகடிக்கும்-வேறுமுறை.

ஆடுதின்னாப்பாளைவேர் விளாம்பட்டை மஞ்சள் வகைக்கு பலம் ௧ வெந்நீரிலரைத்து ௩ நாள் கொடுப்பதாலும் படி எள்ளெண்ணெயில், சித்திரமூலவேர், உத்தாமணிவேர் மிளகு இவைவேர் வகைக்கு பலம் ௧ பசுவின்பாலிலரைத்து கலக்கி காச்சி வடித்து காசிடையாக ௩ நாள் கொடுக்க உப்பு புளி நீக்கவும்.

## நல்லபாம்புவிஷத்திற்கு வேறு.

வெள்ளருகு இலையை உள்ளுக்குக் கொடுத்தாலும் எருக்கிலை புகையும்கசக்கி கண் காது நாசியில்பிழிந்தாலும் தும்பை துளசி மிளகு உப்பு வெற்றிலை கசக்கி பிழிந்தாலும் விஷம் நீக்கும் தும்பை ரசத்தில் மிளகு அரைத்து கொடுக்கவும்.

விஷநூல் முற்றிப்பெற்றது.

---

உ

ஸ்ரீராமஜெயம்.

# மூலிகைமர்மம்.

என்னும்

## சாஸ்திரத்திற்கு அநுபந்தம்.

மூலிகைமர்மம் மென்னும் நூலில் முழுமையும் பச்சிலைப் பிரயோகமே யானபடியால் அதில் சேரவேண்டிய சில கடைசரக்கு ரசகெந்தபாஷாணாதி முறைகளை பார்வதிபரணியத்தில் பார்த்துக்கொள்ளலாமென்று மேற்படி நூலில் ஆங்காங்கு கண்டிருக்கிறது ஆகையால் மூலிகைமர்மத்தில் இன்னபக்கத்தில் சொல்லிய முறைக்கு இன்னபாகம் சேர்த்துக்கொள்ள வேணுமென்று இங்கிருந்து சொல்லப்பட்டு வருகிறது.

மூலிகைமர்மம் 4-வது சயிட்டித்குறிய

## பிராணசஞ்சீவிமாத்திரை.

| | |
|---|---|
| சுக்கு | காயம் |
| திப்பிலி | பூண்டு |
| மிளகு | நெல்லிக்காகெந்தகம் |

இவைகள் சமனிடையெடுத்து ஒன்றிரண்டாயிடித்து கலுவத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார்விட்டு இரண்டுநாள் ஊறியபிறகு இஞ்சியும் பழச்சார்விட்டு அரைத்து உளுந்துபோலவும் கடலைபோலவும் உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு மூலிகைமர்மம் 4 வது பேஜியில் சொல்லியிருக்கும் வயற்றுக்கடுப்புக்கு அம்மர்மத்தில் சொல்லிய அநுபானத்துடன் கொடுத்தாலும் அல்லது இந்த பிராணசஞ்சீவி மாத்திரையைத் தனியாக வெந்நீரிலாவது கொத்தமல்லியிலாவது சக்கரையிலாவது கொடுத்தால் வயற்றுக் கடுப்பு நிவர்த்தியாகும் பத்தியமில்லை.

## மூலிகைமர்மம்5-வது சமிட்டில்சொல்லிய முறைக்கு அனுபந்தம்.

## கெர்ப்பமுண்டாகளண்ணை.

| | |
|---|---|
| மிளகு | கஸ்தூரிமஞ்சள் |
| ஓமம் | ஜாதிக்காய் |
| திப்பிலி | வெள்ளைவெங்காயம் |
| இந்துப்பு | கருவண்டு |
| வசம்பு | கருங்கம்பளி |

இவைகள் வகைக்கு 3 விராகனிடையாக யெடுத்து இடித்து கலுவத்திலிட்டு கொஞ்சம் விளக்கெண்ணெயிட்டு மைபோல் ஆகுமளவும் அரைத்து 25 பலம் விளக்கெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு கெர்ப்பம் இல்லாத பெண்களுக்கு குறுஸ்நானம் வந்தபிறகு தலைமுழுகின மறுதினம் முதல் பிரதிதினமும் காலையில் ஒரு உச்சிக்காண்டிவிதம் 15 நாள் கொடுக்கவும். இரண்டாவது தலைமுழுக்கு வந்தபிறகு முன்போலவே 15 நாள் கொடுக்கவும் எண்ணெசாப்பிடும்போது பத்தியம் கட்டபுளி வருத்த உப்பு சேர்க்கவேண்டியது. கைப்பு, புளிப்பு இல்லாதிருந்தால் மிகவும் உத்தமம் மறுமாதமே கெர்ப்பந்தரிக்கும்.

—o:o—

தாது புஷ்டிக்கு,

## மதனசிந்தாமணிலேகியம்.

| | |
|---|---|
| சுக்கு | வெந்தியம் |
| திப்பிலி | இலவம்பிசின் |
| மிளகு | இலவைவிரை |
| ஏலம் | ஆலம்விரை |
| கிராம்பு | அரசம்விரை |
| உளுந்து | அத்திவிரை |
| எள்ளு | ஆவாரம்விரை |
| கோஷ்டம் | ஆளிவிரை |



| | |
|---|---|
| நெருஞ்சிவிரை | செங்கழுநீர்ப்பூ |
| நீர்முள்ளிவிரை | லவுங்கப்பட்டை |
| பழுபாகல்விரை | ஜாதிக்கா |
| கொத்தமல்லிவிரை | ஜாபத்திரி |
| இந்துப்பு | சீரகம் |
| வசம்பு | கருஞ்சீரகம் |
| கடுக்காய்ப்பூ | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| மதனகாமப்பூ | நிலப்பனைக்கிழங்கு |
| கிராம்பு | அமுக்கறாங்கிழங்கு |
| சோம்பு | வாழைக்கிழங்கு |
| இலுப்பைப்பூ | சத்திசாரணை |
| தென்னம்பூ | சிறுகாஞ்சொறி |
| பனம்பூ | கொடிமுந்திரி |
| நெல்லிக்காய்வற்றல் | சிந்தில் |
| தாணிக்காய்தோல் | சிறுதேக்கு |
| கடுக்காய்தோல் | குராசாணிஓமம் |

இவைகள் வகைக்கு 1 பலம் யெடுத்து உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து வாய் அகண்ட பெருஞ்சட்டியில் 2 படி பால் 2 படி ஜெலம்விட்டு அடுப்பேற்றி எய்புரத்திற்கு மெல்லிய துணியினால் மேடுகட்டி மேற்படி சூரணங்களைக் கொட்டி பரவ வைத்து மேல்சட்டி கவிழ்த்து மூடி புட்டவியல் செய்யவும் இரண்டுபடி ஜெலமும் வற்றுமளவும் தீயெரித்து சட்டியை யிறக்கி சூரணத்தைஎடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு முக்கால்படி பசும்பாலை அடுப்பிலிட்டு 15 பலம் சீனிசர்க்கரையிட்டுக் கலந்து பாகுபதமாய்செய்து இரக்கிக்கொண்டு மேற்படி சூரணத்தை சிறுகத்தூவிக் கிளரிக்கொண்டே யிருக்கவும் சூரணங்களியாவும் ஆனபிறகு கால்படி தேனில் கால்பலம் அபினியையிழைத்து அந்ததேனைவிட்டுக் கிளரவும் அல்லது கையினால் நன்றாய் பிசைந்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிடவும். இப்படி காலைமாலை யிருவேளையும் 40 நாள் இன்னா வேண்டியது.

### இதற்குப் பத்தியம்.

பகற்காலத்தில் புளிப்பு சேர்ந்த குழம்பு ரசம் பதார்த்தம் முதலியதும் ஆகும். இராத்திரியில் மட்டும் பாலும் சாதம் சாப்

பிடவேண்டியது. வாகிரிவஸ்துக்கள் கூடாது. ஸ்ரீ சஞ்சாரமயில்லாதிருந்தால் உத்தமம் தேகம் பலக்கும் தாதுபுஷ்டியுண்டாகும்.

## மதனகாமேசுர லேகியம்.

| | |
|---|---|
| சுக்கு | ஏலம் |
| திப்பிலி | முள்ளிலவம்பிசினி |
| மிளகு | சுத்திசெய்தகெஞ்சா |
| அதிமதுரம் | அமுக்கராக்கிழங்கு |
| நீர்முள்ளிவித்து | கண்டாரிவிட்டான்கிழங்கு |
| நெருஞ்சிவித்து | மருட்கிழங்கு |
| மல்லி | ஆனைத்திப்பிலி |
| கோஷ்டம் | சிறுநாகப்பூ |
| ஜாதிக்காய் | வெந்தியம் |
| உளுந்து | கொடிவேலிவேர் |
| எள்ளு | நெல்லிக்காய் |
| கொடிமுந்திரிப்பழம் | மாசிக்காய் |
| பேரீச்சங்காய் | தான்றிக்காய் |
| அதிவிடையம் | அபினி |
| கஸ்தூரிமஞ்சள் | சண்பகப்பூ |
| கசவிக்கிழங்கு | பெருஞ்சீரகம் |

இவைகள் வகைக்குப்பலம் (கால்) யெடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து இதற்குச் சரியிடை பூனைக்காலி வித்தின் பருப்புச் சூரணம் சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டுபடி பசும்பாலே அயப்பிலேற்றி 20 பலம் சீனிபோட்டுக்கலந்து பாகுபதத்தில் இறக்கி மேற்படி சூரணத்தை கொஞ்சகொஞ்சமாய்த்தூவிக் கிளறிக்கொண்டிருக்கவும் பாகும். ஆனபிறகு ஆறவைத்து வேண்டியமட்டும் தேன்விட்டு பிசைந்து வைத்துக்கொள்ளவேண்டியது. மேற்படி சூரணம் தூவிக்கிளறும்போது அயபிரேக்கு சிந்தூரம் கால் பலம் கூடக்கலந்து தூவவேண்டியது. இந்த லேகியத்தை ஒருவேளைக்கு தேத்தான் கொட்டைப்பிரமாணம் இருவேளையும் சாப்பிடவும் வீரியவிருத்தியுண்டாகும். இந்திரியம் கட்டும் அதிசாரம் கிராணி பித்தமேலேத்துமம் வாய்வு இவையாவும் தீரும்.



### பத்தியம்.

புளி, நல்லெண்ணை, கடுகு இவை நீக்கி நெய் பால் முருங்கைப்பிஞ்சு இவை கூட்டவும். அயபிரேக்கு சிந்தூரத்தை பின்வரும் சிந்தூரம் பக்கத்துடன் சொல்லியிருக்கிறது.

(*)

## மதனகாமரசக் குளிகை.

| | |
|---|---|
| பூமிசக்கரைக்கிழங்கு | பூனைக்காலிவித்து |
| நிலப்பனைக்கிழங்கு | முருங்கைவித்து |
| சமுத்திராசோகிவிரை | முத்தக்காசு |
| சாரப்பருப்பு | கிராம்பு |
| ஜாதிக்கா | வெண்காரம் |
| ஜாபத்திரி | லிங்கம் |
| அபினி | வாலைரசம் |
| கஞ்சா | |

இவைகள் வகைக்குப்பலம் (அரை) இவைகள் யாவும் பொடித்துக்கொண்டு, ஒரு முற்றின தேங்காய் கொண்டுவந்து குடுமிமுதலியதும் போக்கி தேங்காயின் கண்கள் மூன்றையும் துவாரம்செய்து ஜெலத்தைக் கொட்டிவிட்டு முன் பொடித்திருக்கும் மருந்துகளை உள்ளே செலுத்தி அந்த துவாரத்திற்குத் தகுந்த காரக்கு அடைத்து மேலே ஒரு அங்குலகனம் சாணி தடவி புலர்த்தபிறகு முழப்புடமிடவும் சிரட்டை கருகின உடன் யெடுத்து மேல் சிரட்டையை நீக்கிவிட்டு மற்றதை கல்வத்திலிட்டு மெழுகுபோல் அரைத்துக்கொண்டு தேற்றான்விரைப்பிரமாணம் உருட்டி சக்கரையில் பொதிந்துச்சாப்பிடவும் இப்படி காலைமாலை யிருவேளையும் தின்னவும் இராக்காலத்தில் புளிசேர்ந்த பதார்த்தங்கள் புளிப்பு பழவர்க்கங்கள் புளிப்பு மோர் முதலியதும் ஆகாது பால் அன்னம் புசிக்கவேண்டியது. பகலில் கட்ட புளி வருத்த உப்பு கூட்டிக்கொள்ளவும் தாதுபுஷ்டியுண்டாகும் புணர்ந்தால் கட்டுகலையாது இதற்கு மாற்று எலுமிச்சம்பழம்.

## செஜபலக் குளிகை.

| | |
|---|---|
| சிறுபூளைக்காலி | பொசிமுசுக்கை |
| நத்தச்சூரி | அகத்தி |
| நீர்முள்ளி | தேற்றான் |
| முருங்கை | அழிஞ்சில் |
| அமுக்குரா | வில்வம் |
| செம்முள்ளி | நெல்லி |
| நெருஞ்சி | அத்தி |
| ஊமத்தை | ஆத்தி |
| ஓரிலைத்தாமரை | அரசு |
| கெஞ்சா | ஆல் |
| ஆவாரை | அவுரி |
| முள்ளி | புரசு |
| சங்கு | முசுட்டை |
| கள்ளை | சிவன்வேம்பு |
| திரிபலை | செந்நாயுருவி |
| கருவேல் | பாற்கொரண்டி |
| வன்னி | கொன்றை |
| மருது | எள்ளு |
| மாங்கொட்டை | கொத்தமல்லி |
| கிலப்பனைக்கிழங்கு | முருங்கை |
| அமுக்குராக்கிழங்கு | விளா |
| நன்னாரிவேர் | வேலா |
| சமுத்திராப்பழம் | வேப்பு |
| வாழை | இலவு |
| சாதிக்காய் | சீனிக்கற்கண்டு |
| சாதிபத்திரி | வெள்ளைக்குங்கிலியம் |
| குரோசாணிஓமம் | மதனப்பூ |
| சங்கனை | அப்ரேக்செந்தூரம் |

இவைகள் யாவற்றும் வகை யொன்றுக்குப்பலம் அரைக்கால் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து இந்த சூர்ணத்துடன் அப்பிரக்செந்தூரம் சேர்த்துக்கொண்டு கொடிமுந்திரிப் பழம்சாற்றில் மூன்று நாளரைத்துக் கடலைப்பிரமாணம் உருட்டி வேளையொன்றுக்கு ஒரு குளிகைவீதம் ஆவின்பாலில் ஒரு மண்டலம் கைப்புப் புளிப்பு நீக்கி உட்கொள்ள யானைப்பலம் உண்டாகும் தாதுவிருத்தி விசேஷமுண்டாகும் சுக்கிலங்கட்டும்.



## மதன சஞ்சீவி.

ஒரு படி ஆவின் பாலில் காதுபலம் கோதம்பைமாவும் இருபது பலச்சீனியையும் போட்டுக் கிண்டிக் காய்ச்சிப் பாகுபதத்தில் நீர்முள்ளிவிரை, கிலப்பனைக்கிழங்கு, லவங்கப்பட்டை, பனைவேர் வகைக்குப்பலம் 4 கருவேலம்பிசின், கெஞ்சா வகைக்குப்பலம் 2 சந்தனம், சாதிக்காய், கிராம்பு, பெருஞ்சீரகம்வகைக்கு விராகனிடை 2 திப்பிலிபலம் ௨ இவைகளை யிடித்து சூரணித்துத் தூவி செப்பு ௨ விட்டுக்கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆத்தி பேரிச்சம்பழம் பலம் 4 தேன்பலம் 10 சேர்த்துப் பிசைந்து வேளையொன்றுக்கு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர விந்து ஊறும் போகம் மிகும்.

## சொர்ணபற்பக்குளிகை.

| | |
|---|---|
| அபினி | சாம்பிராணிப்பூ |
| மதனகாமப்பூ | முருங்கைவித்து |
| கிராம்பு | ஆலம்வித்து |
| ஜாதிக்காய் | அரசம்வித்து |
| மராட்டிமொக்கு | அத்திவித்து |
| அதிமதுரம் | தங்கபற்பம் |

இவைகளை ஓர்நிறையாயெடுத்து முருங்கைப்பூவின் சாற்றால் அரைக்கவும் மிகவும் நன்னிமைபோல் ஆட்டி சிறுகண்டையளவு மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு பசும்பாலில் முருங்கைப்பூ போட்டுக் காச்சிய காற்படி பாலில் ஒரு உருண்டையிழைத்து சாப்பிடவும் இப்படி இரவில் ஒரே வேளையாக ஒரு மண்டலம் சாப்பிடவேண்டியது. உப்பு புளி நீக்கி பத்தியம் பாலும் அன்னமும் தின்னவேண்டியது பெண்மயக்கம், வாகிரி, புகையிலை, இவை நீக்கி யிருந்தால் தேகம் தங்கமயமாயிருக்கும் தேகம் பலக்கும் தாதுகட்டும் மேற்படி ஒருமண்டலம் ஆனபிறகு மனம்போல் நடக்கலாம்.

மேற்கூறிய தங்கபற்பம் பின்வரும் சித்தராம் பற்பம் கூறிய வகுப்புகளுடன் சொல்லப்படும்.

## பூரணமதனவல்லாதி.

| | |
|---|---|
| நாயுருவிவித்து | அரசம்வித்து |
| நத்தைச்சூரிவித்து | ஆலம்வித்து |
| பாற்சொரிவித்து | அத்திவித்து |
| கஞ்சாவித்து | முருங்கைவித்து |
| துளசிவித்து | நீர்முள்ளிவித்து |
| திருநீற்றுப்பச்சைவித்து | பூனைக்காலிவித்து |
| கருவேலம்வித்து | ஆவாரைவித்து |
| சிறுகீரைவித்து | பொன்னாவாரைவித்து |
| புரசைவித்து | தேற்றான்வித்து |

இவைகள் வகைக்கு களஞ்சு 2.

| | |
|---|---|
| சுக்கு | ஓமம் |
| திப்பிலி | வாலுழுவையரிசி |
| மிளகு | கோஷ்டம் |
| ஜாதிக்காய் | சாரப்பருப்பு |
| ஜாபத்திரி | வால்மிளகு |
| கிராம்பு | மதனகாமப்பூ |
| சோம்பு | சிறுநாகப்பூ |
| கருவாப்பட்டை | சக்கரை |
| ஏலம் | அபினி |

இவைகள் 18 இனுக்கும் வகைக்கு களஞ்சி 3.

| | | |
|---|---|---|
| [illegible] | பலம் | 2 |
| பூமிசர்க்கரைக்கிழங்கு | ,, | 2 |
| சுத்திசெய்தசேங்கொட்டை | ,, | 2 |
| அமுக்கராங்கிழங்கு | ,, | 1 |
| கொடிமுந்திரிப்பழம் | ,, | 1 |
| பேரீச்சம்பழம் | ,, | 1 |
| சுத்திசெய்த வறுத்த கெஞ்சா | ,, | 4 |

இவைகள்யாவும் கல்லுரலில்போட்டு நாலுஜாமம் இடித்து மெல்லிய தூளாக யாவும் கலந்த பிறகு சீனி (5) பலம் சுத்ததேன் (25) பலம் சேர்த்து மெழுகுபோல் இடித்து வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு அரைவிராகனிடை வீதம் பசும்பாலில் சாப்பிட்டு வந்தால் கட்டும் சந்தியமாக்கினால் எலுமிச்சம் பழச்சாறும் புளிச்சாறும் கொஞ்சம் அருந்தினால் மாறும்.



## மதனப்பால்.

சந்தனம், நேர்வாளம்விதை, முருங்கைவேர்ப்பட்டை இவைகள் சமனிடையெடுத்து தேங்காய்ப்பாலில் அரைத்து வேளைக்கு புன்னைக்காயளவு உட்கொண்டுவர விந்துகட்டும் வலிவுண்டாகும் புளி நீக்கி பாலன்னமுண்ணவும்.

### இதுவுமது.

முருங்கைப்பூ நெருஞ்சிப்பூ இளந்தென்னம்பாளை புங்கிருக்கும் அரிசி இவை சமன் கொண்டு பாலில் அரைத்துப் பாலில் காய்ச்சியுண்டுவர தாதுவிருத்தியுண்டாம்.

---

மூலிகைமர்மம் 9-வது சயிட்டில் சொல்லியிருக்கும்

சஞ்சீவிமூலிகை யென்னும்,

## அழுகண்ணிச் செடியின் விபரம்

இக்கல்கண்ணி பாஷையில் (நாகந்திலிலே) என்னும் அழுகண்ணியிலையானது உட்டிலைபோல் சிறிதாயும் வழுவழுப்புள்ளதாயும் நடப்புறம் பூமியை நோக்கியும் பிற்புறம் ஆகாசத்தை நோக்கியுமிருக்கும் அதில் நின்று ஜலமொழுகுவதைப்போல தோற்றும் இது சிறிது குளிர்ச்சியுடையதாகவும் கொஞ்சம் உப்புக்கரித்துமிருக்கும் இந்தச்செடி யிருக்கும் பூமி கசிவாய்க்கருத்திருக்கும் எறும்புகளெப்போது மொய்த்துக்கொண்டிருக்கும் உயர்ந்த நிலத்தில் முளைக்கும் இதிலொன்றி ஜாதியுண்டு அதிலொன்று ஒருமுழ உயரமுமற்றொன்று ஒருசாணுயரமுமிருக்கும்.

---

மூலிகைமர்மம் 14-வது சயிட்டில் சொல்லிய

சர்வசுரக்ஷேயத்திற்கு அனுபந்தம்.

## சர்வசுரக் குளிகை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கெந்தகம் | விராகனிடை | 1 | சுக்கு | விராகனிடை | 4 |
| இரசம் | ,, | 1 | திப்பிலி | ,, | 4 |
| நாபி | ,, | 1 | மிளகு | ,, | 4 |
| ஊமத்தன்விதை | ,, | 3 | (பழச்சாறு) | | |

இவைகள் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 3 ஜாமமட்டும் அரைத்து மிளகளவு மாத்திரைசெய்து வைத்துக் கொண்டு பித்தசுரத்திற்கு இஞ்சிச்சாற்றிலும் வாதசுரத்திற்கு முருங்கப்பட்டைசாற்றிலும் கொடுக்கவும் குளிர்சுரத்திற்கு இஞ்சி பூண்டு முருங்கப்பட்டை இம்மூன்றும் இடித்து சாறுவாங்கி சுரசம்செய்து முரித்த தேன் முலைப்பால் கொஞ்சம் விட்டு இரண்டு மாத்திரைகள் இழைத்துக் கொடுக்கவும்.

## இதற்குக்கஷாயம்.

பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், சிந்தில், சுக்கு, இவைசமன் கொண்டிடித்து எட்டொன்றாகக் கஷாயம் வைத்துக்கொடுக்கவும் அல்லது மூலிகைமர்மம் 14 - வது சயிட்டில் சொல்லியிருக்கும் பொடிக் கொடுக்கவும் காலைமாலை மாத்திரை கொடுத்தபிறகு இந்த கஷாயம் கொடுக்கவேண்டியது.

## பத்தியம்.

அசாத்தியசுரமானால் கோதுமை பொய்யை வறுத்து ஜெலம்விட்டு கஞ்சிகாய்ச்சி வறுத்த உப்பு போட்டுக்கொடுக்கவும் புளிப்பு கூடாது சற்று லகுவானசுரமானால் கட்டுபுளி வறுத்த உப்பு கத்திரி, முருங்கை, அவரை, இதுகளின் பிஞ்சு கூட்டவும் சுரம் விட்டபிறகு [illegible] காய்ச்சிய எண்ணெயிலும் தலைக்கு வார்க்கவும்.

இந்த மாத்திரையை தலைவலி, உடம்புஅசல், கைகால் அசதி இப்படி உள்ளவர்கள் இரண்டு மாத்திரையெடுத்து ஒரு வெற்றிலையில் வைத்து மடித்துத்தின்னவும் இப்படி இருவேளையும் தின்னவும்பத்தியமில்லை மிளகுநீர்சாதம் வெள்ளைசக்கரைபோடு காணாப்பொடி சுரா, இதுகள் குழம்பு சாப்பிடலாம்.

—(*)—

ஜன்னி சீதளம் முதலானதற்கு

## ஆனந்தவயிரவ மாத்திரை.

| | |
|---|---|
| காவிக்கிழங்கு | மனோசிலை |
| இரசம் | லிங்கம் |
| கெந்தகம் | வெண்காரம் |



இவைகள் ஆறுதினுசும் சமனிடை யெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில்போட்டு வைத்துக்கொள்ளவும்.

## இதற்கனுபானம்.

ஜன்னிக்கு முலைப்பாலில் முருங்கப்பட்டை சுரசம் இதுகளில் இரண்டொன்று வேளைகொடுக்கவும் குளிர்சுரத்திற்கு இஞ்சி பூண்டு இதுகள் நசுக்கி சாறுவாங்கி சுரசம்செய்து அதில் இரண்டு மாத்திரையிழைத்து முரித்ததேன் முலைப்பால் இதுகள் கொஞ்சம் விட்டுக் கொடுக்கவும் இப்படி 2, 3, வேளை கொடுக்க நிவர்த்தியாகும் இச்சாபத்தியம் கோதுமைக்கஞ்சி பார்லிஅரிசிக் கஞ்சி, காபி, பிஸ்கோத்து இதுகளும் கொடுக்கலாம்.

———

மூலிகைமர்மம் 17-வது சயிட்டில் சொல்லிய கண்
ணொளிவு சிகிச்சைக்கு அநுபந்தம்.

## நேத்திரரோகம் நீக்கும் தைலம்.

| | | |
|---|---|---|
| தாழம்விழுதுச்சாறு | படி | வ |
| நெல்லிக்காய்சாறு | ,, | வ |
| கரிசலாங்கண்ணிச்சாறு | ,, | எ |
| பொன்னாங்காணிச்சாறு | ,, | வ |
| பசும்பால் | ,, | வ |
| இளநீர் | ,, | வ |
| சிந்தில்சாறு | ,, | வ |
| நல்லெண்ணெ | ,, | 2 |

இவையாவும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றி,

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | காகோளம் |
| சந்தனம் | வெட்டிவேர் |
| அதிமதுரம் | கோரைக்கிழங்கு |
| ஏலம் | ஜாதிக்காய் |
| லவங்கம் | தேவதாரம் |
| லவங்கப்பத்திரி | விலாமிச்சம்வேர் |

| | |
|---|---|
| தாமரைக்கிழங்கு | ஆலம்விழுது |
| வெட்டிவேர் | செங்கழுநீர்க்கிழங்கு |
| வில்வப்பழச்சதை | கிழாநெல்லிவேர் |

இவைகள் வகைக்குப்பலம் (கால்) யெடுத்து பசும்பால் விட்டரைத்துப்போட்டுக் கலக்கி காய்ச்சவேண்டியது மெழுகுபதமாய்க்காய்ச்சி வடிந்து வாரத்திற் கிருவிசை தலைமுழுகிக்கொண்டு வந்தால் நேத்திரரோகம் யாவும் தீரும். அன்றுபால் சித்திரையும் வெய்யலில் திரிச்சலும் கூடாது வேறேபத்தியம் கிடையாது.

குளிர்ச்சிக்கு,

## வேறுவிதத்தைலம்.

| | | |
|---|---|---|
| வில்வப்பழச்சதை | பலம் | 2 |
| வெந்தியம் | ,, | 2 |
| கார்கோலரிசி | ,, | 2 |

இவைகளை பசும்பால் விட்டு மைபோல் அரைத்து [illegible] நல்லெண்ணெயிற் போட்டுக் கரைத்து பதமாய்க்காய்ச்சி முழுகி வந்தால் உடம்பும் கண்களும் குளிர்ச்சியுண்டாகும் சகல [illegible] தணியும்.

மேற்படி நேத்திர ரோகத்தைப் பற்றிய தைல முறையானது இவ்விடத்தில் இரண்டுபாகம் சொல்லப்பட்டிருக்கிறது ஆகையால், இந்நேத்திரரோகத் திற்குரிய பாகங்கள் ஆதியோடந்தமாக 96-வியாதியின் குணமும், அடையாளமும், அவைகளுக்குப் பலவித சிகிச்சைகள் முழுமையும் விபரமாய்ப் பார்க்கவேண்டியவர்கள் (நேத்திரசிந்தாமணி)என்னும் சாஸ்திரத்தில் பார்வையிடலாம். உயர்ந்த கடிதத்தில் சுத்தமாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.



மூலிகைமர்மம் 17-வது சயிட்டில் கூறியதற்குரிய

சகலமாந்தத்திற்கும்,

## பாலசஞ்சீவிக்குளிகை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்தவாளம் | விராகனிடை | 8 |
| சுக்கு | ,, | 7 |
| மிளகு | ,, | 6 |
| நெல்லிக்காய்கெந்தி | ,, | 2 |
| வெண்காரம் | ,, | 2 |
| இரசம் | ,, | 2 |
| கடுகுருணி | ,, | 2 |

இவைகளை மேற்கூறிய நிறைப்படி நிறுத்துக் கலுவத்திலிட்டு இலைக்கள்ளிசாற்றால் மெழுகுபோல் அரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இந்த மாத்திரையை சகல மாந்தத்திற்கும் உபயோகிக்கலாம். நொச்சில், ஆடாதோடை, துளசி, காலாக்கண்ணி, கம்மாறுவெற்றிலை இதுகளை வகைக்குக் கொஞ்சம் எடுத்து சட்டியிலிட்டு வதைக்கி சாறுபிழிந்து அந்த சாற்றில் 1 அல்லது 2 மாத்திரைகள் இழைத்து வார்க்கவும் காலையில் வதைக்கிப் பிழிந்துக் கொண்ட மூலிகைத் திப்பியை வைத்திருந்து மாலையில் சட்டியிலிட்டு சாம்பலாகுமளவும் தீயெரித்து பஸ்பமான பிறகு அத்துடன் சருஞ்சீரகம் போட்டு நன்றாய் பொரித்து [illegible] அத்துடன் கொஞ்சம் மிளகுபோட்டு கொஞ்சம் சுக்குமிளகும்போட்டு ஜலம்விட்டு நாலுக்கொன்றாய் கியாழமிட்டு 2 சங்களவுவார்க்கவும் இப்படி 2, 3, நாள் வார்க்க சகலமான மாந்தமும் தீரும்.

மாந்தவியாதியினால் ரொம்பவும் இளைத்து சக்தியற்ற குழந்தைகளுக்கு காலையில் இரண்டு மாத்திரை யெடுத்துப்பொடித்து ஒரு சங்கு நல்ல ஜலத்தில் கலந்து வார்த்துவிடவும் 1 அல்லது 2 விசை மலப்பிரவிர்த்தியாகும் சுரம், அஜீரணம், வயிர் உப்பிசம் முதலானதும் கண்டிக்கும் மாலையில் கருஞ்சீரகம் ஓமம் சாம்பலாக்கி அதற்குமேல் மிளகு கொஞ்சம் போட்டுக் கடலையிட்டுக்

கொண்டு அதற்குமேல் கொஞ்சம் சுக்கு நசுக்கிப்போட்டு தண்ணீர்விட்டு நாலுக்கொன்றாய் கிஷாயம்வைத்து 2 சங்கு வார்க்கவும் இதற்குத் தாயார் பத்தியமிருக்கவேண்டியது. ஆகாதது வாய்வானபதார்த்தம் தள்ளி மற்றதெல்லாம் ஆகும்.

## பிள்ளைகள் கொருகொருப்புக்கு மாத்திரை.

| | | |
|---|---|---|
| பாப்பாரமுள்ளிப்பூவின்விதை | கால் | துலாம் |
| ஓமப்பூ | அரிக்கால் | துலாம் |
| கோரோஜனம் | அரிக்கால் | துலாம் |
| கஸ்தூரி | ஒருகுண்டுமணி | |
| மூசாம்பரம் | கால் | துலாம் |
| குங்குமப்பூ | 5-குண்டுமணி | |

இதுகளை பச்சைத்தண்ணீர்விட்டரைத்து கம்பு அல்லது பயறுப்பிரமாணம் உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பிள்ளைகள் நெஞ்சில் கபங்கட்டிக்கொண்டு கொருகொருப்புண்டானால் இந்தமாத்திரை கொடுக்கவும்.

இரவில் படுக்கும்போது குழந்தைகள் திடம் அறிந்து 1 அல்லது 2 மாத்திரை யெடுத்து முலைப்பாலில் இழைத்துக்கொடுக்கவும் இப்படி 2 நாள் கொடுத்தால் கொருகொருப்பு வயிர்சுரப்பு இருமல் இவைதீரும் இரவில் கொடுத்தால் பத்திய மிருக்கவேண்டிய அவசியமில்லை.

பிள்ளைகளுக்கு இதேப்பிரகாரம் முலைப்பாலில் இழைத்து காலையில் கொடுத்தால் பத்தியம் இருக்கவேண்டியது. மீன், கருவாடு, கரி இதுகள் ஆகாது இச்சாபத்தியம் இருக்கவேண்டும்.

பெரியவர்களுக்கு மார்சளி, ஜலுப்பு, சீதளம், இதுகளுண்டானால் இரண்டுமாத்திரை யெடுத்து வெற்றிலையில் வைத்து மடித்துத் தின்னவும் இச்சாபத்தியம் 2,3, வேளை தின்னவும்.

---



## பிள்ளைகள் அள்ளுமாந்தத்திற்கு மாத்திரை.

| | | |
|---|---|---|
| முலைப்பாலில் 1 நாள் ஊரவைத்தெடுத்த ரசச்செந்தூரம் | துலாம் | 1 |
| சயிந்தலவணம் | துலாம் | 1 |
| திப்பிலி | துலாம் | 1 |
| சுக்கு | துலாம் | 1 |
| மாசிக்காய் | துலாம் | ௨ |
| சுத்திசெய்தவாளம் | துலாம் | ௨ |
| கோரோஜனம் | துலாம் | ௨ |
| குங்குமப்பூ | துலாம் | ௨ |
| கஸ்தூரி | 3 குண்டுமணியிடை | |

இவைகள்யாவும் மேற்கூறிய நிரைப்படி நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு குப்பைமேனிச்சாறுவிட்டு இரண்டு நாள் அரைத்து பயறுப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்,

### இதற்கனுபானம்.

பொன்னாங்கண்ணிச்சாற்றிலாவது துளசிச்சாற்றிலாவது குப்பைமேனிச்சாற்றிலாவது கொடுக்கலாம் 1 அல்லது 2 மாத்திரை யிழைத்துக் கொடுக்கவும் வயிறுப்பிசம், மேல்சுவாசம், அள்ளுமாந்தம் முக்கல் முதலிய வியாதிகள் தீரும். இதற்குப்பத்தியம் வறுத்த உப்பு சுட்டபுளி கூட்டவேண்டியது அவரவர்கள் குழந்தையின் திடம் அறிந்து வழக்கம்போல் பத்தியமிருக்கவேண்டியது தாய்மார்களின் கடமையாம்.

மூலிகைமர்மம் 20-வது சபிட்டில் கூறிய

## புறவீச்சுக்கு, சிவநாதத் தைலம்.

| | | |
|---|---|---|
| இரசம் | | மிளகு |
| கெந்தகம் | | சேங்கொட்டை |
| வெள்ளுள்ளி | | வகைக்கு (கால்) பலம் |

இவைகளை கலுவத்திலிட்டு பசுவின்வெண்ணெயை போட்டரைத்து துணியில் ஊட்டி வத்திபோல்திரித்து இரும்புக் கம்பியில் கோர்த்து தீயிற் கொளுத்தி சாய்ந்துப்பிடிக்கத் தயிலமிறக்கும் அந்த தயிலத்தை பீங்கானில் விழும்படி பிடித்துக்கொண்டு அதையெடுத்து சீசாவில் பதனம்பண்ணி வைத்துக்கொள்ளவும் பிறவிசுவு அல்லது புரங்கழுத்து வலிப்பு நரம்பிழுப்பு இதுகளுக்கு ஒருகாசுயிடை தயிலத்தை வெற்றிலையில் விட்டு உள்ளுக்குக் கொடுத்துவிட்டு மேலுக்கும் பூசித்தேய்க்க நிவர்த்தியாகும் பத்தியம் கிடையாது.

## புறவிச்சுக்கு வேறு.

இஞ்சிச்சாறு, முலைப்பால், தேன் இவைகளைச் சமமாய்க் கலந்து மேற்படி வியாதிகண்டவுடன் உள்ளுக்குக் கொடுக்கவும். மிஞ்சினால் வேப்பெண்ணெயாவது முன்சொல்லிய தயிலமாவது கொஞ்சம் விட்டுக் கொடுக்கவும் தீரும்.

அல்லது மேற்படி சேங்கொட்டை சேர்ந்த சுடர் தயிலத்தை ஒருகாசுயிடை உள்ளுக்குக் கொடுத்தவுடன் எருக்கம் இலையைக்கொண்டுவந்து வேப்பெண்ணெ தடவி படைநெருப்பிலிட்டு வதக்கி புரங்கழுத்தின்மேலிட்டு குடுமைக்குப்படி அழுத்தமாய் ஒத்திடம் செய்யத்தீரும்.

## சன்னியைச்சேர்ந்த
## தீராத தலைவலிக்கு புகை.

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, சித்தரத்தை, கழற்சிப்பருப்பு, சீரகம், லிங்கம் இவைகள் சமனிடையெடுத்து எருக்கம் பால்விட்டு மைபோல் அரைத்து சீலையில் தடவி திரியாகத்திரித்து உலர்த்தி யெடுத்து ஒரு முனையைத் தீயிற்காட்டி அந்த புகைபிடிக்கவும் இந்த புகையை இரவில் போஜனஞ்செய்து படுக்கும்போது தேக இடமிருந்து 1 அல்லது 2,3, நிமிஷம் வரையில் நாசியில் புகை பிடித்துவிட்டு பிறகு நித்திரை செய்யவேண்டியது இத்துடன் மறுதினம் இரவில் படுக்கும்போது பிடிக்கவேண்டியது இப்படி இரண்டு 3 நாள் பிடித்தால் தீ



ராத தலைபாரம் பிரமெ இதுகள்தீரும் தேகாபதார்த்தம் ஆகாது சம்போகம் ஆகாது வேறுபத்தியமில்லை.

மூலிகைமர்மம் 38-வது சயிட்டில் சொல்லிய
## சர்வகுட்டுக்கும்,
## கூழ்ப்பாண்டலேகியம்.

இரண்டுபடி பசும்பாலில் இருபது பலம் சீனிபோட்டுக் கரைத்துப் பாகுசெய்து அதில் பெரும்பூசனிக்காயை மேற்றோல் சீவி நறுக்கி உலர்த்தி இடித்து வடிகட்டின பொடி படி 1, கோஷ்டம், லவங்கம், கஸ்தூரிமஞ்சள், இந்துப்பு, திப்பலி, மதூரம், ஜாதிபத்திரி, திரிகடுகு, வகைக்குப் பலம் அரைக்கால் சூரணித்து யாவுங்கலந்து தாவி அரைப்படி நெய்விட்டுக்கிண்டி மெழுகுபதத்திலிறக்கி வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் சாப்பிடவும் வரட்சி எலும்புருக்கி, சிரங்கு, நீர்கடுப்பு, கல்லடைப்பு, வெட்டைதீரும் தேகம் குளிர்ச்சியடையும் கைகண்டது.

## சர்வகுடு, தேகஊரல், நமை முதலியதற்கு
## சாம்நாத எண்ணை.

சித்தாமணக்கெண்ணை சேர் 1, எலுமிச்சம்பழச்சார் சேர் 1, பூத்திப்பட்டை பலம் 1 கழச்சிப்பருப்பு 3 இவைகளை அரைத்து யெண்ணெயிற் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி யிறக்கிக் கொண்டு இந்த யெண்ணெயினால் பேதிக்குச் சாப்பிட்டுவிட்டு மறுநாள் முதல் கொஞ்சங் கொஞ்சமாய் 10 - நாள் சாப்பிட்டுக் கொண்டு வந்தால் ஊரல் நமை குடு சொஸ்தமாகும் இச்சாபத்தியம் இராஜவயித்திய சிந்தாமணி முறை.

## சகலவாய்வும் கண்டித்து குளிர்ச்சியுண்டாக
## அமிர்தாதிச் சூரணம்.

ஏலம் } மஞ்சி[illegible]
லவுங்கம் } [illegible]

| | |
|---|---|
| அதிமதுரம் | திப்பிலிமூலம் |
| நற்சீரகம் | ஜாதிக்காய் |
| கருஞ்சீரகம் | சொம்பு |
| மகரப்பூ | வசுவாசி |
| குராசாணிஓமம் | சித்தரத்தை |
| வால்மிளகு | சித்திரமூலம் |
| திப்பிலி | கில்லாதை |
| வாய்விளங்கம் | கிலவங்கப்பட்டை |
| ஜடாமாஞ்சி | குங்குமப்பூ |

இவைகள் வகைக்குச் சமனிடை யெடுத்து யிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து இதற்குச் சரியிடை சீனிகூட்டி வேளைக்குத் திருகடிப்பிரமாணம் சாப்பிட்டு கொஞ்சம் வெந்நீர் குடிக்கவும் இப்படி மண்டலம் கொள்ளவும் இவ்விதம் கொண்டால் கை கால் உளைச்சல் உள்ளுருக்கி வெளுப்புருக்கி பிரமியம் கரப்பான் மூலம் வாதம் பித்தம் வைத்தியவாய்வு முதலிய சகலவாய்வும் தீர்ந்து நல்லபசி தீபனமுண்டாகும் தேக குளிர்ச்சி யுண்டாகும் இதற்கு இச்சாபத்தியம்.

## புழுவெட்டினால் மயிர் உதிர்வதற்கு மருந்து

எரித்தவெள்ளைகாரம் 1-விராகனிடையை வெண்கலத்தட்டில் வைத்து அதின்மேல் காசனுக்கண்ணிச்சார் விட்டு யிரும்பினால் 3-நாழிகை இழைத்து பிறகு வெண்ணெய்சேர்த்து சங்கினால் 3-நாழிகை அரைத்து வழித்து டப்பியில் வைத்துக்கொள்ளவும் புழுவெட்டினால் மயிர் உதிரும் யிடத்தில் இந்த மையை 5-நாள் தடவினால் மறுபடியும் மயிர் முளைக்கும்.

## விரைவீக்கத்திற்கு மெழுகு,

தெச்சக்காய்பருப்பு வெள்ளைகுன்றிமணி மொட்டைசொத்தான் வெருக்கம்வேர் காட்டுக்கொள்ளு இவைகள் சமனிடைசேர்த்து கல்லுரலில்போட்டு யிடித்து பிறகு கல்வத்தில் போட்டு கொண்டு ஆமணக்கெண்ணெய்விட்டு மெழுகுபோல் அரைத்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஒருவேளைக்கு சாப்பிடவும் விரைவீக்கம் அண்டவாய்வு தீரும் பத்தியம் உப்பு தள்ளுபடி வீக்கம் அ



திகமாயிருந்தால் ஒட்டைலத்தி தெச்சக்காயிலே இரண்டையும் வருத்திடித்து விரைக்கு ஒத்திடம் கொடுத்தால் அனுகூலமாகும்.

## வாந்திபேதிக்கு மாத்திரை.

மிளகு பெருங்காயம் அபினி (காலேவீசம் பலம்) இவைகளைச்சேர்த்து மைபோலரைத்து (12) மாத்திரைகளாகச் செய்துக்கொண்டு அரைமணிக் கொருதரம் வாந்திபேதி நிற்கிற வரையில் கொடுக்கவேண்டியது (7) முதல் (14) வயதுள்ளவர்களுக்கு பாதிமாத்திரையாகக் கொடுக்கவேண்டியது இந்த மாத்திரை வங்காளதேசத்தில் மிகவும் அனுபோகமானதாக டாக்டர் ஜெகநாதநாயகரால் சொல்லப்பட்டது.

## இரத்த அதிசாரத்திர்க்கு.

பெருமரப்பட்டை பலம் 1 மாதுளைச்சாறு வாழைப்பூச்சாறு தென்னம்பூச்சாறு வகைக்கு வீசம்படி இந்த சாற்றால் மேற்படி மருந்தை அரைத்து ஒன்றாய்க்கலக்கி 5-நாள் உட்கொண்டால் இரத்த அதிசாரம் பேதி தீரும்.

## சேதுபண்டிதர் தாம்பிரமாத்திரை,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கு | விராகனிடை | 6 | தாளகம் | விராகனிடை | 5 |
| தாம்பிர அறுப்பொடி | ,, | 12 | வெங்காரம் | ,, | 6 |
| சுக்கு | ,, | 1 | கோஷ்டம் | ,, | 5 |
| திப்பிலி | ,, | 10 | இந்துப்பு | ,, | 5 |
| அதிமதுரம் | ,, | 12 | | | |

இவையிடித்து வஸ்திரகாயம் செய்து பழச்சார் விட்டரைத்து அந்த மருந்தை செப்புப்பாத்திரத்தில் தடவிவைத்து மறுநாள் வழித்தெடுத்து முன்போல் அரைத்து மேற்படி பாத்திரத்தில் தடவிவைத்து மறுபடியும் வழித்தரைத்து தடவிவைக்கவும் இப்படி 21 நாள்செய்து பிறகு மிளகுபோல் மாத்திரைசெய்துவைத்துக்கொண்டு தண்ணியில் யிழைத்து கண்ணில் தடவினால் நாய்ப்பசவளர்ச்சி, நீர்முட்டல், காசப்படலம், அமரம், திமிரம், இவை சொஸ்தமாகும்.

—o—

உ

சிவராமஜெயம்.

# பற்பசிந்தூரவகுப்பு.

முன் சொல்லிய லேகியங்களுடன் சேர்க்கவேண்டிய செந்தூரங்களும் அத்துடன் சில பற்பங்களும் கூறப்படுகிறது.

## தங்கபற்பம்.

தங்கரேக்கு ஒருவிராகனிடை கொண்டுவந்து சிறுபொடியாகக்கத்தரித்து கலுவத்திலிட்டு சித்தவுண்டம்போல் இரண்டு விராகனிடை பொடித்துப்போட்டு முள்ளுக்கீரைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து மூசையிலிட்டு மேலோடுமூடி சீலைசெய்து காய்ந்தபிறகு உலையிலிட்டு மூசைபழுக்கும்படி 3 - விசை ஊதி அப்படியே உலையுடன் விட்டு மருநாள் வரையிலும் ஆறிய பிறகு யெடுத்து சீசாவில்போட்டு வைத்துக்கொள்ளவும் பூரணாதி முதலிய லேகியங்களில் சம்பந்தப்படுத்தி அருந்தி வந்தால் தேகம் தங்கநிறமாகும் இச்சாபத்தியம் நல்ல பசியும் தாதுபுஷ்டியும் உண்டாகும்.

## வெள்ளி பற்பம்.

மேற்படி தங்கபற்பம் செய்யும் பாகத்தைப்போலவே வெள்ளியையும் செய்து எடுத்துப்பார்க்கவும் கம்மலாயிருந்தால் அண்டத்தின் வெள்ளைக்கருவாலரைத்து வில்லைதட்டி 50-வரட்டியில் புடம்போட்டு மருதினம் யெடுத்துக்கொள்ளவும் திருகடுகு திரிபலாதி சமன்கொண்டு சூரணித்து ஒரு விராகனிடை சூரணத்திற்கு இரண்டரிசி பற்பம் சேர்த்து ஆறுநெல்லா நெய்விட்டுக்குழைத்து சாப்பிடவும் சகலவாய்வும் கண்டிக்கும் தேகமிருகும் நல்ல பலமுண்டாகும் இந்த பற்பத்தை உயர்ந்த லேகியங்களுடனும் சேர்த்து சாப்பிடலாம்.



## பவளச்சுன்னம்.

பவளத்தைப் பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மருநாள் கழுகி உலர்த்திக் கலசத்திலிட்டு எருக்கம்பால் மிதக்கவிட்டு ரவியில் வைக்க மெழுகாகும் உடனே எடுத்து ஒரு ஓட்டில் எருக்கம் பழுப்பு பரப்பி அதின்மேல் பவளத்தைவைத்து மேலும் எருக்கம் பழுப்பு பரப்பி ஓடுமூடி சீலைசெய்து முழப்புடம்போடக் கடுங்காரச்சுன்னமாகும் வெற்றிலையில் தடவிப்போட்டுக் கொள்ளலாம் சயரோகிகள் தாம்பூலத்தில் தடவிப்போட்டுவர நிவர்த்தி [illegible] ஆகும்.

## அபிரேக்கு செந்தூரம்.

கிருஷ்ண அபிரேக்கு பலம் 1, அன்னபேதி பலம் 1, வெடியுப்பு பலம் 1, எலுமிச்சம் பழச்சார்விட்டு 3 நாள் அரைத்து வில்லைதட்டி கலசத்தில் வைத்துமூடிச் சீலை வலுவாய்ச்செய்து 20-வரட்டியில் புடமிடவும் சகலவியாதிக்கும் ஆகும்.

முன்கூறிய லேகியத்திற்கு சேரவேண்டிய கணக்குப்படிக் கலந்து சாப்பிடவும்.

## அயச்செந்தூரம்.

அயம்ராவினபொடி 3 நாள் பழச்சாற்றில் ஊரவைத்து நாலாநாள் ஜலத்தில் அலம்பிவிட்டு குப்பைமேனி ரசம்விட்டு அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து 25-வரட்டியில் புடம்போடவும் மறுபடியும் பழச்சாற்றில் ஒரு புடம் கரசனாங்கண்ணிச்சாற்றில் ஒரு புடம் குப்பைமேனிச்சாற்றில் ஒருபுடம் மறுபடியும் குப்பைமேனிச்சாற்றில் ஒருபுடம் இந்த ஐந்து புடமும்போட்டு யெடுத்து வைத்துக்கொள்ளவும் இளைத்த தேகங்களுக்கும் சில லேகியங்களிலும் கலந்துக்கொடுக்கலாம் இளைத்தவன் யிரும்பைத்தின்னவேணுமென்ற பழமொழியுண்டு.

## அன்னபேதிசிந்தூரம்.

2-பலம் அன்னபேதியை கல்வத்திலிட்டு பழச்சாற்றை மிதக்கவிட்டு மேலோடுமூடி சீலைசெய்து முழப்புடத்திலிட்டு ஆறிய பிறகு கலுவத்திலிட்டு சீசாவில் வைத்துக்கொள்ளவும் சகலசுரத்திற்கும் தேன் முலைப்பாலில் கொடுக்கலாம் இச்சாபத்தியம்.

## வெள்வங்க பற்பம்.

ஒருபலம் வெள்வங்கத்தை உருக்கி விளக்கெண்ணெயில் சாய்க்க சுத்தியாம் அதன்பிறகு அதை ரசசிரம்போல் தகட்டித்து பொடியாகக் கத்தரித்து பூரசம்வேறு கனமாகக்கொண்டுவந்து அந்தவேரை ஒருபக்கம் அரைத்து மேற்படி பொடியைப்போட்டு துளைதெரியாமல் அதே வேரினால் தமர்போட்டு 2, 3, மண்சீலை செய்து கெஜபுடம்போட்டு மூன்றாவது நாள் யெடுத்து சீலையை கட்டி உடைத்துப்பார்க்க பற்பமாயிருக்கும் அதை யெடுத்து சீசாவில்போட்டு வைத்துக்கொள்ளவும்.

### இதற்கனுபானம்.

| | |
|---|---|
| சுக்கு | தாணிக்காய் |
| திப்பிலி | மாசிக்காய் |
| மிளகு | நெல்லிக்காய் |

இவையாறும் சமனிடை கொண்டு யிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து ஒரு வராகனிடை சூரணத்திற்கு இரண்டு குன்றிமணியிடை மேற்படி பஸ்பம் வைத்து அரை ரூபாயிடை பசுநெய்விட்டுக் குழைத்துச்சாப்பிடவும் இப்படி 7-நாள் அல்லது 10-நாள் சாப்பிடவும் சூலி வெள்ளை பிரமேகம் வாய்வு இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

## கருமேகத்திற்கு.

கருமேகத்திற்கு மேற்படி பஸ்பத்தை இரண்டு குன்றி எடுத்து அரை ரூபாயிடை பசும் வெண்ணெயிற் குழைத்து சாப்பிடவும் இப்படி இருபது நாள் சாப்பிட்டு சரியான பத்திய மிருக்கில் கருமேகம் தீரும்.

கருமேகத்திற்கு

## கெந்தக பற்பம்.

ஒருபலம் நெல்லிக்காய் கெந்தகம் கொண்டுவந்து மருதம்பட்டை வேண்டியது கொண்டுவந்து கொளுத்தி சாம்பலாக்கி ஒருபடி ஜலம் பிடிக்கும் மண்கலத்தில் அரைக்குடுவை மேற்படி



சாம்பல் கொட்டி நன்றாய் அழுத்தி கெந்தகத்தை நடுவில் வைத்து மேலும் சாம்பல் போட்டு அழுத்தமாக அழுத்தி உடுமேட்டும் சாம்பல் அழுத்தி வாய்புரத்திற்கு ஓடுமூடி அடுப்பேற்றித் தீயெரிக்கவும் கலயத்தின் உதட்டைத் தொட்டால் சூடானது கை தாங்காத சமயமட்டில் யெரித்து யிரக்கிவைத்து அப்படியே ஆறியபிறகு சாம்பலை நீக்கி கெந்தகத்தை யெடுத்து குப்பைமேனியிலையை அரைத்து தேங்காய்ப்பிரமாண முத்தைக்குள் கெந்தியைவைத்து 3 சீலைசெய்து முக்கால்கெஜபுடமிட்டு அப்படியே ஆறிய பிறகு யெடுக்க பற்பமாகும் நெய்யில் தேனில் வெண்ணெயில் யெதிலாவது அரிசியிடை பற்பம்வைத்துக் கொடுக்கவும் இப்படி அரை மண்டலம் கொடுக்க கருமேகம் தேகஊரல் இவை தீரும் இச்சாபத்தியம்.

### இதற்கனுபானம்.

முன் சொல்லியபடி அரைமண்டலம் மருந்து சாப்பிட்டு இச்சாபத்தியமிருந்த பிறகு ஸ்நானம் செய்துவிட்டு அகத்திக்கீரைவேர் யிடித்து தூளாக்கி ஒரு பிடி யெடுத்து படி ஜலத்தில் போட்டு கால்படி கியாழமாகக் காய்ச்சி யிறக்கி இருவேளையாக பாகித்துச் சாப்பிடவும் இப்படி 20-நாள் சாப்பிட்டால் மேகஊறல் கருமேகம் தீரும் இந்த யிருபது நாளைக்குள் தலை முழுகக்கூடாது உடம்புமட்டில் குளிக்கலாம் இச்சாபத்தியம்.

## பவளபற்பம்.

ஒருபலம் பவளத்தை ஒரு நாள் தண்ணீரில் ஊறவைத்துக் கழுவிப்போட்டு தேள்கொடுக்கிலையை யரைத்து அதற்குள் பை பவளத்தை வைத்து மூடி எழுசீலைசெய்து காயவைத்து நாலெருவில் புடம்போட்டெடுத்துப் பீங்கானிலிட்டு அதில் ஆவின்பால் விட்டு ரவியிற் காயவைத்து அப்பாலதை ஆலம்பழுப்பிற் கட்டி நெற்குதிரில் 3 நாள் புதைத்தெடுத்து அனுபானங்களிலிட்டு க்ஷயம் நீர் மந்தாரகாசம் இரங்கு சொறி முதலான மேற் காட்டிய ரோகங்கள் தீரும்.

## கல்நார்பற்பம்.

கல்நாரைச் சிறுதுண்டாய்ப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழுமேலும் கோங்கிலவப்பட்டையை இடித்துப்போட்டு அப்

பால் மேற்படி பட்டை கஷாயம் விட்டரைத்து 3 புடம்போடத் தவளம்போலநீறும் தேனிலாவது நாதுனி லேகியத்திலாவது கொள்ள சிலேத்மரோகம் 96-ம் நீங்கும் மேக காங்கைதீரும் மேற்படி பற்பத்தைப் பல்விளக்கத் தந்தம் இறுகும்.

## மேற்படி பற்பம்.

கல்நார சிறுதுண்டுகளாய் வெட்டி ஓட்டில்வைத்து அதற்குக் கீழும் மேலும் எருக்கம்வேரை யிடித்துத் தூளைப்போட்டு மூடி கெஜபுடம்போட்டு மேற்படி பாலிலரைத்து 3 புடம் போட்டு அனுபானத்திலிட க்ஷயரோகங்கள் தீரும் தந்தம் இறுகும்.

## சிங்கிபற்பம்.

சிங்கியென்னும் மான்கொம்பு 5-பலம் யெடுத்து சிறுதுண்டுகளாய் நறுக்கிக் குப்பைமேனிச் சாற்றில் ஊறவைத்து மேற்படி யிலையை யரைத்துக் கவசஞ்செய்து காயவைத்து ஓட்டில் பரத்திவைத்து மேலோடு மூடிச் சந்துவாய்ச்சீலைமண்செய்து ஐம்பதெருவிற் புடம்போட்டெடுத்து ஆவின்பால் விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முன்போற் புடம்போட பற்பமாகும் அனுபானங்களில்மேற்படி பற்பத்துடன் பவளபற்பம் சேர்த்து கொடுக்க நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு நீரெரிவு சயம் சுவாச இருமல் உஷ்ணம் மேக காங்கைதீரும்.

## சிலாசித்து பற்பம்.

கரடியில்லாத கற்பூரசிலாசித்து 5-பலம் யெடுத்து சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு நாள் முழுதும் நல்ல ஜலத்தில் ஊறவைத்து மறுநாள் காலையிலெடுத்து அலம்பி இந்தப்படி ஐந்து நாள் அலம்பி யெடுத்துக்கொண்டு கிருமிசெருப்படைச் சாற்றாலாட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடுமூடி சீலைமண்செய்து 50 எருவில் புடம்போட்டு ஆறினபின் யெடுத்[illegible] சிறு சாற்றாலாட்டி லேசாக வில்லைதட்டி புடம்போடவும் இப்ப[illegible] 3-விசை புடம்போட்டெடுத்து ஜீசாவில் வைத்துக்கொண்டு பித்த யெரிவு பித்தவெட்டை நீர்கடுப்பு இவைகட்கு பசும்வெண்ணையில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.



## வெண்காரபற்பம்.

ஒருகுடுவையில் மேற்படி சிலாசித்து பற்பம் கால்நாழிட்டு அதின்மேல் சுத்திசெய்த வெண்காரமிட்டு அதற்கு மேலும் சிலாசித்துயிட்டு ஓடுமூடி சீலைமண்செய்து உலர்த்தி 10-யெருவில் புடம்போடவும் நீர்கட்டு கருக்கு அனல் இவைகட்கு வெண்ணெயில் பணவிடை கொடுக்கவும் நீராவிட்டால் முள்ளங்கி யிடித்த சாற்றில் இரண்டுபணவிடை கொடுக்க உடனே நீர்கட்டு உடையும் இச்சாபத்தியம்.

## இதின் உபயோகம்.

மேற் கூறியபடி அந்தந்த பற்பத்தை தனித்தனியுபயோகப்படுத்திக்கொள்ளலாம் அல்லது சிலாசித்து பற்பம் சிங்கிபற்பம் வெண்காரபற்பம், பவளபற்பம், இவையாவும் சமனிடைகூட்டி சீசாவில் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு பணவிடை யெடுத்து பசும் வெண்ணெயில் இழைத்துச் சாப்பிடவும் இப்படி இருவேளையும் 3-நாள் தின்றால் சகல உஷ்ணமும் தீரும் நீர்க்கட்டு நீர்க்கிரிச்சினம் வாய்வு உடம்பெரிவு யாவும் தீரும் இரோகபிரமாணத்திற்குத் தக்கபடி 3-நாள் 5-நாள் 7-நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

## கஸ்தூரி மெழுகு,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கஸ்தூரி | விராகனிடை | க | சாதிபத்திரி | விராகனிடை | வ |
| பச்சைகற்பூரம் | ,, | உ | பூநீக்கியலவங்கம் | ,, | ச |
| கோரோசனை | ,, | ய | வால்மிளகு | ,, | ௪ |
| குங்குமப்பூ | ,, | ச | ஏலக்காயரிசி | ,, | அ |
| புனுகு. | ,, | வ | சிறுலவங்கப்பட்டை | | அ |

இதில் சூரணம் செய்பவைகளைச் சூரணித்து யாவுங்கூட்டிக் கல்வத்திலிட்டு கம்மாறுவெற்றிலைச்சாற்றில் ஒரு ஜாமம் அரைத்தும் கற்பூரவல்லிச்சாற்றில் ஒரு ஜாமம் தூதுவேளைச்சாற்றில் ஒரு ஜாமம் மாட்டி நீக்கிய இஞ்சிச்சாற்றில் ஒரு ஜாமம் மிளகுக்கியாழத்தில் ஒருஜாமம் சித்திரமூலம்வேர் கியாழத்தில் ஒரு ஜாமம் மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஒருஜாமம் இப்படி தனித்தனியாய் ஒவ்வொரு ஜாமம் அரைத்து கல்வத்துடன் நிழ

யில் உலர்த்த பிரகு சுபந்தேனினும் மெழுகுபதமாய் அரைத்து வழித்து பத்திரம் பண்ணிக்கொள்ளவும் பற்றுப்பிரமாணம் யெடுத்து தேனில் குவட்டிக் கொடுக்கவும் இப்படி இருவேளையும் 3 நாள் 5-நாள் கொடுக்கவும் ஜன்னி, சீதளம், சுரம், கபரோகம், உப்பிஷம், மாந்தம், மூசுவாதசன்னி, சூதகஜன்னி, இருமல் மாரடைப்பு, நடுக்குவாதம் இவை தீரும் தேக திடமறிந்து நாள் அதிகரித்தும் குறைத்தும் கொடுக்கவேண்டியது இச்சாபத்தியம் இருக்கவேண்டும்.

அகஸ்தியர் அருளிய

## சண்டமாருத செந்தூரம்.

### நொண்டிச்சிந்து.

பரிதிமதியுதிக்க—திருப்
பாற்கடல்சூழுமிப்புவிதனிலே
பெருமைமிகப்பெருகும்—மானிடர்க்கு
பொக்குவியாதியின் கக்குவிஷத்தை
அறிந்தேகுருமுனிவர்—மனது
அன்புடன்மானிடர்தெளிப்படவே
இரிக்கியசோரவுற்றம்—சண்ட
மாருதமென்றொருசெந்தூரம்
சொன்னார்வைகுசுருக்கு—பெரும்
தொல்லைகளாபியஅல்லலில்லே
முன்னும்மூலிகைச்சார்—நல்ல
முத்திடும்பட்டையியாறுமது
தன்னுலைறையாமல்—ரவியில்
தாக்கிடும்வெய்யிலிலவையாமல்
தானுனரட்டிவிட்டு—மூடி
சுந்துவாய்சிலைகள்செய்யாமல்
புடம்போட்டுமாயாமல்—கள்ளன்
பொக்கிஷக்காலடிகண்டதுபோல்



திடம்பெற்றசெந்தூரம்—அதி
சீக்கிரஞ்செய்திடும்தொழில்முறைகேள்
பூரத்திசையிடையாம்—அதில்
பூட்டிடுலிங்கந்திக்கிடையாம்
வீரம்வினையிடையாம்—இன்னம்
வேட்டியகெந்தியும்வீரனிடை
செந்தூரம்ஒரிடையாம்—இதில்
சேர்ந்தசரக்கெலாம்சுத்திசெய்து
சந்தோஷமாகவேதான்—அம்மி
தன்னிலிருஜாமம்தானரைத்தால்
வர்ன்னம்பவழநிறம்—அதில்
வந்திடுமுந்தன்மனங்குளிர
சொர்ன்னமிகுந்திடோ—அதி
சோக்கிதுசொக்கிதுசொல்கிறேன்கேள்
திறமாகும்குப்பியதனில்—யாவும்
இரட்டியருகோணந்தன்னில்வைத்து
ஏகத்தியானம்செய்து—புடடினில்
யேற்றும்பணவிடைசெந்தூரம்
நடுவினில்வைத்தருட்டி—மடி
நாவில்படாமல்ஙூறுநிட்டவே
படு நாவிஷியாதியெல்லாம்—நினைத்தால்
பரக்குமிதன்பேர்சொல்லிடவே
ஜன்னிபதிமூன்றும்—கர்மம்
தாக்கிடும்குஷ்டம்யெட்டுவகை
பின்னேழுதோஷமும்போம்—சொன்ன
பீலிகையெட்டும்கோதறப்போம்
வாதங்களெண்பதுவும்—கிட்டி
வந்திடும்பட்சம்தனுர்வாதம்
ஓதும்விஷரவாதம்—வலியும்
உத்தமடக்குநடுக்கலுடன்
அசதியும்கனுவாதம்—புண்ணு
அணைகிரந்திகுலையுடன்

கண்டத்தின்மாலையுடன்—உளவுங்
கைதனில்வரால்கருமேகம்
வண்டுகடி களும்போம்—கொடிய
வல்லபல்விஷத்தொல்லையும்போம்
சயித்தியந்தானேழும்—கொடி
தாகியயோனிபுத்துவிடும்
வயித்தியஞ்செய்கிறவன்—வலு
வாகியவியாதிக்கனுபானம்
தெரியாமல்செய்தாக்கால்—அவனை
தொடரும்வியாதியினென்சொல்வேன்
குரையரவனுபானம்—திடமாய்
கூர்ந்திடில்சந்தோடமாய்விடுமே. (கந்தினத்)

## இதற்கு விபரம்.

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை | 4 |
| லிங்கம் | ,, | 8 |
| வீரம் | ,, | 2 |
| நெல்லிக்காய்கெந்தி | | 2 |
| ரசச்செந்தூரம் | ,, | 2 |

இவைகளை இங்கனம் கூறிய இடைபோல் கூட்டியரைத் தால் மாத்திரம் வாய்பிடிக்காது குழந்தைகள் முதல் சகலருக்கும் கொடுக்கலாம் மேற்படி இடைபோல் போட்டு 2 ஜாமம்அரைத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் சகலவியாதிக்கும் உபயோகப்படுத்தலாம் கைகண்டது இச்சாபத்தியம்.

—∗∗∗—



## அகஸ்தியர் மூலிகை வியளம்.

சம்புடனேவேர்விரையை உண்பவர்தன்கிராணிமூலம்
தெம்புடனேதீருமென்று கும்பமுனிதானுரைத்தார்
சித்திரபுரத்துமூலம் மெத்தஆவலாய்குறைந்து
சுத்தாகிலும்கியாழம் வைத்தாகிலும்குடிக்கில்
பித்தமொடுசித்தமும் பெருத்ததொருமேல்வயிறும்
அத்திசாரதாகமுடன் இத்தனையேயகிலும்
வில்வாகைவேருரைக்கில் மலைபோலேனாலுவய
றலையாகுலையுமது நில்லாது யெகும்கிசம்
தும்பையதுதான்குடிக்கில் அம்பலத்துவேர்கொடியை
பம்பரம்போலேகுழைத்து தின்பவர்வயற்றுவலிபோம்
கரிசலாங்கண்ணிமதம் பிரியாவசியமது
கரியாமிளகோடெண்ணெ தரியாதுபாண்டிருமல்
ஆவப்பிரமேகமேயகற்றுமே.
சங்கிலைவேரப்பொடியை ஊங்கைத்தில்மேகமெல்லாம்
இங்கிதமாயேகுமென்று மங்கைபாகர்தானுரைத்தார்
தழுதாழைவேர்சமூலம் வழுவாமலேகொணர்ந்து
நழுவாமலேயரைத்து விழுதோடவேயுணர்வை
சித்தமதில்வாதமெல்லாம் மெத்தவதில்சூலைகளும்
சத்தில்லாதோடுமித மத்தவிஷச்சூனியமும்
கொத்தானும்வேர்சமூலம் மெத்தாகவேயெடுத்து
விஸ்தாரமாயரைத்து மெத்தஆவலாயுணர்வை
கட்டுகள்வலத்துசிதம் விட்டுவிடுமேயிடுப்பில்
குட்டுவலித்தானுமது திட்டமுடன்செய்யகலும்
முக்காளையின்வேரை சுக்காகவேயுலர்த்தி
திக்காமலேயிடித்து விக்காமலேயருந்த
வயறுதும்பேதிகளும் சயரூபமாந்தாரமும்
தீவாகவேயடங்கும் நயமாகுங்காயசித்தி
ஆதண்டைத்தலைவலி யகற்றுமே.

கொல்லன்கோவைக்கிழங்கை நல்லநூலின்பாலிலுமன்ன
மெள்ளவேவிஷங்களது சில்லடையில்லாயமோடும்
முத்துமெனும்சூலைமதில் வெத்தவரிற்சேடனிற்குந்த
சந்தமொடுநாயமுடன் நிற்குப்புன்னீல்லாதுசொன்னேன்
இன்பூநல்கேர்சூரலும் யின்பாகவேகொணர்ந்து
தம்பிரானைவெண்ணெய்ந்து வென்பதாகவேயுணர்வை
கூத்திருமல்கோவைசலம் காத்தமொடுசெயகலும்
ஆத்திவிடுமோகவாசம் பார்த்துபதமாயுணர்வை
சிவனார்தன்வேம்புநன்ன கவநாதப்பேர்வழுத்தி
உவமாக்கேயுணர்ஙல் நவமாருங்காயசித்தி
பங்கயற்செய்கீரையில் சங்காரிநாழுமிசைநாங்
மங்கையர்கள்சொன்னபடி சிங்காரமாயுரைத்த
வாடிநோவடை தோஷமகற்றுமே.
கொல்லன்பகவாளியேவா மெல்லக்கெல்லியேகொணர்ந்து
நல்லக்குருநவைப்ரிசி மெள்ளயிடித்தேயதிப்பில்
பிட்டாகவேயவித்து மட்டாகவேயுறந்த
கெட்டோர்கிட்டோமென்று விட்டோடும்மேல்வலிப்பு
பன்னூற்றூலிலைவிஸ் பஞ்சூரிவேசங்கை
மின்னூர்வேகொணர்ந்து மின்றூரிவ்யாகலோர்
சேங்கைச்சமரிலயித்தங் நாற்றுடனேயசத்தி
வேகமானவெப்புதோஷம் போகவிரைவிற்றிரும்
கூளத்திநெற்கள்ளியிலே யினாதசெற்பவி
நாராயணோடுமென்று காரான்திரிநாதருரை
குப்பையெனுமேனிதன்னில் உப்பிஷங்கள்போக்கிவிடும்
அப்பையாதிக்கோவைசலம் துப்புறவாய்காளிருக்கும்
செப்பிய நகத்துகத்தைப்பாருமே.
நூவாரிக்கோரோசம் வேகிவிடுமேகரப்பான்
கூவிளையில்வெப்பெரிப்பு நீவினைகளைப்புவிடும்
கொடிவேலியானதொரு கொடியானமூலிகையில்
நூழ்பானநுஷ்டகுன்மம் பொடியாகுமேகரப்பி



செக்குன்றிநாமமதை முக்கியமுடனுரைக்க
கக்கிஷத்தலேயின்சேவுமத்தினைத்திலோடிவிடும்
தாதுவைவிளையானகற்பம் வேதமொளியானோபித்தம்
வாதமொடுசேலோசத்தி தாகமொடுதொதுபுஷ்டி
சம்பிரமுடனேகவு தும்பையெனுமூலியது
வம்புபடுரத்தமூலம் நம்பனமதாகுஞ்சொன்னேன்
உள்ளபடியேயருகு வெள்ளையதின்வேர்கொணர்ந்து
மெள்ளதினமேயருந்தச் சன்னேபிரமியந்தீரும்
ஆடுதின்றுப்பாளைப் புழுவாற்றுமே
வெள்ளையெனுஞ்சாரணையில் கள்ளிவிளிகோயகலும்
முள்ளியின்கருக்குவைக்கு பல்லின் வலிநாசகலும்
கற்பூரவள்ளியிலே வைப்பாகவுன்பவற்கு
வெப்பாரில்குத்தகலும் இப்பாரில்பான்டுவுக்கு
சூரியன்றன்காந்திதனிற் சேருஞ்வெப்புச்சாந்தியதாம்
மீருமதிகாந்திதனில் மேருகுளிர்ப்போக்குவிடும்
கொட்டையெனுமக்கரங்கை நிட்டமுடனேயுதக
மெட்டினில்வாழ்த்தருந்த வெட்டையகலுஞ்சொன்னேன்
ஆகாசக்கெருடன்விஷ மாற்றுமே.
கொம்பக்குவேரவேம்பு பைப்புன [illegible] போவாலும்
தென்பதுறும்காயசித்தி இன்பமுடனேயருந்த
பாசிதனில்கீர்ப்பிரிச்சல் தோஷமொடுகுலையறும்
ஆசைக்குந்துப்பாலேதனில் மாசமிலிடுமேயரவை
வைத்திவிளுதுவயிறுவண் ணத்திருமென்றுமிக
சின்னியிலேச்சிறுசெடு தன்னில்வாரணமகலும்
கோளியாவாரைதனில் நீள்சளிகளைகளொடு
களைவயறாதல்வெப்பு கோலைமாந்தகாசமறும்
சுண்டையதின்வேர்பொடியின் மண்டையதின்நீரகற்றும்
என்றுசொல்லியகடிகள் வண்டுகொல்லியாலோடும்
பாதிரிவேரசேகம் சாத்திரியமான்கொளிர்
நாதாருள்காறுமென்று ஓதுமுனிவர்சொல்
ஆற்றாவிஷ்டகுன்ம மாற்றுமே.

விச்சுவெச்சுமூலிகையில் பச்சைநாவிபாஷாணங்காந்து
கொச்சையுள்ளமாதருக்கு கச்சகலவாசையுண்டு
பூரணமானதொரு தோராதகுளிகைகள்
ஆராதாம்மதனும் மீராதநதுங்களுமே
வல்லானை வென்றேமிக சொல்லாதநற்கலைகள்
வெல்லாதவாதமொன்றும் பொல்லாதரோகநலும்
எட்டியுடனேயணைமயில் குஷ்டம்பறிவொட்டுமேரும்
திட்டமுடனேகிகும் அஷ்டகுன்மமெய்யசலும்
நீலியுந்தவோரில்லைக் கோலியுற்றதந்நசகலம்
வேலியுத்தமேருந்தி யாசேயுற்றவாதமெல்லாம்
இலகோம்பிருத்சாங்கள் மலிலைம்பிலைமேஜன்னி
இலைவேம்பில்கட்டுவயர் தலைவேம்பிலுண்டகேகம்
குன்றுமுடனுரின்கொடியால் உண்டகேசுமேல்விரோதம்
செவ்விமுலைமாதர்வந்து கண்டுகொள்ளுவார்கள்நிதம்
அத்திமேவர்வியிர்கப்பை யாற்றுமே.
குன்னிதன்மேல்வுணர்வி கன்னியுடன்வேர்வைமெத்த
கன்னியகரோணிகமும் வின்னில்கண்டோடும்பிறு
பின்னைநீர்கட்டகனும் வேண்மையாதங்கமொடும்
சன்னையோடாமூலிமேல் மூலைரோய்கள்தானகனும்
[illegible] சகரமபோறும்
குட்டமுள்ளவர்க் குமட்டுமிருமல்வீசத்தி
பெர்ப்பிர்க்குறைச்சதை வாய்பார்க்கவேவுணர்வை
பொய்ப்பியிய்க்குவிலும் சாய்ப்பாகவோடிவிடும்
பங்கதனில்மூலிகையின் மங்குசெரிந்தேயங்களும்
பொங்கியண்டவாதசன்னி இங்கிதமாயேவிடும்
மூலிகைப்பிரயோகமே சகலருக்கும்
சகன்தனை யாருமே.

## பார்வதிபரணியம் என்னும்

### வைத்திய சிந்தாமணி

முற்றிற்று.